# பொருளடக்கம்


## 1 - 30 வரலாறு

■முக்கிய தினங்கள் ■உலக அமைப்புகள் – உடன்படிக்கைகள் மற்றும் ஒப்பந்தங்கள் ■பாதுகாப்பு, தேசிய பாதுகாப்பு மற்றும் பயங்கரவாதம் ■சிறந்த நபர்கள் ■விளையாட்டு ■புத்தகங்கள் மற்றும் எழுத்தாளர்கள் ■விருதுகள் மற்றும் கௌரவங்கள் ■கலாச்சாரம் ■சமீபத்திய வரலாற்று நகழ்வு ■இந்தியா மற்றும் அண்டை நாடுகள் ■நியமனங்கள்






## 31- 36 அரசியல் அறிவியல்

■இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை ■சமீபத்திய நீதிமன்ற தீர்ப்புகள் ■பொதுத் தேர்தலில் நடக்கும் பிரச்சனைகள் ■அரசியல் கட்சிகள் மற்றும் இந்திய அரசியல் அமைப்புகள் ■மத்திய அரசாங்கம் – பொதுநலம் சார்ந்த அரசுத் திட்டங்கள், அவற்றின் பயன்பாடுகள்






## 37- 40 புவியியல்

■சுற்றுச்சூழல் மற்றும் சுற்றுச்சூழல் பற்றிய கொள்கை




**41 - 46 பொருளாதாரம்**

- புதிய பொருளாதாரக் கொள்கை மற்றும் அரசுத்துறை






**47 - 52 அறிவியல்**

- அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கண்டுபிடிப்புகள்
- ஊடகம் மற்றும் தொலைத்தொடர்பு






**53 தினசரி தேசிய நிகழ்வு**






**68 சர்வதேச நிகழ்வு**






**73 தமிழ்நாடு**






**78 வினா–விடை**




# 1. வரலாறு





## 1.1 முக்கிய தினங்கள்

**ஆகஸ்ட் 26 - தேசிய பெண்கள் சமத்துவ தினம்**

(National Women's Equality Day)

**ஆகஸ்டு 29 - சர்வதேச அணு ஆயுத சோதனை எதிர்ப்பு தினம்**

- *அணுவை ஆக்கப் பூர்வமாக பயன்படுத்த வேண்டும் என்பதை வலியுறுத்தி, ஐ.நா., சார்பில், ஆகஸ்டு 29ல், சர்வதேச அணு ஆயுத சோதனை எதிர்ப்பு தினம் கடைப்பிடிக்கப்படுகிறது. 1996ல், அணு ஆயுத தடை ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது.*

ரஷ்யா முதலிடம்

- *உலகில் அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன், சீன, இந்தியா, பாகிஸ்தான், வடகொரியா, இஸ்ரேல் நாடுகள், அணு ஆயுத நாடுகள் எனக் கருதப்படுகின்றன. இதில், அணுகுண்டுகள் அதிகம் வைத்திருக்கும் நாடு ரஷ்யா, இரண்டாவது இடத்தில், அமெரிக்கா உள்ளது.*

**ஆகஸ்ட் 29 - தேசிய விளையாட்டு தினம்**

**ஆகஸ்ட் 30 - சர்வதேச காணாமல் போனோர் தினம்**

**செப்டம்பர் 2 - 21வது தேங்காய் தினம்** (World Cocount Day)

- *மையக்கருத்து :* "Coconut for family wellness"

**செப்டம்பர் 5 - தேசிய ஆசிரியர்கள் தினம்**

**செப்டம்பர் 5 - சர்வதேச தொண்டு தினம்**

**செப்டம்பர் முதலாவது சனிக்கிழமை - உலக கழுகுகள் தினம்**

- *உலக அளவில் கழுகுகளின் எண்ணிக்கை குறைந்து வருவதால், அவற்றை பாதுகாக்கும் வகையில் செப்டம்பர் முதலாவது சனிக்கிழமை கழுகுகள் தினமாக உலக நாடுகளால் கடைபிடிக்கப்படுகின்றது. உலகில் 23 வகையான கழுகுகளில் 14 வகை கழுகுகள் அழிந்து வரும் பட்டியலில் உள்ளன. இந்தியாவில் 7 வகை கழுகுகள் மட்டுமே காணப்படுகின்றன. வெண்முதுகு கழுகு, கருங்கழுத்து கழுகு, மஞ்சள்முக கழுகு, செந்தலை கழுகு ஆகிய 4 வகை கழுகுகள் தமிழகத்தில் காணப்படுகின்றன.*

### செப்டம்பர் 8 - சர்வதேச இலக்கிய தினம்

- *2019-ம் ஆண்டின் மையக்கருத்து :* "Literacy and Multilingualism" *1967ஆம் ஆண்டு முதல் கடைபிடிக்கப்படுகிறது.*

### செப்டம்பர் 10 - உலக தற்கொலை தடுப்பு விழிப்புணர்வு தினம்

### செப்டம்பர் 14 - ஹிந்தி திவாஸ் (Hindi Divas)

- *1953 ஆம் ஆண்டு முதல் ஹிந்தி திவாஸ் என்று அனுசரிக்கப்படுகிறது.*

### செப்டம்பர் 15 - சர்வதேச ஜனநாயக தினம்

### செப்டம்பர் 15 - பொறியாளர் தினம்

- *கட்டடப் பொறியாளர் எம்.விஸ்வேஸ்வரய்யா பிறந்த தினம் பொறியாளர் தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது.*

### செப்டம்பர் 16 - உலக ஓசோன் தினம்

- *சீரான இயற்கை சூழலை நிலை நிறுத்தும் வகையில், ஓசோன் படலத்தை பாதுகாப்பதன் அவசியத்தை வலியுறுத்தி ஆண்டுதோறும் செப்டம்பர் 16-ம் தேதி உலக ஓசோன் தினம் கடைபிடிக்கப்படுகிறது. 2019 ஆம் ஆண்டிற்கான மையக்கருத்து* '32 years and Healing'.
- *ஓசோன் படலத்தை சிதைக்கும் வாயுக்களின் தீமைகளை அறிந்து, அவற்றை கட்டுப்படுத்தும் முயற்சியை ஒவ்வொரு வரும் மேற்கொண்டால் 2030-ம் ஆண்டில் தமிழகத்தை உள்ளடக்கிய உலகின் வடதுருவம் முற்றிலும் சீரடையும். தென்துருவம் 2050-ம் ஆண்டில் இயல்பு நிலைக்கு வந்துவிடும் என சூழலியல் ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர்.*
- *உலக நாடுகள் கடந்த 10 ஆண்டுகளாக மேற்கொண்ட முயற்சியின் பலனாக 3 சதவீதம் அளவுக்கு ஓசோன் படலம் சீர்பெற்று வந்துள்ளது. கடந்த 1990-ம் ஆண்டில் இருந்து 20 ஆண்டுகளில் 135 பில்லியன் டன் கரியமில வாயுவுக்கு சமமான வாயுக்களின் வெளியேற்றம் தடுக்கப்பட்டுள்ளது.*
- *தென்துருவம் 2050-ம் ஆண்டிலும், பனிப்பிரதேசங்கள் 2060-ம் ஆண்டிலும், பழைய இயற்கை சார்ந்த நிலைக்கு வந்துவிடும் என அறிவியல் வல்லுநர்களும் சூழலியலாளர்களும் கணித்துள்ளனர்.*

### செப்டம்பர் 17 - சர்வதேச நோயாளிகள் பாதுகாப்பு தினம்

### (World Patient Safety Days)

- *கருப்பொருள் 2019 :* "Patient Safety: a global health priority" and the slogan is "Speak up for patient safety."

### செப்டம்பர் 18 - 10வது சர்வதேச மூங்கில் தினம் ($10^{th}$ World bamboo day )

- *கருப்பொருள் 2019 :* 'Bamboo For Sustainable Development Goals (SDG) of United Nations'.

### செப்டம்பர் 18 - சர்வதேச நீர் கண்காணிப்பு தினம் (World water monitoring day )

### உலக கடலோர தினம்

- *ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 3வது சனிக்கிழமை, உலக கடலோர தினமாக கடைபிடிக்கப்படுகிறது*
- *கடற்கரை பகுதிகளை தூய்மையாக வைத்திருப்பது, கடற்கரையை அழிவின் பாதையில் இருந்து மீட்டெடுப்பது ஆகியவை இதன் நோக்கம்.*
- *இந்தியாவில் தமிழகம், கேரளா, மேற்கு வங்கம், ஒடிசா, தெலங்கானா, கர்நாடகா, மகாராஷ்டிரா, கோவா, குஜராத் ஆகிய மாநிலங்களில் சுமார் 8,400 கிலோ மீட்டர் நீளத்துக்கு கடற்கரை உள்ளது.*
- *தமிழகத்தில் 13 கடலோர மாவட்டங்களில் 1,024 கிலோ மீட்டர் நீளத்துக்கு கடற்கரை உள்ளது.*

### உலக அமைதி தினம் செப்டம்பர் - 21

- *மையக் கருத்து:* "Climate Action for Peace"

### சர்வதேச அல்சைமர் தினம் செப்டம்பர் - 21

- *இந்தாண்டிற்கான மையக்கருத்து :* "Raising Awareness and Challenging the stigma around the disease".

### உலக காண்டாமிருக தினம் செப்டம்பர் - 22

### சர்வதேச ரோஜா தினம் செப்டம்பர் - 22

- *புற்றுநோயாளிகளுக்கு நம்பிக்கை அளிக்கும் தினம்*

### தேசிய மகள்கள் தினம் செப்டம்பர் - 22

- *சர்வதேச மகள்கள் தினம், செப்டம்பர் 28-ல் கொண்டாடப்படுகிறது.*

### சர்வதேச சைகை மொழி தினம் செப்டம்பர் - 23

(International Day of Sing Language)

- *2019 ஆம் ஆண்டிற்கான சர்வதேச சைகை மொழி தினத்தின் மையக் கருத்து:* "Sign language Right for All" *என்பதாகும்.*

### ஆயுஷ்மான் பாரத் திவாஸ் தினம் செப்டம்பர் - 23

# 1.2 உலக அமைப்புகள் - உடன்படிக்கைகள் மற்றும் மாநாடுகள்

### பாதுகாப்பு தொலைத்தொடர்பு வசதி அமைப்பு தொடக்கம்

(Facility for defence communication system)

- *இந்திய விமானப்படை உதவிக்காக பாதுகாப்பு தொலை தொடர்பு வசதி அமைப்பு தொடங்கி வைக்கப்பட்டது. இது இந்தியா-இஸ்ரேல் உதவியுடன் உருவாக்கப்பட்டது. அஸ்ட்ரா ரஃபேல் கம்யூனிகேஷன் சிஸ்டம் என்ற பெயர் கொண்ட இந்த அமைப்பு பல வகைகளில் அதி நவீன மென்பொருள் ரேடியோக்களை தயாரிக்கும் இந்தியாவின் முதல் தனியார் துறை நிறுவனமாகும்.*

### பருவநிலை மாற்றம் குறித்த உறுப்பு நாடுகளின் கலந்தாய்வு மாநாடு

- *பருவநிலை மாற்றம் குறித்த உறுப்பு நாடுகளின் கலந்தாய்வு மாநாடு (சிஓபி) தென் அமெரிக்கா நாடான சிலியில் 23-ஆம் தேதி நடைபெற்றது.*
- *சுற்றுச்சூழல் மாசுபாடுகளைக் குறைக்க, வரும் 2022-ஆம் ஆண்டுக்குள் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை 175 ஜிகாவாட்டாக உயர்த்துவதே பிரதமர் மோடியின் இலக்கு. அந்தத் திட்டம் மிகப்பெரிய அளவில் வெற்றி பெற்றுள்ளது.*

### உலகளாவிய ஆன்டிமைக்ரோபியல் எதிர்ப்பு மையத்தில் இந்தியா இணைந்தது

- *உலகளாவிய ஆன்டி மைக்ரோபியல் எதிர்ப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையத்தில் இந்தியா இணைந்துள்ளது. இது தொடர்பான அறிவிப்பை புதுடெல்லியில் உள்ள மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகத்தின் பயோடெக்னாலஜி துறை வெளியிட்டது.*

### உலகின் முதல் விண்வெளி அடிப்படையிலான தானியங்கி அடையாள அமைப்பு

(World's First space-based automatic identification system)

- *வணிகக்கப்பல்களை நிகழ்நேர அடிப்படையில் கண்காணிக்கும் உலகின் முதல் விண்வெளி அடிப்படையிலான தானியங்கி அடையாள அமைப்பு இந்தியா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகள் இணைந்து உருவாக்கியுள்ளன.*
- *இந்தத் தொகுப்பானது தொலைத் தொடர்பு தானியங்கி அடையாள அமைப்பு, ரேடார் மற்றும் ஒளியிழை தொலையுணர் கருவிகள் ஆகியவற்றைக் கொண்டது. இது இந்தியப் பெருங்கடலில் கப்பல்களைக் கண்காணிக்கும் திறன் கொண்டதாக இருக்கும்.*

### சர்வதேச பயண சுற்றுலா போட்டித்திறன் குறியீடு

(World travel, tourism competitiveness Index)

- *சர்வதேச பயண சுற்றுலா போட்டித்திறன் குறியீடு பட்டியலில் இந்தியா ஆறு இடங்கள் முன்னேறி 34வது இடத்தில் உள்ளது. பயணம் மற்றும் சுற்றுலா போட்டித்திறன் குறியீடு, 140 நாடுகளின் பொருளாதாரம், பயண மற்றும் சுற்றுலாத்துறையின் நிலையான வளர்ச்சிக்கு உதவும் காரணிகள் மற்றும் கொள்கைகள் ஆகியவற்றை கணக்கில் எடுத்து கொள்ளப்பட்டது.*

| தரவரிசை | நாடுகள் |
|---|---|
| 1 | பிரான்ஸ் |
| 2 | ஜெர்மனி |
| 3 | ஜப்பான் |
| 4 | லண்டன் |

## உலகளாவிய வாழ்வதற்கேற்ற நகர அட்டவணை 2019

**Global Liveability Index 2019**

**MOST LIVEABLE**

| Rank | City |
|---|---|
| 1 | Vienna, Austria |
| 2 | Melbourne, Australia |
| 3 | Sydney, Australia |
| 4 | Osaka, Japan |
| 5 | Calgary, Canada |
| 6 | Vancouver, Canada |
| 7 | Tokyo, Japan |
| 8 | Toronto, Canada |
| 9 | Copenhagen, Denmark |
| 10 | Adelaide, Australia |

**LEAST LIVEABLE**

| Rank | City |
|---|---|
| 131 | Caracas, Venezuela |
| 132 | Algiers, Algeria |
| 133 | Douala, Cameroon |
| 134 | Harare, Zimbabwe |
| 135 | Port Moresby, Papua New Guinea |
| 136 | Karachi, Pakistan |
| 137 | Tripoli, Libya |
| 138 | Dhaka, Bangladesh |
| 139 | Lagos, Nigeria |
| 140 | Damascus, Syria |

- *பொருளாதார புலனாய்பு பிரிவு 2019-ம் ஆண்டிற்கான உலகளாவிய வாழ்வாதார நகர அட்டவணையில் டெல்லி 118வது மற்றும் மும்பை 119வது இடத்தில் உள்ளது. இப்பட்டியலில் வியன்னா நகரம் முதல் இடத்தில் உள்ளது.*

## 2023 ஆம் ஆண்டுக்குள் தட்டம்மை, ரூபெல்லா நோய் ஒழிக்க திட்டம்

- *உலக சுகாதார அமைப்பின் தென்கிழக்கு ஆசிய பிராந்தியத்தின் உறுப்பு நாடுகள் 2023ஆம் ஆண்டுக்குள் தொற்று நோயான அம்மை மற்றும் ரூபெல்லா நோய்களை ஒழிக்க திட்டமிட்டுள்ளது. டெல்லியில் நடைபெற்ற தென்கிழக்கு ஆசியாவிற்கான அமர்வில் நோய்களை அகற்றுவதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.*

## சர்வதேச புலம்பெயர்ந்தோர் பட்டியல்

- *நிகழாண்டில் இதுவரை சர்வதேச அளவில் வெளிநாடுகளில் குடியேறியவர்களில் 1.75 கோடி பேர் இந்தியர்கள் என்று ஐ.நா. ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு அடுத்த மெக்ஸிகோவில் இருந்து குடியேறியவர்கள் 1.18 கோடி பேர் அதிக எண்ணிக்கையில் உள்ளனர்.*
- *வேறு நாடுகளிலிருந்து இந்தியாவுக்கு இந்த ஆண்டில் இதுவரை 51 லட்சம் பேர் புலம்பெயர்ந்துள்ளனர். கடந்த 2015 ஆம் ஆண்டைக் காட்டிலும் இந்த எண்ணிக்கை குறைவாகும்.*

| நாடு | குடிபெயர்ந்தவர்கள் |
|---|---|
| சீனா | 1.07 கோடி |
| ரஷியா | 1.05 கோடி |
| சிரியா | 82 லட்சம் |
| வங்கதேசம் | 78 லட்சம் |
| பாகிஸ்தான் | 63 லட்சம் |
| உக்ரைன் | 59 லட்சம் |
| பிலிப்பைன்ஸ் | 54 லட்சம் |
| ஆப்கானிஸ்தான் | 51 லட்சம் |

## இந்தியா சார்பில் ஐ.நா. சபை கட்டிடத்தில் காந்தி சூரியசக்தி பூங்கா

- *ஐ.நா. சபையின் தலைமை அலுவலகக் கட்டிடம் நியூயார்க் நகரில் அமைந்துள்ளது. இந்தக் கட்டிடத்தின் மேல்மாடியில் 50 கிலோவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் காந்தி சூரியசக்தி பூங்கா இந்தியா சார்பில் அமைக்கப்பட்டுள்ளது.*
- *பருவநிலை மாற்றம் குறித்த விழிப்புணர்வைக் கொண்டு வரும் வகையில் இந்தியாவின் சார்பில் இது அமைக்கப்பட்டுள்ளது.*

# 1.3 பாதுகாப்பு, தேசிய பாதுகாப்பு மற்றும் பயங்கரவாதம்

### "TSENTR 2019" பயிற்சி

- *ரஷ்யாவில் நடைபெற்ற TSENTR 2019 கூட்டு பயிற்சியில் இந்திய இராணுவம் பங்கேற்றது. இந்தியா மற்றும் பாகிஸ்தான் நாடுகள் பாலகாட் தாக்குதலுக்கு பிறகு இரு நாடுகள் முதல்முறையாக பங்கு கொள்கிறது. பாகிஸ்தான், கஜகஸ்தான், கிரிகிஸ்தான் தஜிகிஸ்தான், உபெகிஸ்தான் மற்றும் ரஷ்யா நாடுகள் பங்கேற்றன.*

### 28வது இந்தோ-தாய் கார்பட பயிற்சி

- *இந்திய மற்றும் தாய்லாந்து நாடுகளின் கடற்படை பயிற்சி இந்தோ-தாய் கார்பட் (Indo-Thai CORPAT) செப்டம்பர் 5-15 வரை தாய்லாந்து நாட்டின் பாங்காக் நகரில் நடைபெற்றது. இந்திய கடற்படை ஐ.என்.எஸ் கேசரி மற்றும் தாய்லாந்து நாட்டின் எச்.டி.எம்.எஸ் கரபுரி கப்பல்கள் பங்கேற்றன.*

### 11-ஆவது சி-17 விமானம்

- *இந்தியாவுக்கான* **11ஆவது சி 17 குளோப் மாஸ்டர்** *போக்குவரத்து விமானத்தை அமெரிக்காவின் போயிங் நிறுவனம் இந்திய விமானப் படையிடம் ஒப்படைத்தது.*

### கடலுக்கு அடியில் கனிமங்கள் எடுக்க தேசிய கடல்சார் தொழில்நுட்ப மையம் திட்டம்

- *இஸ்ரோவின் சந்திரயான், மங்கள்யான் திட்டங்களை போன்று தேசிய கடல்சார் தொழிலநுட்ப மையம் சார்பில் சமுத்ராயன் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.*
- *கடலுக்கு அடியில் 200 மீட்டர் ஆழம் வரைக்கு மட்டுமே நீர்மூழ்கிகளால் செல்ல முடியும். சமுத்ரயான் திட்டத்தில் கடலுக்கு அடியில் 6,000 மீட்டர் ஆழத்துக்கு செல்லும் வகையில் நீர்மூழ்கி தயாரிக்கப்பட்டு வருகிறது.*
- *புதிய நீர்மூழ்கி மூலம் 3 மனிதர்கள் ஆழ்கடல் ஆராய்ச்சிக்கு அனுப்பப்படுவார்கள்.*
- *வரும் 2022-ம் ஆண்டில் கடலுக்கு அடியில் இருந்து கனிமங்கள் வெட்டி எடுக்கப்படும் என்று தேசிய கடல்சார் தொழில்நுட்ப மைய இயக்குநர் ஆத்மானந்த் தெரிவித்துள்ளார்.*

- தேசிய கடல்சார் தொழில்நுட்ப மையம் சென்னையை தலைமையிடமாகக் கொண்டு செயல்படுகிறது.

---

### ஜம்மு காஷ்மீரில் 'ஸ்டார்ட் அப்' வாரம்

- *ஜம்மு காஷ்மீர் இளைஞர்களிடையே தொழில் முனைவை ஊக்குவிக்க இந்திய ராணுவம் ஸ்டாட் அப் வாரம் என்ற இந்த நிகழ்வை ஒருங்கிணைக்க திட்டமிட்டது. இந்த நிகழ்வு ரீயாசி மாவட்டத்தில் உள்ள ஸ்ரீ மாதா வைஷ்ணவோ தேவி பல்கலைக்கழகத்தில் செப்டம்பர் 20-ம் தேதி முதல் 22-ம் தேதி வரை 3 நாட்கள் நடைபெற்றது.*

## இந்தோ-பசிபிக் தலைமை இராணுவ மாநாடு

(Chiefs of Defence Conference)



- *2019ஆம் ஆண்டிற்கான இந்தோ-பசிபிக் தலைமை இராணுவ மாநாடு தாய்லாந்து நாட்டின் தலைநகரம் பேங்காக்கில் நடைபெற்றது. இம்மாநாட்டில் இந்தியாவின் தலைமை பணியாளர்கள் குழுவின் தலைவர் (Cheif Staff Committee) மற்றும் விமானப் படைத் தலைவர் பீரேந்தர் சிங் தனேவா பங்கேற்றார். இம்மாநாட்டின் மையக்கருத்து: "Collaboration in a free and open Indo-Pacific" என்பதாகும்.*

## இந்தியா - ஜப்பான் பாதுகாப்பு அமைச்சர்கள் சந்திப்பு

- *இந்தியா-ஜப்பான் நாடுகளுக்கு இடையேயான பாதுகாப்பு அமைச்சர்கள் சந்திப்பு ஜப்பான் நாட்டின் டோக்கியோ நகரில் நடைபெற்றது. இந்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் உத்தரபிரதேச மாநில லக்னோ நகரில் 2020ஆம் ஆண்டு நடைபெற உள்ள பாதுகாப்பு கண்காட்சியில் ஜப்பான் நாட்டின் நிறுவனங்கள மற்றும் இதர பங்குதாரர்கள் பங்கேற்க அழைப்பு விடுத்துள்ளார்.*

## பாதுகாப்பு கண்காட்சி 2020 (DefExpo 2020)

- *பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் மற்றும் உத்தரபிரதேச மாநில முதலமைச்சர் ஸ்ரீ ஆதித்யா நாத் முன்னிலையில் உயர்மட்ட கூட்டம் நடைபெற்றது. இந்த கண்காட்சியில் இந்தியாவின் பாதுகாப்பு சாதனங்களை காட்சிப்படுத்தவும், உலகின் தலைசிறந்த பாதுகாப்பு தளவாட உற்பத்தி நிறுவனங்கள் தங்கள் பொருட்களை காட்சிபடுத்தவும் வழிவகை செய்கிறது. இந்த கண்காட்சி உத்தரபிரதேச மாநிலம் லக்னோவில் பிப்ரவரி 5ம் தேதி முதல் 8 வரை நடைபெற உள்ளது.*

## விமானப்படையில் அப்பாச்சி ஹெலிகாப்டர்கள்



- *இந்திய விமானப்படையில் அதிநவீன அப்பாச்சி ஏஹெச்-64இ ரகத்தைச் சேர்ந்த 8 ஹெலிகாப்டர்கள் இணைக்கப்பட்டன.*

**சிறப்பம்சம்:**

- *எந்தவொரு மோசமான வானிலையிலும் சிறப்பாகச் செயல்படக் கூடியது. இந்த அப்பாச்சி ரக ஹெலிகாப்டர்கள் ஆகும்.*
- *ஒரே நேரத்தில் பன்முனைத் தாக்குதலில் ஈடுபட இந்த ஹெலிகாப்டரை பயன்படுத்த முடியும்.*

- *அமெரிக்காவின் போயிங் நிறுவனத்திடம் இருந்து அப்பாச்சி ஏஹெச்-64இ ரகத்தைச் சேர்ந்த 22 ஹெலிகாப்டர்களை வாங்குவது தொடர்பாக இந்தியா கடந்த 2015-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஒப்பந்தம் செய்தது. இதே போல், மேலும் 6 அப்பாச்சி ஏஹெச்-64இ ரக ஹெலிகாப்டர்களை ரூ.4,168 கோடிக்கு வாங்குவதற்கு பாதுகாப்பு அமைச்சகம் கடந்த 2017-ஆம் ஆண்டு ஒப்புதல் அளித்தது.*

## 15வது யூத் அபியாஷ் - 2019

- *இந்தியா மற்றும் அமெரிக்கா நாடுகளுக்கிடையேயான கூட்டு இராணுவ பயிற்சி அமெரிக்காவில் வாஷிங்டனில் நடைபெறுகிறது. 2018ஆம் ஆண்டு இந்தியாவில் உத்தரகாண்ட் மாநிலத்தில் நடைபெற்றது.*

## SLINEX - 2019 கடற்பயிற்சி

- இந்தியா மற்றும் இலங்கை நாடுகளுக்கு இடையேயான கூட்டு கடற்படை பயிற்சி SLINEX 2019 செப்டம்பர் 7 முதல் 14 தேதி வரை நடைபெற்றது. இது 7வது பதிப்பாகும். இலங்கையில் இருந்து எஸ்.எஸ். சிந்துரலா மற்றும் எஸ்.எஸ்.என்.எஸ் சூரனி மாலா என்ற இரண்டு கப்பல்கள் பங்கேற்றன. இந்தியா மற்றும் இலங்கை நாடுகளுக்கு இடையேயான கூட்டு கடற்படை பயிற்சி கடந்த 2005ஆம் ஆண்டு முதல் நடைபெறுகிறது.

## மேற்கத்திய விமானப்படை கமாண்டர் மாநாடு

- மேற்கத்திய விமானப்படை கமாண்டர் மாநாடு 2019 டெல்லியில் நடைபெற்றது. இந்திய விமானப்படை தளபதி பிரேந்திர சிங் தனோவா தலைமை வகித்தார்.

**இந்திய விமானப்படை**

- தொடக்கம் : 8 அக்டோபர் 1932
- தலைமையிடம் : டெல்லி

## எஸ்.ஓ.சி. நாடுகளின் மருத்துவம் குறித்த முதல் மாநாடு

- ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் உறுப்பு நாடுகளுக்கான இராணுவம், மருத்துவம் குறித்த முதல் மாநாடு செப்டம்பர் 12-13 வரை புதுடெல்லியில் நடைபெற்றது. இந்த மாநாட்டை இந்திய விமானப்படை கீழ் உள்ள ஒருங்கிணைந்த பாதுகாப்பு பணியாளர்கள் (HQ IDS) ஏற்பாடு செய்திருக்கின்றன.

- எஸ்சிஓ அமைப்பில், இந்தியா, சீனா, ரஷியா, கிர்கிஸ்தான், கஜகஸ்தான், தஜிகிஸ்தான், உஸ்பெஸ்கிஸ்தான், பாகிஸ்தான் ஆகிய எட்டு நாடுகள் உறுப்பினர்களாக உள்ளனர். இந்த அமைப்பில், கடந்த 2017-இல் இந்தியாவும், பாகிஸ்தானும் சேர்த்துக் கொள்ளப்பட்டன.

## கோவா கடற்படை தளத்தில் தேஜாஸ் விமானம் சோதனை

- உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்ட எல்சிஏ இலகுரக போர் விமானம் தேஜாஸ் விமானத்தை மத்திய பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம் பாட்டு நிறுவனம் (டிஆர்டிஓ) உருவாக்கியது. இந்த விமானம் தற்போது இந்திய விமானப் படையில் சேர்க்கப்பட்டுள்ளது.
- இந்த வகை விமானங்களை பெங்களூருவில் உள்ள இந்துஸ்தான் ஏரோநாட்டிக்கல் நிறுவனம் உற்பத்தி செய்து வருகிறது. தேஜாஸ் விமானம் **அரெஸ்டட் லேண்டிங்** எனப்படும் வகையில் தரையில் இறங்கியவுடன் நிறுத்தப்பட்டு வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டது.
- கோவாவில் உள்ள சோதனை மையத்தில் இது வெற்றிகரமாக சோதிக்கப்பட்டுள்ளதால் அடுத்தாக ஐஎன்எஸ் விக்ரமாதித்யா போர்க் கப்பலில் இந்த விமானம் தரையிறக்கப்படவுள்ளது என கடற்படை அதிகாரிகள் தெரிவித்தனர்.

## பீரங்கி எதிர்ப்பு ஏவுகணை வெற்றிகரமாக பரிசோதனை

- உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட குறைந்த எடையுள்ள மனிதர்களால் இயக்கப்படும் பீரங்கி எதிர்ப்பு ஏவுகணை (எம்பி-ஏடிஜிஎம்) வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டது. ஆந்திர மாநிலம், கர்னூலில் உள்ள ஏவுதளத்தில், முக்காலி போன்ற சட்டத்தின் மீது பொருத்தப்பட்டிருந்த பீரங்கி எதிர்ப்பு ஏவுகணை டிஆர்டிஓ குழுவினர் மூலம் ஏவப்பட்டது.
- அந்த ஏவுகணை தொலைவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பீரங்கியின் மாதிரியைச் சென்று துல்லியமாகத் தாக்கி அழித்தது. பீரங்கியில் பல்வேறு இலக்குகளைக் குறிவைத்து தாக்குதல் நடத்தப்பட்டது. அனைத்து இலக்குகளையும் பீரங்கி எதிர்ப்பு ஏவுகணை துல்லியமாகத் தாக்கி அழித்தது.

## மைத்ரீ 2019 இராணுவ பயிற்சி

- இந்தியாவிற்கும் தாய்லாந்திற்கும் இடையேயான **மைத்ரீ 2019** இராணுவ பயிற்சி உம்ரோய் (மேகாலயா) என்ற இடத்தில் செப்டம்பர் 16-29 வரை நடைபெற்றது.

## ரஃபேல் விமானத்தை இயக்கும் முதல் குழு

- இந்திய விமானப்படையின் 17வது படைப்பிரிவை சேர்ந்த கோல்டன் ஏரோ பிரிவினர் ரஃபேல் விமானத்தை இயக்கும் முதல் படையினர் ஆவார். இந்த கோல்டன் ஏரோ படை பிரிவு ஹரியானாவின் அம்பாலா என்ற இடத்தில் அக்டோபர் 1, 1951 ஆண்டு தொடங்கப்பட்டது. இந்த ரஃபேல் பிரெஞ்சு டசால்ட் ஏவியேஷன் என்ற நிறுவனம் தயாரித்துள்ளது.

## "NETRA" என்ற விமானம்

- வான்வழி முன்கூட்டியே எச்சரிக்கை அளித்து கட்டுப்படுத்தும் (Airborne Early Warning and Control Aircraft - AEW&C) இரண்டாவது விமானம் இந்திய பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பால் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்டு இந்திய விமானப் படையிடம் ஒப்படைக்கப்பட்டது.

## இந்தியா (ம) அமெரிக்கா நாட்டின் முதல் முப்படைகளின் போர் பயற்சி

- இந்தியா மற்றும் அமெரிக்கா நாட்டின் முதல் முப்படைகளின் போர் பயிற்சி "Tiger Triump" என்ற பெயரில் ஆந்திர பிரதேச மாநிலம் விசாகப்பட்டினம் மற்றும் காக்கிநாடாவில் வரும் நவம்பர் மாதத்தில் நடைபெற உள்ளது.

## DRDO வின் புதிய தலைமுறை போர் விளையாட்டு மென்பொருள் கப்பல் படையிடம் ஒப்படைப்பு

- இந்த மென்பொருள் மூலம் கப்பல் படையின் போர் பயிற்சி மையங்களை நவீன தொழில் நுட்பங்களின் உதவியுடன் ஏற்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டுள்ளது. டெல்லியை தலைமை யிடமாக கொண்ட (ISSAC - Institute for Systems Studies and Analysis) உதவியுடன் இந்த மென்பொருள் உருவாக்கப்பட்டுள்ளது.

## இந்தியா-சிங்கப்பூர்-தாய்லாந்து கடற்படைகள் கூட்டுப் பயிற்சி தொடக்கம்

- இந்தியா, சிங்கப்பூர், தாய்லாந்து நாடுகளின் கடற்படைகள் பங்கேற்கும் முத்தரப்பு கூட்டுப் பயிற்சி தொடங்கியது. இம்மூன்று நாடுகளும் இத்தகைய முத்தரப்பு பயிற்சியில் பங்கேற்பது இதுவே முதல் முறையாகும்.
- முத்தரப்பு கடற்படையின் கூட்டு பயிற்சி, அந்தமான்-நிகோபர் தீவுகளில் உள்ள போர்ட்பிளேர் நகரில் தொடங்கியது.
- சிங்கப்பூர் கடற்படையின் **ஆர்எஸ்எஸ் டெனேஷியஸ்** சிறுரக தாக்குதல் கப்பல், தாய்லாந்து கடற்படையின் **ஹெச்டிஎம்ஸ் கிராபுரி** போர்க் கப்பல், இந்திய கடற்படையின் **ரண்வீர்**, **கோரா** போர்க் கப்பல்கள், **ககன்யா ரோந்துக் கப்பல்** ஆகியவை இந்தப் பயிற்சியில் பங்கேற்கின்றன.

## ரூ. 5 ஆயிரம் கோடி செலவில் ஆகாஷ் ஏவுகணை மத்திய அரசு ஒப்புதல்

- இந்திய விமானப்படைக்கு ஆகாஷ் ஏவுகணைகள் வாங்க மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. அதன்படி, விமானப் படைக்காக 5 ஆயிரம் கோடி ரூபாய் செலவில் ஆகாஷ் ஏவுகணைகள் வாங்கப்படுகிறது.
- ஆகாஷ் ஏவுகணைகள் ஆகாயத்தில் பறந்து வரும் எதிரி போர் விமானங்களை தாக்கும் விமான எதிர்ப்பு ஏவுகணைகள் என்பது குறிப்பிடத்தக்கது. இவை 30 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள இலக்குகளை தாக்கி அழிக்கும் திறன் கொண்டது. இது ஒலியை விட 2.5 மடங்கு வேகமாக சென்று தாக்கும் வல்லமை பொருந்தியது.
- இத்தகைய சிறப்புகள் கொண்ட ஆகாஷ் ஏவுகணை முழுவதுமாக உள்நாட்டு தொழில் நுட்பத்தில் தயார் செய்யப்பட்டது.

## "Chang Thang" இராணுவப் பயிற்சி

- இந்திய இராணுவப் படையின் மிகப்பெரிய ஒருங்கிணைந்த பயிற்சி Chang Thang என்ற பெயரில் கிழக்கு லடாக் பகுதியில் (சீன எல்லை பகுதி) நடைபெற்றது. இப்பயிற்சியில் T-72 டாங், பீரங்கி துப்பாக்கி, ஹெலிகாப்டர், ஆளில்லா விமானம் போன்றவற்றை கொண்டு பயிற்சி மேற்கொண்டனர்.

## Him Vijay என்ற பெயரிலான போர் பயிற்சி

- இந்திய இராணுவம் மற்றும் இந்திய விமானப் படை இணைந்து மிகப்பெரிய போர் பயிற்சி (Him Vijay) "ஹிம் விஜய் " என்ற பெயரில் முதன் முறையாக அருணாச்சலப் பிரதேசத்தின் (சீன எல்லைப் பகுதியில்) நடைபெற்றது.
- முதல் முறையாக 17 மவுண்டைன் கார்ப்ஸ்யை சேர்ந்த 2500க்கும் மேற்பட்ட வீரர்கள் இதில் பங்கேற்றனர். இந்திய இராணுவம் அதிநவீன அமெரிக்க ஆயுதங்களை இப்பயிற்சியில் பயன்படுத்தியது. இவற்றில் சினூக் ஹெ.வி.லிப்ட் ஹெலிகாப்டர்கள் உள்ளிட்ட எம் 777 அல் ட்ராலைட் ஹோவிட்கர்கள் பங்கேற்றன.

## ரூ.2,000 கோடிக்கு ராணுவ தளவாடங்கள் பாதுகாப்பு அமைச்சகம் ஒப்புதல்

- ராணுவத்துக்கு ரூ.2,000 கோடியில் தளவாடங்கள் கொள்முதல் செய்வதற்கு பாதுகாப்புத் துறை அமைச்சகம் ஒப்புதல் அளித்தது. ராணுவத்துக்குத் தேவையான ஆயுதங்களைக் கொள் முதல் செய்வது தொடர்பான முடிவுகளை பாதுகாப்புத் துறை அமைச்சகத்தின் கீழ் இயங்கும் ராணுவத் தளவாட கொள்முதல் கவுன்சில் எடுத்து வருகிறது.
- இந்தக் கவுன்சிலின் கூட்டம் பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தலைமையில் நடைபெற்றது. ராணுவத்தில் பயன்படுத்தப்படும் டி72, டி90 ஆகிய பீரங்கிகளை உள்நாட்டிலேயே வடிவமைத்து தயாரிப்பதற்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.
- இது தவிர நிலத்தில் கண்ணிவெடிகளை பதிக்கும் இயந்திரங்களை பாதுகாப்பு ஆராய்ச்சி மேம் பாட்டு அமைப்பிடம் (டிஆர்டிஓ) இருந்து கொள்முதல் செய்வதற்கும் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது என்றார் அவர்.

### மேக் இன் இந்தியா

- தொடக்கம் : 25 செப்டம்பர் 2014
- நோக்கம் : உலகின் எந்தப் பகுதியில் இருக்கும் நிறுவனமாக இருந்தாலும் இந்தியாவில் பொருளை தயாரித்து அதை உலகம் முழுக்க கொண்டு சென்று விற்கலாம். இதன் மூலம் பல கோடி வேலைவாய்ப்புகளை உருவாக்கலாம் என்பது தான் இந்த திட்டத்தின் நோக்கம்.




- பிரான்ஸ் மேம்பாட்டு முகமை நிதி உதவியுடன் சென்னையில் ஸ்மார்ட் பள்ளிகள் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.
- கடந்த ஆகஸ்ட் 1 முதல், தீதி கே போலோ (அக்காவிடம் கேளுங்கள்) எனும் பெயரில் இணையதளம் மூலமாக அணுகி மக்கள் குறை கேட்கும் திட்டத்தை மேற்க வங்க மாநில முதலமைச்சர் மம்தா பானர்ஜி துவக்கினார்.
- நாட்டிலேயே முதன்முறையாக சகலவசதிகளுடன் பசுமாடுகளுக்கு தங்கும் விடுதி தொடங்கப்பட உள்ளது. இது ஹரியாணா மாநிலத்தில் அரசின் மானியத் தொகையுடன் அம்பாலாவின் உக்ரா கிராமத்தில் அமைய உள்ளது.
- கடல்சார் துறைக்கு பிராட்பேண்ட் சேவை வழங்க உள்ளதாக டாடா நிறுவனம் அறிவித்துள்ளது. இந்த சேவையை வாங்க உள்ள இந்தியாவின் முதல் நிறுவனமாக டாடா நிறுவனம் உள்ளது.

# 1.4 சிறந்த நபர்கள்

### முதியோர்களுக்கான மாரத்தான் போட்டி

- இந்தியாவின் முன்னாள் இராணுவத்தை சேர்ந்த லெப்டினன்ட் ஜெனரல் அனில் புரி பிரான்ஸின் முதியோர்களுக்கான மாரத்தான் போட்டியில் வெற்றி பெற்று முதல் இடத்தை பிடித்தார்.

### சாகித்ய விருது பெற்ற கிரண் நாகர்கார் மறைவு



- சாகித்ய விருது பெற்ற எழுத்தாளர் கிரண் நாகர்கார் மறைந்தார். இவரின் முதல் புத்தகம் "Saat Sakkam Trechalis" 1974ஆம் ஆண்டு எழுதப்பட்டது.

### தொல்லியல் ஆராய்ச்சியாளர் 'நியூ இரா சீனிவாசன்' காலமானார்



- நாணயவியல் ஆராய்ச்சியாளரும், புத்தக வெளியீட்டாளருமான, 'நியூ இரா' சீனிவாசன் காலமானார். பண்டைய விஜயநகர் ஆட்சியில், சமூக வாழ்க்கை, நீர் சேமிப்பு மேலாண்மை, நாணயவியல் குறித்து, பல் வேறு ஆராய்ச்சி புத்தகங்கள் எழுதியுள்ளார்.

### பிரபல மூத்த வழக்கறிஞர் ராம் ஜோத்மலானி மறைவு

- மிக முக்கிய வழக்குகளில் பங்கேற்று வாதாடிய முன்னாள் சட்டத்துறை அமைச்சரும் பிரபல மூத்த வழக்கறிஞருமான ராம் ஜேத்மலானி காலமானார்.

### மறைந்த டி.வி.சாம்பசிவம் பிள்ளை படம் பொறித்த சிறப்பு அஞ்சல் தலை

- சித்த மருத்துவத்துக்கு பெரும் பங்காற்றிய மறைந்த டி.வி.சாம்பசிவம் பிள்ளையின் படம் பொறித்த சிறப்பு அஞ்சல் தலையை (ஆகஸ்ட் 30) பிரதமர் மோடி வெளியிட்டார். இந்திய மருத்துவ முறைகளாக ஆயுர்வேதா, யோகா மற்றும் இயற்கை மருத்துவம், சித்தா, (ஆயுஷ் -AYUSH) உள்ளன.
- ஆயுஷ் மருத்துவத்துக்கு சிறந்த முறையில் பங்காற்றிய 12 பேரின் படம் பொறித்த அஞ்சல் தலையை மத்திய அரசு முதல் முறையாக வெளியிட்டது.
- இவர் தொகுத்து எழுதிய கலைக்களஞ்சியம் அகராதி சித்த மருத்துவத்துக்கு பெரும் பங்களிப்பைத் தந்துள்ளது. 'மருத்துவ அகராதி தந்த மாமேதை' என்று சித்த மருத்துவ அறிஞர்களால் அவர் அழைக்கப்படுகிறார்.

#### வாழ்க்கைக் குறிப்பு

- தஞ்சாவூர் பகுதியை பூர்விகமாகக் கொண்டவர் டி.வி.சாம்பசிவம் பிள்ளை. பெங்களூரில் 1880-ம் ஆண்டு செப்டம்பர் 19-ம் தேதி பிறந்தார். 1953-ம் ஆண்டு நவம்பர் 12-ம் தேதி தனது 73-வது வயதில் சாம்பசிவம் பிள்ளை மறைந்தார்.

### உலகில் நீண்டகாலம் ஆட்சி செய்த பெண் தலைவர் ஷேக் ஹசீனா



- நீண்டகாலம் நாட்டை ஆட்சி செய்த உலகின் பிரபல பெண் தலைவர்கள் பற்றி **விக்கலீக்ஸ்** ஆய்வு மேற்கொண்டது. இதில் இந்திரா காந்தி, மார்கரெட் தாட்சர், சந்திரிகா குமாரதுங்கா ஆகியோரை முந்தி வங்காள தேச பிரதமர் ஷேக் ஹசீனா சாதனை படைத்துள்ளார்.
- ஷேக் ஹசீனா முதல் முறையாக 1996-2001 வரை வங்காள தேச பிரதமராக இருந்தார். பின்னர் 2008-ம் ஆண்டு ஆட்சிக்கு வந்த அவர் தொடர்ந்து 3-வது முறையாக வெற்றி பெற்று 15 ஆண்டுகள் பதவியில் இருந்த அவர், இப்போது 4-வது ஆட்சியில் ஒரு ஆண்டை நெருங்கி, 16-வது ஆண்டில் உள்ளார்.

## இந்தியாவின் முதல் பெண் டிஜிபி காஞ்சன் பட்டாச்சார்யா மறைவு



- இந்தியாவின் முதல் பெண் காவல் துறை டிஜிபி என்ற பெருமையைப் பெற்ற காஞ்சன் சௌதரி பட்டாச்சார்யா உடல் நலக் குறைவால் காலமானார்.
- கடந்த 1997-ஆம் ஆண்டு குடியரசுத் தலைவர் விருது பெற்றார். அதைத் தொடர்ந்து, பணியில் சிறந்து விளங்கியதற்காக, ராஜீவ் காந்தி விருதையும் பெற்றார். நாட்டின் 2-ஆவது பெண் ஐபிஎஸ் அதிகாரி என்ற பெருமையும் இவரைச் சேரும். நாட்டின் முதல் பெண் ஐபிஎஸ் அதிகாரி, இப்போது புதுச்சேரி ஆளுநராக இருக்கும் கிரண் பேடி என்பது குறப்பிடத்தக்கது.

## நாட்டின் இளைய வயது ஆளுநர் தமிழிசை

- தெலங்கானா மாநிலத்தின் ஆளுநர் தமிழிசை சவுந்தரராஜன் (58), நாட்டில் உள்ள மாநில ஆளுநர்களில் குறைந்த வயதுடையவராகவும், ஆந்திரா மாநிலத்தின் பிஸ்வா பூஷன் ஹரிசந்தன் (85) வயதான ஆளுநராகவும் கருதப்படுகிறார்.
- கடந்த 1-ம் தேதி 5 மாநிலங்களுக்கு புதிய ஆளுநர்களை குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் நியமித்தார். இதன்பின், நாட்டில் உள்ள மாநில ஆளுநர்களின் சராசரி வயது 73 ஆக இருக்கிறது.


## எழுத்தாளர் சிவராமன் செரியநாத் மறைவு

- கேரளாவைச் சேர்ந்த புகழ்பெற்ற எழுத்தாளர் சிவராமன் செரியநாத் காலமானார். குழந்தைகளுக்கான நாவல் எழுதுவதில் புகழ்பெற்றவர்.

**இவர் பெற்ற விருதுகள்:**

- அபுதாபி சக்தி விருது - 1988
- ஏ.பி.கலக்காட் விருது - 2009
- தேசிய ஆசிரியர் விருது - 1989

## ஜிம்பாப்வே முன்னாள் அதிபர் முகாபே மறைவு



- தெற்கு ஆப்பிரிக்க நாடான ஜிம்பாப்வே-ல் 30 ஆண்டுகளுக்கும் மேல் ஆட்சி செலுத்தி வந்த முன்னாள் அதிபர் ராபர்ட் முகாபே, மரணமடைந்தார். 1980-ஆம் ஆண்டு அவர் பிரதமராகப் பொறுப்பேற்றதற்குப் பிறகு அறிமுகப்படுத்திய சமூக நல் லிணக்கக் கொள்கை, பெரும்பான்மை கருப்பினத்தவருக்கு கல்வி, சுகாதார வசதிகள் கிடைக்கச் செய்தமை போன்ற காரணங்களால் சர்வதேச அளவில் நன்மதிப்பைப் பெற்றார்.

## பத்திரிக்கையாளர் ராபர்ட் எஸ் பாய்ட் காலமானார்

- அமெரிக்காவைச் சேர்ந்த பத்திரிக்கையாளர் (ம) புலிட்சர் விருது வென்ற ராபர்ட் எஸ் பாய்ட் இதய நோயால் பாதிக்கப்பட்டதால் காலமானார்.

## மூத்த நிருபர் - பி.ஆர். வாட்ஸ் காலமானார்

- பிரஸ் பிரஸ்ட் ஆஃப் இந்தியாவின் புகழ்பெற்ற மூத்த நிருபர் பகத்ராம் தாஸ் காலமானார். முன்னாள் பிரதமர் ஜவஹர்லால் நேருக்காக 1952, 1957 மற்றும் 1962 காலத்தில் மக்களவை தேர்தலில் முக்கிய பங்காற்றியவர் ஆவார்.


## ஆங்கில கால்வாயை இடைவிடாமல் நான்குமுறை கடந்த முதல் பெண்

- அமெரிக்காவை சேர்ந்த சராக் தாமஸ் ஆங்கில கால்வாயை இடைவிடாமல் நான்கு முறை நீந்தி கடந்த முதல் பெண் ஆவார். இவர் 84 மைல்லை 54 மணி நேரம் 13 நிமிடங்களில் வெற்றிகரமாக கடந்து சென்றார். இவருக்கு முன்பு 4 நீச்சல்காரர்கள் வெற்றிகரமாக இடைவிடாமல் 3 முறை கால்வாயை கடந்து சென்றது சாதனையாக இருந்தது.

# 1.5 முக்கிய இடங்கள்

### ஃபெரோஸ் ஷா கோட்லா கிரிக்கெட் மைதானம்

### அருண் ஜெட்லி ஸ்டேடியம் எனப் பெயர் மாற்றம் செய்யப்படும்



- *ஃபெரோஸ் ஷா கோட்லா ஸ்டேடியம் அருண் ஜெட்லி ஸ்டேடியம் என பெயர் மாற்றம் செய்யப்படும் என்று டெல்லி கிரிக்கெட் சங்கம் அறிவித்துள்ளது. டெல்லி பெரோஷ் ஷா கோட்லா மைதானம் 1883ம் ஆண்டு கட்டப்பட்டதாகும். இந்தியாவின் மிகப்பழமையான மைதானங்களில் இதுவும் ஒன்றாகும்.*
- *மறைந்த முன்னாள் அமைச்சர் ஜெட்லி, 1999 முதல் 2013 வரை டெல்லியின் கிரிக்கெட் சங்கத்தின் தலைவராக அருண் ஜெட்லி பதவி வகித்த நிலையில் அவரது நினைவாக பெயர் சூட்டப்பட்டுள்ளது.*

### ஸ்வச் ஐகான் இடங்கள் (Swachh Iconic Places)

- *ஜம்மு & காஷ்மீர் மாநிலத்தில் உள்ள ஸ்ரீ மாதா வைஷ்னோ தேவி* (Shri Mata Vaishno Devi) *என்ற கோவில் சிறந்த ஸ்வச் ஐகான்* (Swachh Iconic Places) *இடங்கள் பட்டியலில் இடம் பெற்றுள்ளதாக மத்திய ஜல்சக்தி, குடிநீர் மற்றும் சுகாதாரத்துறை அமைச்சர் தெரிவித்தார்.*

### புவிசார் குறியீடு

- *ஸ்ரீவில்லிபுத்தூரில் கடந்த 79 ஆண்டுகளாக தயாரிக்கப்பட்டு வரும் பால்கோவாவுக்கு மத்திய அரசு புவிசார் குறியீடு வழங்கப்பட்டது. இந்நிலையில், உலகப் புகழ்பெற்ற திண்டுக்கல் பூட்டு, காரைக்குடி செட்டிநாடு காட்டன் கண்டாங்கி சேலை ஆகியவற்றுக்கு புவிசார் குறியீடு வழங்கப்பட்டுள்ளது.*




### இந்தியா-நேபாளம் இடையேயான பெட்ரோலியக் குழாய்

- *இந்தியாவிலிருந்து நேபாளத்துக்கு பெட்ரோலியப் பொருள்களை எளிதில் எடுத்துச் செல்லும் விதமாக அமைக்கப்பட்ட குழாயை பிரதமர் மோடியும், நேபாள பிரதமர் கே.பி.சர்மா ஒலியும் காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தனர்.*
- *பிகார் மாநிலம் மோதிஹாரி பகுதிக்கும், நேபாளத்தின் அம்லேக்கஞ்ச் பகுதிக்கும் இடையே 69 கி.மீ. நீளத்துக்கு பெட்ரோலியக் குழாய் அமைக்க இருநாடுகளும் ஒப்புக்கொண்டன. பெட்ரோலியப் பெருள்களை எடுத்துச் செல்வதற்கு இரு நாடுகளுக்கிடையே குழாய் அமைக்கும் திட்டம், தெற்காசிய நாடுகளிலே இதுவே முதலாவதாகும்.*

# 1.6 விளையாட்டு

### உலக நீச்சல் போட்டியில் தமிழக இளைஞர் சாதனை



- 18-வது ஃபினா நீர் விளையாட்டு உலக சாம்பியன்ஷிப் போட்டி தென்கொரியாவின் குவாங்ஜு நகரத்தில் கடந்த 5-ஆம் தேதி முதல் 18-ம் தேதி வரை நடைபெற்றன.
- இப்போட்டியில் தமிழகத்தைச் சேர்ந்த அரவிந்த் நயினார் 25-29 வயதினருக்கான 50 மீட்டர் பட்டர்ஃப்ளை பிரிவு நீச்சல் போட்டியில் பந்தய தூரத்தை 25.6 விநாடிகளில் கடந்து 5-வது இடத்தையும், 100 மீட்டர் பட்டர்ஃப்ளை பிரிவில் பந்தய தூரத்தை 58.72 விநாடிகளில் கடந்து 3-வது இடத்தையும் பிடித்தனர்.

### டேக்வாண்டோ சாம்பியன்

- மலேசியாவில் நடைபெற்ற 4-ஆவது சர்வதேச ஹீரோஸ் டேக்வாண்டோ கோப்பை 2019 போட்டியில் சென்னையை சேர்ந்த உதயகுமார் தங்கம் வென்றார்.

### உலக துப்பாக்கி சுடுதல் தங்கம் வென்றார் இளவேனில் வாலறிவன்



- ஐஎஸ்எஸ்எப் உலக துப்பாக்கி சுடும் போட்டியில் முதல் தங்கப் பதக்கத்தை வென்றார் தமிழகத்தின் இளவேனில் வாலறிவன். பிரேசில் தலைநகர் ரியோடி ஜெனிரோவில் நடைபெறும் இப்போட்டியில் மகளிர் 10மீ ஏர்ரைபிள் பிரிவு நடைபெற்றது. இதில் இந்திய நட்சத்திர வீராங்கனை இளவேனில் வாலறிவன் 251.7 புள்ளிகள் சுட்டு தங்கப்பதக்கத்தை வென்றார்.

### கவனம் ஈர்த்த மானசி ஜோஷி



- மாற்றுத் திறனாளிகளுக்கான உலக பாட்மிண்டன் சாம்பியன்ஷிப் போட்டியில் இந்திய வீராங்கனை மானசி ஜோஷி தங்கம் வென்றார்.

### உலக திறன் அறியும் போட்டி: தங்கம் வென்ற இந்திய அஸ்வத் நாராயணன்

- ரஷ்யாவில் நடந்த உலக திறன் அறியும் போட்டியில் இந்தியாவைச் சேர்ந்த அஸ்வத் நாராயணன் தங்கப்பதக்கம் வென்று சாதனை படைத்தார். ரஷ்யாவின் காஸன் நகரில் உலக திறன் அறியும் போட்டிகள் நடந்தன.

### ஜோசப் செக்கர் நினைவு - சர்வதேச தடகள கூட்டம்




- செக்குடியரசில் ப்ர்நொ (Brno) நகரில் நடைபெற்ற ஜோசப் செக்கர் நினைவு சர்வதேச தடகள கூட்ட போட்டியில் மகளிர்க்கான 400 மீட்டர் ஓட்டப் போட்டியில் இந்தியாவின் விகே விஸ்மயா 52.12 வினாடியில் கடந்து தங்கம் வென்றார்.

### ஃபிபா உலக கால்பந்து போட்டி 2022




- 2022 ஆம் ஆண்டின் ஃபிபா உலக கால்பந்து போட்டி கத்தார் நகரில் நடைபெற உள்ளது. இப்போட்டிக்கான சின்னத்தை டோகா கத்தார் போட்டி ஒருங்கிணைப்பு குழு மற்றும் ஃபிபா இணைந்து உருவாக்கி உள்ளது.

## உலக துப்பாக்கி சுடும் போட்டி தங்கம் வென்றார் யஷ்ஹஸ்வினி



- ஐ எ ஸ் எ ஸ் எ ஃ ப் உலக துப்பாக்கி சுடும் போட்டியில் இந்தியாவின் யஷ்ஹஸ்வினி சிங் தேஸ்வால் மகளிர்க்கான 10 மீ. ஏர்பிஸ்டல் பிரிவில் 236.7 புள்ளிகளுடன் தங்கப் பதக்கம் வென்றார். இப்போட்டி பிரேஸிலின் ரியோடி ஜெனிரோவில் நடைபெற்று வருகிறது.

## உலக குத்துச்சண்டை போட்டி எரிஸ்லேன்டி லாரா சாம்பியன்

- உலக குத்துச்சண்டை சம்மேளனம் சார்பில் நடைபெற்ற சூப்பர் வெல்டர்வெயிட் போட்டியில் சாம்பியன் பட்டம் வென்றார் கியூபாவின் எரிஸ் லேன்டி லாரா.

## கிரிக்கெட் வீரரான ஜல் சக்சேனாவின் அரிய சாதனை

- கேரளாவைச் சேர்ந்த கிரிக்கெட் வீரர் ஜலில் சக்சேனா. தற்போது துலீப் டிராபி தொடரில் விளையாடி வருகிறார். இவர் உள்ளூர் முதல் தர போட்டியில் 6 ஆயிரம் ரன்கள் அடித்தத்துடன் 300 விக்கெட்டுக்கள் கைப்பற்றியுள்ளார். முதல் தர போட்டிகளில் இந்த சாதனையைப் படைத்த 19-வது வயது வீரர் என்ற சாதனையைப் படைத்துள்ளார்.

## உலக துப்பாக்கி சுடுதல் அபிஷேக் வர்மாவுக்கு தங்கம், சௌரவ் சௌதரிக்கு வெண்கலம்

- ஐஎஸ்எஸ்எப் உலக துப்பாக்கி சுடும் போட்டியில் ஆடவர் பிரிவில் இந்தியாவின் அபிஷேக் வர்மா 10மீ பிரிவில் தங்கப் பதக்கத்தையும், சௌரவ் சௌதரி வெண்கலப் பதக்கத்தையும் வென்றனர். ஆடவர் 50மீ ரைபிள் பிரிவில் சஞ்சீவ் ராஜ்புத் வெள்ளிப் பதக்கம் பெற்றார்.

## 10வது லா அல்ட்ரா தி ஹய் (la ultra The high) மாரத்தான் போட்டி 2019

- லடாக்கில் நடைபெற்ற லா அல்ட்ரா தி ஹய் மாரத்தான் போட்டியில் பூனேவை சேர்ந்த ஆஷுக் கசோடேகர் 555 கி.மீ. கடந்து இப்போட்டியில் வென்ற முதல் இந்தியர் ஆவார்.

## சீனியர் தேசிய மகளிர் கால்பந்து சாம்பியன்ஷிப் போட்டி (Senior Women's National Football Championship)

- 25வது சீனியர் தேசிய மகளிர் கால்பந்து சாம்பியன்ஷிப் போட்டி அடுத்த மாதம் அருணாச்சல பிரதேசத்தில் நடைபெற உள்ளது.

## டெஸ்ட் கிரிக்கெட்டில் ஹாட்ரிக் விக்கெட் எடுத்த மூன்றாவது இந்தியர் பும்ரா

- டெஸ்ட் போட்டியில் ஹாட்ரிக் விக்கெட் வீழ்த்திய 3வது இந்தியர் என்ற பெருமையை இந்திய கிரிக்கெட் அணி வேகப்பந்து வீச்சாளர் ஜஸ்பிரித் பும்ரா பெற்றுள்ளார். இதற்கு முன் ஹர்பஜன் சிங், இர்பான் பதான் ஆகியோர் டெஸ்ட்டில் ஹாட்ரிக் விக்கெட் வீழ்த்தியுள்ளனர்.

## உலக மல்யுத்தப் போட்டியில் வெண்கலம் வென்றார் வினேஷ் போகட்



- உலக மல்யுத்த போட்டியில் பெற்ற இரண்டாவது வெற்றி மூலம் இந்திய நட்சத்திர வீராங்கனை வினேஷ் போகட் 2020 டோக்கியோ ஒலிம்பிக் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளார். உலக சாம்பியன்ஷிப்பில் வினேஷ் போகட் பதக்கம் வெல்வது இதுவே முதல்முறை. உலக சாம்பியன்ஷிப்பில் பதக்கம் வென்ற 5வது இந்திய வீராங்கனை என்ற பெருமையும் பெற்றுள்ளார்.

### யுஎஸ் ஓபன் பட்டம் வென்றார் பியான்கா

- நியூயார்க்கில் நடைபெற்ற யுஎஸ் ஓபன் மகளிர் ஒற்றையர் பிரிவு முன்னணி வீராங்கனை செரீனா வில்லியம்ஸை வீழ்த்தி முதன்முறையாக கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்றார்.

**சிறப்புகள்**

- கிராண்ட்ஸ்லாம் போட்டியில் பட்டம் வென்ற முதல் கனடா வீராங்கனை, கடந்த 2006-இன் யுஎஸ் ஓபனில் பட்டம் பெற்ற இளம் வீராங்கனை மரியா ஷரபோவா. அதன் பின் 13 ஆண்டுகள் கழித்து பட்டம் வென்ற இளம் வீராங்கனை ஆகிறார் பியான்கா. மேலும் 2000-ஆம் ஆண்டுகளில் பிறந்து கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்ற முதல் வீராங்கனை என்ற சிறப்பையும் பெறுகிறார்.

### துலீப் கோப்பை கிரிக்கெட்

- துலீப் கோப்பை கிரிக்கெட் ஆட்டத்தில் இந்திய கிரீன் அணியை 38 ரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி இந்திய ரெட் அணி சாம்பியன் பட்டம் வென்றது.

### 8வது லடாக் மாரத்தான்

- உலகின் மிக உயர்ந்த லடாக் மாரத்தானின் (11,000 அடி), எட்டாவது பதிப்பு லடாக்கின் லே பகுதியில் நடைபெற்றது. 26 நாடுகளில் இருந்து 5500 பேர் கலந்து கொண்டனர். நான்கு பிரிவுகளாக இந்த மாரத்தான் போட்டிகள் நடைபெற்றது.

### 22-ஆவது முறையாக சாம்பியன் ஆனார் பங்கஜ் அத்வானி

- ஐபிஎஸ்எப் உலக பில்லியார்ட்ஸ் போட்டியில் 22-ஆவது முறையாக சாம்பியன் பட்டம் வென்றுள்ளார் நட்சத்திர வீரர் பங்கஜ் அத்வானி.



### பாதி மாரத்தான் கென்ய வீரர் உலக சாதனை

- டென்மார்க்கில் நடந்த பாதி மாரத்தான் ஓட்டத்தில் கென்ய வீரர் ஜெப்ரி கம்வோர் புதிய உலக சாதனை படைத்தார். இதில் கென்ய வீரர் ஜெப்ரி கம்வோர், பந்தய தூரத்தை 58 நிமிடம், 01 வினாடியில் கடந்து முதலிடம் பிடித்து தங்கம் வென்றார்.
- இதன் மூலம் பாதி மாரத்தான் வரலாற்றில் அதிவேகமாக இலக்கை அடைந்த வீரர் என்ற புதிய உலக சாதனை படைத்தார். இதற்கு முன், கடந்த ஆண்டு ஸ்பெயினில் உள்ள வாலன்சியாவில் நடந்த பாதி மாரத்தான் ஓட்டத்தில் கென்யாவின் ஆபிரகாம் கிப்டம், இலக்கை 58 நிமிடம், 18 வினாடியில் கடந்தது சாதனையாக இருந்தது.

### வியட்நாம் ஓபன்: சௌரவ் சாம்பியன்


- உலக பாட்மிண்ட் சம்மேளனம் பி.டபிள்யு.எப் சூப்பர் 100 பாட்மிண்டன் போட்டி ஹோசிமின் சிட்டியில் நடைபெற்றது. வியட்நாம் ஓபன் சூப்பர் சீரிஸ் பாட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் முன்னணி விரர் சௌரவ் வர்மா சாம்பியன் பட்டம் வென்றார்.

### ஆசிய டேபிள் டென்னிஸ் சாம்பியன் போட்டி

- இந்தோனேஷியாவின் யோக்யகர்தா நகரில் தொடங்கும் ஆசிய டேபிள் டென்னிஸ் சாம்பியன்ஷிப் போட்டியில் சரத், சத்யன், மனிகா பத்ரா உள்ளிட்டோர் அடங்கிய 10 பேர் கொண்ட இந்திய அணி கலந்து கொள்கிறது. 2020 டோக்கியோ ஒலிம்பிக் போட்டிக்கு தகுதிச் சுற்று ஆட்டமாக இப்போட்டி அமைந்துள்ளது.

### அமெரிக்க ஓபனில் ரபேல் நடால் சாம்பியன்

- அமெரிக்க ஓபன் டென்னிஸ் தொடரில் ஆடவர் ஒற்றையர் பிரிவில் ஸ்பெயினின் ரபேல் நடால் சாம்பியன் பட்டம் வென்றார். அமெரிக்க ஓபனில் நடால் பட்டம் வெல்வது இது 4-வது முறையாகும். இதற்கு முன்னர் கடந்த 2010, 2013 மற்றும் 2017-ம் ஆண்டுகளில் கோப்பையை வென்றார்.



**ஆஷஸ் டெஸ்ட் தொடர்**

- இங்கிலாந்து அணிக்கு எதிராக மான்செஸ்டர் நகரில் நடைபெற்ற ஆஷஸ் டெஸ்ட் தொடரின் 4-ஆவது ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணி 185 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் ஆஸ்திரேலியா அணி தொடரின் வெற்றியை உறுதி செய்துள்ளது.

**உலக மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டியில் பஜ்ரங் புனியா, ரவிகுமார் தாஹியா வெண்கலம் வென்றனர்**

- உலக மல்யுத்த சாம்பியன் ஷிப் போட்டியில் 65 கிலோ ஃப்ரீ ஸ்டைல் பிரிவில் இந்திய வீரர்கள் பஜ்ரங்புனியா, ரவிகுமார் தாஹியா ஆகியோர் வெண்கலம் வென்றனர்.
- தான் பங்கேற்ற முதல் உலக சாம்பியன்ஷிப் போட்டியிலேயே பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளார் ரவிகுமார் தாஹியா.
- உலக மல்யுத்த சாம்பியன் ஷிப் போட்டியில் வெண்கலம் வென்றார் இந்திய வீரர் ராகுல்.

**உலக குத்துச்சண்டை சாம்பியன்ஷிப்: இந்தியாவுக்கு வெள்ளிப் பதக்கம்**

- ரஷியாவில் நடைபெற்ற உலக குத்துச்சண்டை சாம்பியன் ஷிப் போட்டியில் இந்தியாவுக்கு வெள்ளிப் பதக்கம் கிடைத்தது.
- உலக குத்துச்சண்டை இறுதிச்சுற்றுக்குள் நுழைந்த முதல் இந்தியரான அமித் பங்கால், வெள்ளி வென்று வரலாற்றுச் சாதனை படைத்தார்.

இதற்கு முன்பு உலக மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டியில் பதக்கம் வென்ற இந்தியர்கள் பின்வருமாறு:

- விஜேந்தர் சிங் (2009), விகாஸ் கிருஷ்ணன் (2011), சிவா தபா (2015), கௌரவ் பிதூரி (2017).

**பான்பசிபிக் ஓபன்: நவோமி ஒஸாகா சாம்பியன்**

- டோக்கியோவில் நடைபெற்ற பான் பசிபிக் ஓபன் டென்னிஸ் போட்டியில் ஜப்பான் வீராங்கனை நவோமி ஒஸாகா சாம்பியன் பட்டம் வென்றார். கடந்த 2018 யுஎஸ் ஓபன் வெற்றிக்கு பின் ஒஸாகா பெறும் வெற்றி இதுவாகும்.

**சீன ஓபன் பாட்மிண்டன் பட்டம்**

- சீன ஓபன் பாட்மிண்டன் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில் ஸ்பெயின் வீராங்கனை கரோலினா மரின் சாம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினார்.

**ராட் லேவர் கோப்பை: ஐரோப்பா சாம்பியன்**

- உலக அணிக்கு எதிரான ராட் லேவர் கோப்பை போட்டியில் ஐரோப்பிய அணி மூன்றாவது முறையாக சாம்பியன் பட்டத்தை கைப்பற்றியது.
- டென்னிஸ் ஜாம்பவான் ராட் லேவர் பெயரில் லேவர் கோப்பை போட்டி டீம் வேர்ல்ட்-டீம் ஐரோப்பா அணிகள் இடையே நடத்தப்படுகிறது. ஐரோப்பிய கண்டத்தைச் சேர்ந்த பிரபல வீரர்கள் ஒரு அணியாகவும், உலகின் இதர பிரபல வீரர்கள் ஒரு அணியாகவும் இணைந்து இப்போட்டியில் மோதுகின்றனர்.
- முந்தைய இரண்டு போட்டியிலும் ஐரோப்பிய அணியே சாம்பியன் பட்டம் வென்றது.

**U-17 ஜூனியர் ஆடவர் சுப்ரோடோ சர்வதேச கால்பந்து போட்டி**

- மேகாலயா மாநிலத்தில் உள்ள ஹோப்வெல் எலியஸ் உயர்நிலை பள்ளி 60வது U-17 ஜூனியர் ஆடவர்கான சுப்ரோடோ சர்வதேச கால்பந்து போட்டியில் வென்றது. இது ஆசியாவின் மிகப்பெரிய இளைஞர் கால்பந்து போட்டியாகும்.

## 2022 ஆண்டு குளிர்கால ஒலிம்பிக் போட்டி அதிகாரப்பூர்வ சின்னம் வெளியீடு

- 2022 ஆண்டு சீனாவில் உள்ள பீஜிங் நகரில் நடக்கும் குளிர்கால ஒலிம்பிக் போட்டியின் அதிகாரப்பூர்வ சின்னம் வெளியிடப்பட்டுள்ளது. Similing Panda - இதன் பெயர் Bing Dwen Dwen என்பதாகும். இச்சின்னம் பெய்ஜிங்கில் நடக்கும் குளிர்கால ஒலிம்பிக் போட்டியை குறிக்கும்.
- Shuey Rhon Rhon - பாரா ஒலிம்பிக் 2022-ஐ குறிக்கும். சீன மொழியில் Bing என்பது பனி, தூய்மை மற்றும் வலிமையை குறிக்கும். Dwen Dwen என்பது நேர்மை, சுகாதாரம் குறிக்கிறது.

### ஒலிம்பிக் போட்டி நடக்கும் இடங்கள்


| வருடம் | இடங்கள் |
|---|---|
| 2020 கோடைகால ஒலிம்பிக் | டோக்கியோ, ஜப்பான் |
| 2024 கோடைகால ஒலிம்பிக் | பாரிஸ், பிரான்ஸ் |
| 2028 கோடைகால ஒலிம்பிக் | லாஸ் ஏன்ஜெல்ஸ், அமெரிக்கா |
| 2026 குளிர்கால ஒலிம்பிக் | மிலன் மற்றும் கோர்டினா டி ஆம்பெஸோ, இத்தாலி |

## ஆசிய நீச்சல் : இந்தியாவுக்கு தங்கம்

- ஆசிய நீச்சல் கூட்டமைப்பு, இந்திய நீச்சல் சம்மேளனம் சார்பில் பெங்களூருவில் ஏஷியன் ஏஜ் நீச்சல் சாம்பியன்ஷிப் போட்டிகள் தொடங்கின. முதல் நாளில் ஸ்ரீஹரி நடராஜ், ஆனந்த் அனில்குமார், சாஜன் பிரகாஷ் மற்றும் விரித்வால் கடே ஆகியோர் அடங்கிய இந்திய ரிலே அணி 3:22:72 விநாடிகளில் பந்தய தூரத்தை கடந்து தங்கப் பதக்கத்தை கைப்பற்றியது.




## "India in the Persianate Age 1000-1765"





### M. ரிச்சர்டு ஈட்டான்

- இந்தியாவில் கி.பி. 1000 ஆம் ஆண்டு முதல் 1765 க்குள் நடைபெற்ற பெர்சிய குடியேற்றங்கள் மற்றும் கலாச்சார, சமூக பழக்கவழக்க மாற்றங்கள் குறித்து தெளிவான விளக்கங்களுடன் இந்த புத்தகத்தில் அளிக்கப்பட்டுள்ளது.

## "Himalayan Odyssey" புத்தகம் வெளியீடு

- பாராளுமன்ற உறுப்பினரான வீரேந்திர குமார் எழுதிய Himalayan Odyssey என்ற புத்தகத்தை இந்திய துணை ஜனாதிபதி வெங்கய்யா நாயுடு டெல்லியில் வெளியிட்டார்.

## "Being Gandhi" புத்தகம் வெளியீடு





- Being Gandhi என்ற புத்தகம் பரோ ஆனந்த் என்பவரால் எழுதப்பட்டது. இப்புத்தகத்தில் காந்திஜியின் வாழ்க்கை நிகழ்வுகளைப் பற்றி விவரிக்கப்பட்டுள்ளது.

# 1.7 புத்தகங்கள் மற்றும் எழுத்தாளர்கள்

### இந்திய குறும்படம் "Im Jeeja"

- இந்திய ஆவணப்படமான "Im Jeeja" ஊனமுற்றோர் பிரச்சனைகள் குறித்து திரைப்பட விழாவில் 14வது பதிப்பில், 30 நிமிடங்களுக்கான பிரிவில் விருது வென்றது.

### Obama: The call of History





- அமெரிக்காவின் முன்னாள் குடியரசுத் தலைவர் பராக் ஒபாமா பற்றிய புத்தகம் “Obama: The call of History” என்பதாகும். இந்த புத்தகம் பீட்டர் பேகர் (Peter Baker) என்பவரால் எழுதப்பட்டது.

### A Short History of Indian Railways

- "A short History of Indian Railways" என்ற புத்தகம் பத்திரிக்கை மற்றும் எழுத்தாளர் ராஜேந்திர அலேகர் என்பவர் எழுதி உள்ளார்.

### “India’s Lost Frontier the story of the North-West Frontdier Provine of Pakistan”




- இப்புத்தகம் ராகவேந்திர சிங் என்பவரால் எழுதப் பட்டது. டெல்லியில் வெளியிடப்பட்டது.

### Savarkar: Echoes from a forgotten past, 1833-1924





- பெங்களூரை சேர்ந்த எழுத்தாளர் விக்ரம் சம்பத் இப்புத்தகத்தை எழுதியுள்ளார்.

### Loktantra Ke Swar (Khand 2) & The Republican Ethic (Volume 2)


- இப்புத்தகத்தை துணைக்குடியரசுத் தலைவர் வெங்கய்யா நாயுடு டெல்லியில் வெளியிட்டார்.

### First They Erased our Name: A Rohingya Speaks




- First They Erased our Name: A Rohingya Speaks என்ற இப்புத்தகம் சோபியா ஆன்செல் (Sophie Ansel) என்பவரால் எழுதப்பட்டது.

### Phoolproof : Indian Flowers, Their Myths, Traditions and Usage




- இப்புத்தகம் ஜீலம் பிஸ்வாஸ் போஸ் என்பவரால் எழுதப்பட்டது. இந்தியாவில் உள்ள பல்வேறு மலர்களை பற்றி விவரிக்கிறது.

### Glorious Diaspora - Pride of India

- இந்தியத் துணைக் குடியரசுத் தலைவர் ஸ்ரீ வெங்கய்யா நாயுடு புதுடெல்லியில் பிரவாசி பாரதிய சம்மன் விருது பெற்றவர்கள் குறித்து புகழ்பெற்ற புலம் பெயர்ந்தோர் - இந்தியாவின் பெருமை என்ற புத்தகத்தை வெளியிட்டார்.

### Rethinking Good Governance என்ற புத்தகம்

- இந்தியஜனாதிபதிராம்நாத்கோவிந்Rethinking Good Governance என்ற புத்தகத்தை வெளியிட்டார். இப்புத்தகத்தை முன்னாள் தலைமைக்கணக்குத் தணிக்கையாளர் வினோத் ராய் எழுதியுள்ளார்.
  - இந்திய தலைமைக் கணக்குத் தணிக்கையாளர்களில் வினோத் ராய் 11வது தலைவர் ஆவர்.

---

- “From Leeches to Slug Glue: 25 Explosive ideas that made (and are making) modern medicine” இப்புத்தகம் ரூபாபாய் என்பவரால் எழுதப்பட்டது.

# 1.8 விருதுகள் மற்றும் கௌரவங்கள்

### டென்சிங் நோர்கே தேசிய சாகச விருதுகள் அறிவிப்பு

- மத்திய இளைஞர் மற்றும் விவகாரங்கள் விளையாட்டுத் துறை அமைச்சகம் சார்பில் 2018-ஆம் ஆண்டுக்கான டென்சிங் நோர்கே தேசிய சாகச விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இந்த விருதுக்கு பல்வேறு பிரிவுகளில் சாகசங்களில் ஈடுபட்ட 6 பேர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

**விருது பெறும் விவரம்:**

- நிலம் சாகசப் பிரிவில் அபர்ணா குமார்.
- மறைந்த தீபங்கர் கோஷ் கே.மணிகண்டன் ஆகியோரும்,
- நீர் சாகசப் பிரிவில் பிரபாத் ராஜு கோலி,
- காற்று சாகசப் பிரிவில் வாங்சுக் ஷெரப்பா ஆகியோர் அறிவிக்கப்பட்டுள்ளார்.

> - மவுண்ட் எவரெஸ்ட் சிகரத்தில் முதல் முதலாக ஏறி டென்சிங் நோர்கே வெற்றி கண்டார். அவரது சாகசத்தை நினைவுகூரும் வகையில், அவரது பெயரில் இந்த விருது வழங்கப்பட்டு வருகிறது.

### SKOCH ஆளுகை தங்க விருது 2019

### (SKOCH Governance Gold Award)

- தீனதயாள் அந்த்யோதயா யோஜனா-தேசிய நகர்ப்புற வாழ்வாதாரத் திட்டம் (DAY-NULM) மதிப்புமிக்க SKOCH ஆளுகை தங்க விருதை அதன் மலிவு கடன் மற்றும் வட்டி நீக்கம் அணுகலுக்கான (PAISA) போர்ட்டலுக்காக வழங்கியுள்ளது. (DAY-NULM) என்பது வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சகத்தின் கீழ் ஒரு முக்கிய திட்டமாகும்.

### கேல் ரத்னா, அர்ஜுனா, துரோணாச்சார்யா விருதுகள்

- தேசிய விளையாட்டு தினத்தை முன்னிட்டு நடைபெற்ற விழாவில் மாற்றுத் திறனாளி வீராங்கனை தீபா மாலிக்கு ராஜீவ் கேல் ரத்னா விருது உள்பட பல்வேறு வீரர்கள், பயிற்சியாளர்களுக்கு முறையே அர்ஜுனா, துரோணாச்சார்யா விருதுகளை குடியரசு தலைவர் ராம்நாத் கோவிந்த் வழங்கினார்.



- நிகழாண்டு மல்யுத்த வீரர் பஜ்ரங் புனியா, பாராலிம்பிக் தடகள வீராங்கனை தீபா மாலிக் ஆகியோர் ராஜீவ் கேல் ரத்னா விருதுக்கு தேர்வு செய்யப்பட்டிருந்தனர். 19 பேருக்கு அர்ஜுன விருதுகளும், 6 பேருக்கு துரோணாச்சார்யா விருதுகளும், 5 பேருக்கு தயான் சந்த் வாழ்நாள் சாதனையாளர் விருதுகளும் வழங்கப்பட்டன.

> - ஹாக்கி ஜாம்பவான் மேஜர் தயான்சந்த் பிறந்த நாளான ஆகஸ்ட் 29 ஆண்டுதோறும் தேசிய விளையாட்டு தினமாக அனுசரிக்கப்படுகிறது.

### காயிதே மில்லத் விருது 2019

### (Quaid e Millath Award)

- காயிதே மில்லத் விருது 2019 பிரபல அரசியலமைப்பு நிபுணரும் எழுத்தாளரும் ஆன ஏ.ஜி. நூரணி மற்றும் விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல் திருமாவளவன் ஆகியோருக்கு இவ்விருது வழங்கப்பட்டது.

### பசிபிக் ஆசியா பயண சங்கம் விருது (Pacific Asia Travel Association Award)

- கஜகஸ்தான் நாட்டின் நூர்சுல்தான் என்ற இடத்தில் நடைபெற்ற பசிபிக் ஆசியா பயண சங்கம் விருது வழங்கும் நிகழ்வில் கேரளாவை சேர்ந்த குமரகோம் என்ற பெண்கள் நடத்தும் உணவகம், கேரள சுற்றுலா பிரச்சார விளம்பரம் "Come out and play" மற்றும் இணைய தளம் www.keralatourism.org ஆகிய மூன்றிற்கும் இந்த விருது அளிக்கப்பட்டுள்ளது.

**யோகா விருது 2019**

- ஜப்பானை சேர்ந்த யோகா ஆசிரியர் கசுவோ கெய்ஷின் கிமுராவுக்கு பிரதமர் நரேந்திர மோடி யோகா விருதினை வழங்கினார். யோகாவை முன்னேற்ற சிறப்பாக செயல் படுபவர்களுக்கு பிரதமரின் யோகா விருது வழங்கப்படும் என்று கடந்த 2016ம் அன்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் பிறகு ஆண்டுதோறும் யோகா விருது வழங்கப்பட்டு வருகிறது.

**தீனதயாள் அந்த்யோதயா யோஜனா-தேசிய நகர்ப்புற வாழ்வாதாரத் திட்டம்** (DAY-NULM)

- இந்த திட்டம் 2014 இல் தொடங்கப் பட்டது. நகர்ப்புற வீட்டுவசதி மற்றும் வறுமை ஒழிப்பு அமைச்சகத்தால் செயல்படுத்தப்படுகிறது. திறன் மேம்பாட்டின் மூலம் நிலையான வாழ்வாதார வாய்ப்புகளை மேம்படுத்துவதன் மூலம் நகர்ப்புற ஏழைகளை மேம்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது. இது மைய நிதியுதவி திட்டம்.

**"SATARK" செயலிக்கு தகவல் தொழில்நுட்ப விருது**

- ஒடிசா மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம் உருவாக்கிய SATARK-System for Assessing, Tracking and Alerting Disaster Risk Information Based on Dynamic Risk என்ற செயலிக்கு சிறப்பான தகவல் தொழில் நுட்ப விருது வழங்கப்பட்டது. இந்த செயலி பேரிடர் காலங்களில் மக்களுக்கு சிறந்த எச்சரிக்கை வழங்குகிறது.

**76வது வெனிஸ் சர்வதேச திரைப்பட திருவிழா**

- 76வது வெனிஸ் சர்வதேச திரைப்பட திருவிழா இத்தாலி நாட்டின் வெனிஸ் லிடோ (Venice Lido) என்ற நகரில் நடைபெற்றது. சிறந்த படத்துக்கான தங்க சிங்க விருது இந்தியாவின் ஜோக்கர் திரைப்படம் வென்றது.

**வெனிஸ் சர்வதேச திரைப்பட திருவிழா விருது**

- கனடா திரைப்பட திருவிழா மற்றும் பெர்லின்சர்வதேசதிரைப்படதிருவிழாவை அடுத்து உலகின் மிகப்பழமையான திரைப்பட திருவிழாவாகும்.

**மலிவு கடன் மற்றும் வட்டி துணை அணுகலுக்கான போர்டல்** (PAiSA)

- இது ஒரு மையப்படுத்தப்பட்ட தகவல் தொழில்நுட்ப தளமாகும். இது (DAY-NULM) இன் கீழ் வட்டி சமர்ப்பிப்பை வெளியிடுவதை எளிதாக்குகிறது மற்றும் நெறிப்படுத்துகிறது. இது மாதாந்திர அடிப்படையில் வங்கிகளிடமிருந்து வட்டி சமர்பிக்கும் உரிமை கோரல்களை செயலாக்குதல், செலுத்துதல் கண்காணித்தல் மற்றும் கண்காணிப்பதற்கான ஆன்லைன் தீர்வை வழங்குகிறது. அலகாபாத் வங்கி மூலம் இந்த போர்டல் வடிவமைக்கப்பட்டு உருவாக்கப்பட்டுள்ளது.

**ஸ்கோச் விருதுகள்**

- இது 2003 இல் நிறுவப்பட்டது. டிஜிட்டல், நிதி மற்றும் சமூக உள்ளடக்கம், ஆளுகை, அனைத்தையும் உள்ளடக்கிய வளர்ச்சி, தொழில்நுட்பம் மற்றும் பயன்பாடுகளில் சிறந்து விளங்குதல், மாற்றம் மேலாண்மை, கார்ப்பரேட் ஆளுகை, குடிமக்கள் சேவை வழங்கல், திறன் மேம்பாடு மற்றும் அதிகாரமளித்தல் ஆகிய துறைகளின் சிறந்த முயற்சிகளை அங்கிகரிக்கிறது.

**“Lamp of Peace of Saint Francis Award"**

- வங்காள நாட்டை சேர்ந்த நோபல் பரிசு பெற்ற பேராசிரியரான முகமது யுனாஸ் அவர்களுக்கு “Lamp of Peace of Saint Francis Award" வழங்கப்பட்டது அமைதி மற்றும் நல்லிணக்கத்திற்காக இவ்விருது வழங்கப்பட்டது.

**சரலா புரஷ்கர் விருது 2019**

- 2019 ஆண்டிற்கான 40வது சரலா புரஷ்கர் விருதை ஒடியா மொழி எழுத்தாளர் பிரதீப்தாஸ் அவர்களுக்கு “Charu Chibar O Chariya” என்ற புத்தகத்திற்காக வழங்கப்பட்டது. இவ்விருது ஒடிசா மாநில அரசால் வழங்கப்படுகிறது.

**11வது சர்வதேச ஹரன்ட் டிங் விருது**

- மேகாலயா மாநிலத்தை சேர்ந்த ஆக்னஸ் கார்ஷிங் என்பவருக்கு ஆண் வன்முறைக்கு எதிராக போராடியதற்காக இவ்விருது வழங்கப்பட்டுள்ளது. துருக்கிய போராட்டக்காரர் நேபாஹத் அக்கோக்குடன் இணைந்து இவ்விருது பெற்றார்.

### நாமக்கல், திருவள்ளூர் மாவட்டங்களுக்கு விருது

- தேசிய அளவில் பெண் குழந்தைகளைக் காப்போம்; கற்பிப்போம் எனும் மத்திய அரசின் திட்டத்தைச் சிறப்பாகச் செயல் படுத்தியதற்காக தமிழகத்தின் நாமக்கல், திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களுக்கு தில்லியில் நடைபெற்ற விழாவில் விருது வழங்கப்பட்டது.
- இத்திட்டத்தைச் சிறப்பாக செயல்படுத்தும் மாநிலங்கள் மற்றும் மாவட்டங்களுக்கு இந்த ஆண்டுக்கான விருதுக்கு தேசிய அளவில் ராஜஸ்தான், ஹரியாணா, உத்தர பிரதேசம், உத்தரகாண்ட், தில்லி ஆகிய ஐந்து மாநிலங்களும், தமிழகத்தின் திருவள்ளூர், நாமக்கல் உள்பட 20 மாவட்டங்களுக்கும் தேர்வு செய்யப்பட்டன.

    - பெண் குழந்தைகளைக் காப்போம்; பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் எனும் திட்டத்தை பிரதமர் நரேந்திர மோடி கடந்த 2015, ஜனவரி 22 தொடங்கி வைத்தார்.

### சர்வதேச எழுத்தறிவு பரிசு 2019

- ஐக்கிய நாடுகள் சபையின் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பு (யுனெஸ்கோ) 2019ஆம் ஆண்டிற்கான சர்வதேச எழுத்தறிவு பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த விருது யுனெஸ்கோவின் தலைமையகம் பாரீஸ் நகரில் செப்டம்பர் 9 அன்று வெளியிட்டது.

### அமிதாப் பச்சனுக்கு தாதாசாகேப் பால்கே விருது

- இந்தியாவில் திரைப்படத் துறையில் வழங்கப்படும் உயரிய விருதான தாதாசாகேப் பால்கே விருதுக்கு, பிரபல ஹிந்தி நடிகர் அமிதாப் பச்சன் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

### ஸ்வச் பாரத் புரஸ்கார்

- தூய்மை இந்தியா திட்டத்தில், சிறப்பாக பணியாற்றிய மாணவர்களுக்கு விருது வழங்கும் **தூய்மை மஹோத்சவம்** என்ற விழா, டில்லியில் நடந்தது. இதில், உத்தரகாண்ட் மாநிலம், நைனிட்டாலை சேர்ந்த, பள்ளி மாணவர் சந்திர பிரகாஷுக்கு ஸ்வச் பாரத் புரஸ்கார் விருதை, ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் வழங்கினார்.
- சுகாதாரம் தொடர்பாக ஐ.நா. சபையால் நிர்ணயிக்கப்பட்டுள்ள நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகளை குறிப்பிட்ட காலத்துக்குள் (2030-ஆம் ஆண்டு) இந்தியா அடைந்துவிடும் என்றார்.
- இந்நிகழ்ச்சியில் மத்திய ஜல்சக்தி அமைச்சர் கஜேந்திர சிங் செக்வாத் “Swachh Bharat Mission's Book on Behavior Change Communication" வெளியிட்டார். இப்புத்தகத்தை குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் பெற்றுக்கொண்டார்.

**விருதுகள் விவரம்:**

| விருதுகள் | பெற்றவை |
|---|---|
| Best Swachh Iconic Place award | வைஸ்வோ தேவி ஸ்ரீனே கோவில் |
| Swachhta Pakhwada Award | பாதுகாப்புத்துறை அமைச்சகம் |
| Award for Open Defecation Free (ODF) and Behavior Change | குஜராத் மற்றும் சிக்கிம் |
| Swachh Award in Swachhta Action Plan category | ரயில்வேத்துறை |

### 'தி கார்டியன்' சிறந்த 100 படங்கள் பட்டியல்

- இந்தியாவை சேர்ந்த அனுராக் காஷ்யப் இயக்கிய கேங்ஸ் ஆப் வாசிபூர் (Gangs of Wasseypur) 2012ல் வெளியான இந்த திரைப்படம் 21ம் நூற்றாண்டின் சிறந்த 100 படங்கள் என்ற பட்டியலில் 59வது இடம் பெற்றுள்ளது. இங்கிலாந்தை சேர்ந்த The Guardian என்ற பத்திரிகை இந்த பட்டியலை வெளியிட்டுள்ளது.

## பில் கேட்ஸ் அறக்கட்டளை சார்பில் பிரதமர் மோடிக்கு விருது

- **தூய்மை இந்தியா** திட்டத்துக்கு பிரதமர் நரேந்திர மோடி அளித்த சிறப்பான பங்களிப்புக்காக, பில் கேட்ஸ் மற்றும் மெலிண்டாகேட்ஸ் அறக்கட்டளை சார்பில் அவருக்கு விருது வழங்கப்பட்டது.
- ஐ.நா. சபையில் நிர்ணயிக்கப்பட்டுள்ள **நீடித்த வளர்ச்சிக்கான இலக்கு**களை அடைவதற்கான முயற்சிகளைத் தங்கள் நாட்டிலோ அல்லது பல்வேறு நாடுகளிலோ வெற்றிகரமாகச் செயல்படுத்தும் உலக நாடுகளின் தலைவர்களுக்கு **சர்வதேச இலக்காளர்** விருதை பில் கேட்ஸ் மற்றும் மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளை வழங்கி வருகிறது.
- **தூய்மை இந்தியா** திட்டத்தின் மூலம் நாட்டு மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி, அந்த இலக்கை அடைவதற்கு பிரதமர் மோடி அளித்த பங்களிப்புக்காக இந்த ஆண்டுக்கான விருது அவருக்கு வழங்கப்பட்டது.

  - *தூய்மை இந்தியா இயக்கம் (Swachh Bharat Abhiyan) 2014 அக்டோபர் 2 இல் தொடங்கப்பட்டது. இதன் நோக்கம் திறந்தவெளி மலங்கழிப்பை 2019க்குள் முடிவுக்கு கொண்டு வருவதே ஆகும். தூய்மை இந்தியா இயக்கம் ஒரு தேசிய பரப்புரையாகும்.*

## மேரிகோம், சிந்து உள்பட 11 பேருக்கு பத்ம விருது விளையாட்டு அமைச்சகம் பரிந்துரை

- இந்திய வீராங்கனைகள் மேரிகோம், சிந்து உள்பட 11 பேருக்கும் பத்ம விருது வழங்க மத்திய விளையாட்டுத்துறை அமைச்சகம் பரிந்துரை செய்ய முடிவு செய்திருக்கிறது.

### பத்ம ஸ்ரீ விருதுக்கு பரிந்துரைக்கப்பட்ட பெயர்கள்

- பெண்கள் கிரிக்கெட் அணியின் கேப்டன் ஹர்மன்பிரீத் கவுர்,
- இந்திய பெண்கள் ஆக்கி அணியின் கேப்டன் ராணி ராம்பால்,
- மல்யுத்த வீராங்கனை சுமா ஷ்ரூர்,
- வில்வித்தை வீரர் தருண்தீப் ராய்,
- இந்திய ஆண்கள் ஆக்கி அணியில் ஆடிய எம்.பி.கயேஷ்
- டேபிள் டென்னிஸ் வீராங்கனை மனிகா பத்ரா

### பத்மவிபூஷண் விருதுக்கு பரிந்துரைக்கப்பட்ட பெயர்

- பெண்கள் குத்துச்சண்டையில் 6 முறை உலக சாம்பியன் பட்டத்தை வென்று சாதனை மங்கையாக திகழும் மேரிகோமின் பெயர் பத்மவிபூஷண் விருதுக்கு பரிந்துரைக்கப்படுகிறது.
- இந்தியாவில் பாரத ரத்னாவுக்கு அடுத்து வழங்கப்படும் உயரிய விருது பத்மவிபூஷன் ஆகும். இந்த விருதுக்கு வீராங்கனை ஒருவர் பெயர் பரிந்துரைக்கப்படுவது இதுவே முதல் முறையாகும்.

### பத்மபூஷண் விருதுக்கு பரிந்துரைக்கப்பட்ட பெயர்

- சமீபத்தில் உலக பேட்மிண்டன் போட்டியில் தங்கப் பதக்கம் வென்று வரலாறு படைத்த பி.வி.சிந்துவின் பெயர் பத்மபூஷண் விருதுக்கு சிபாரிசு செய்யப்படுகிறது.

## இந்திய தூதருக்கு ஆர்டர் ஆஃப் சையத் II விருது

- ஐக்கிய அரபு அமீரகத்துக்கான இந்திய தூதர் நவீன் தீப் சிங் சூரி அந்த நாட்டின் மிக உயர்ந்த விருதான ஆர்டர் ஆஃப் சையத் II விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். இந்தியா மற்றும் ஐக்கிய அரபு அமீரக நாடுகளுக்கு இடையேயான சிறந்த நல்லுறவு ஏற்படுத்தியதற்க்காக இவ்விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

## தென் சூடானில் உள்ள இந்திய அமைதிபடைகு ஐ.நா. வின் சேவை விருது

- தெற்குசூடானில்உள்ளஇந்தியஅமைதிகாக்கும் படையை சேர்ந்த 17 இந்திய அமைதி காக்கும் படையினர்க்கு ஐக்கிய நாடுகள் சபையின் சேவை விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர். இதில் 5 பெண்கள் காவல்படையினருக்கும் இவ்விருது வழங்கப்பட்டது.

### சங்கரதாஸ் சுவாமிகள் விருது

- பரியேறும் பெருமாள் திரைப்படத்துக்கு புதுவை அரசின் சங்கரதாஸ் சுவாமிகள் விருது வழங்கப்பட்டது. அரசின் செய்தி விளம்பரத் துறை, நவதர்ஷன் திரைப்படக் கழகம், அலையன்ஸ் பிரான்சிஸ் அமைப்பு ஆகியவை இணைந்து நடத்திய இந்திய திரைப்பட விழா புதுச்சேரியில் தொடங்கியது.
- சிறந்த பிராந்திய மொழித் திரைப்படமாக பரியேறும் பெருமாள் திரைப்படம் தேர்வு செய்யப்பட்டு சங்கரதாஸ் சுவாமிகள் விருது வழங்கப்பட்டது.

### அம்னஸ்டிஸ் மனசாட்சியின் தூதர் விருது

- காலநிலை பேரழிவைத் தவிர்க்க அவசர நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியத்தைஎடுத்துக்காட்டுவதற்காகஸ்வீடன் சுற்றுச்சூழல் ஆர்வலர் கிரெட்டா துன்பெர்க், எதிர்கால இளைஞர் இயக்கத்திற்கான அம்னஸ்டிக் சர்வதேச மனசாட்சியின் தூதர்கள் விருது வழங்கப்பட்டுள்ளது.
- அமெரிக்காவின் வாஷிங்டன் டி.சி.ஜார்ஜ் வாசிங்டன் பல்கலைக்கழகத்தில் இவ்விருது வழங்கும் விழா நடைபெற்றது. இந்த விருது மிக உயர்ந்த மனித உரிமை விருது ஆகும்.

### 2019ம் ஆண்டுக்கான ஆசிய சமூக மாற்றத்துக்கான விருது

- டில்லியில் மருத்துவ மாணவி பலாத்காரம் செய்யப்பட்ட வழக்கை விசாரித்து, குற்றவாளிகளுக்கு மரண தண்டனை வாங்கி கொடுத்த, பெண் போலீஸ் அதிகாரி, சாயா சர்மா 2019ம் ஆண்டுக்கான ஆசிய சமூக மாற்றத்துக்கான விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

> - அமெரிக்காவின் நியூயார்க் நகரில் உள்ள கலாசார அமைப்பு ஆசிய சொசைட்டி, இந்த அமைப்பு சார்பில் ஆசியாவின் எதிர்காலத்துக்கு சிறப்பாக பணியாற்றியவர்களை கவுரவிக்கும் வகையில், 2014ம் ஆண்டு முதல் ஆசிய சமூக மாற்றத்துக்கான விருது வழங்கி கவுரவித்து வருகிறது.

### பத்ம விருதுகளுக்கு இணையாக சர்தார் படேல் பெயரில் ஒற்றுமை விருது அறிவிப்பு

- தேசத்தின் ஒற்றுமைக்கு அரும் பணியாற்றுபவர்களுக்கு சர்தார் வல்லபாய் படேல் தேசிய ஒற்றுமை விருது வழங்கப்படும். இது பத்ம விருதுகளுக்கு இணையாகக் கருதப்படும் என்று மத்திய உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.
- இரும்பு மனிதர் சர்தார் வல்லபாய் படேலின் பிறந்ததினமானஅக்டோபர்31 ம்தேதிதேசிய ஒற்றுமை தினமாகக் கொண்டாடப்படுகிறது. அவரது நினைவாக தேசிய ஒற்றுமை விருது நிறுவப்படும் என்று கடந்த ஆண்டு இறுதியில் பிரதமர் மோடி அறிவித்தார்.
- தேசத்தின் ஒற்றுமை, ஒருமைப்பாட்டுக்கு அரும் பணியாற்றுபவர்களுக்கு இந்த விருது வழங்கப்படும்.

### கல்வி சிறப்பு விருது 2019

- 'சூப்பர் 30' நிறுவனர் ஆனந்த்குமார்-க்கு, கல்வி சிறப்பு விருது 2019 (Education Excellence Award 2019), அமெரிக்காவில் வழங்கப்பட்டது.
- மாணவர்களுக்கு கல்வியை வழங்குவதில் சான் ஜோஸ் அமைப்பின் 25ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு வழங்கப்பட்டது.
- சூப்பர் 30 (Super 30) என்பது, இந்தியாவின் பாட்னாவில் தொடங்கப்பட்ட ஒரு இந்திய கல்வித் திட்டமாகும்.
- பிரபல கணிதவியலாளர் ஆனந்த்குமார் மற்றும் பீகாரின் முன்னாள் டி.ஜி.பி. அபயானந் ஆகியோ ரால் 2002 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

### கார்கில் முதல் கோஹிமா வரையிலான மாரத்தான் போட்டி

- கார்கில் போரின் 20 ஆண்டு வெற்றியை முன்னிட்டு கார்கில் முதல் கோஹிமா வரையிலான மாரத்தான் போட்டி "Glory Run" என்ற பெயரில் 4500 கி.மீ. வரை நடத்தப்பட்டது. இப்போட்டியை விமானப்படைத் தளபதி பி.எம். சின்ஹா தொடங்கி வைத்தார். இப்போட்டியின் குறிக்கோள் "Touch the Sky with Glory" என்பதாகும்.

### உலக அமைதி விருது

- அகில இந்திய மனித உரிமை மற்றும் சமூக நீதி கவுன்சில் சார்பில் சென்னையில் நடந்த சர்வதேச சமாதான மாநாட்டில் சென்னை மாநகராட்சி முன்னாள் மேயரும், மனித நேய அறக்கட்டளை தலைவருமான சைதை துரைசாமிக்கு உலக அமைதி விருது வழங்கப்பட்டது.

### இந்தியாவின் உடனடி கட்டண சேவைக்கு ஐந்து நட்சத்திர மதிப்பீடு வழங்கப்பட்டது

- அமெரிக்க நிறுவனமான நம்பகத்தன்மை தேசிய தகவல் சேவை (FIS), 2019 ஆம் ஆண்டிற்கான ஆறாவது வருடாந்திர அதிவேக கட்டணம் வழங்கும் நிறுவனங்கள் தொடர்பான அறிக்கை வெளியிட்டது. இதில் உலகின் சிறந்த நிகழ்நேர கட்டண வழங்கும் நிறுவனமாக இந்தியாவின் உடனடி கட்டண சேவைக்கு (India's Immediate Payment Service) ஐந்து நட்சத்திர மதிப்பீடு வழங்கப்பட்டது. அதிவேக கட்டண கண்டுபிடிப்பு குறியீடு 2019 பட்டியலில் ஐ.எம்.பி.எஸ். முதல் இடத்தில் உள்ளது.

### இந்தியாவில் இருந்து ஆஸ்கார் விருது போட்டிக்கு இந்திப்படம் தேர்வு

- ஆஸ்கார் விருது போட்டிக்கு இந்தியாவின் சார்பில் அனுப்புகிற படத்துக்கான தேர்வு கொல்கத்தாவில் நடந்தது. இந்திய திரைப்பட சம்மேளனம் சார்பில் இந்த தேர்வு கொல்கத்தாவில் நடந்தது இதுவே முதல் முறை ஆகும்.
- 'கல்லி பாய்' என்ற இந்திப்படத்தை ஆஸ்கார் போட்டிக்கு இந்தக்குழு தேர்வு செய்தது.

### 'சரஸ்வதி புரஸ்காரம்' விருது

- ஆண்டுதோறும், நவராத்திரியை முன்னிட்டு, சிறந்த கலைஞர்களுக்கு, 'சரஸ்வதி புரஸ்காரம் - 2019' விருதை, நடன கலைஞர், வைஜெயந்தி மாலா பாலிக்கு ஆளுநர் பன்வாரிலால் புரோகித் வழங்கினார்.

### 'கிரிஷி கர்மான் விருது' க்கு தமிழகம் தேர்வு

- எண்ணெய் வித்துகள் உற்பத்தியில் சாதனை படைத்ததற்காக 2017-18 ஆம் ஆண்டுக்கான மத்திய அரசின் 'கிரிஷி கர்மான்' விருது தமிழகத்துக்கு கிடைத்துள்ளது. இவ்விருதை 5 வது முறையாக தமிழகம் பெறுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.
- வேளாண் விளைபொருட்களின் உற்பத்தித் திறனை அதிகரிக்கவும், விவசாயிகளின் வருமானத்தை பெருக்கவும் தமிழக அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.
- தமிழகம் கடந்த 2011 12, 2013 2014, 2014 2015 மற்றும் 2015 2016 ஆகிய ஆண்டுகளில் ஒரு கோடி மெட்ரிக் டன்னுக்கும் அதிகமான உணவு தானியங்களை உற்பத்தி செய்து சாதனை படைத்துள்ளது.
- இதற்காக நான்கு முறை 'கிரிஷி கர்மான்' விருதை தமிழக அரசுக்கு மத்திய அரசு வழங்கியுள்ளது. அரசின் முயற்சிகளால் 2017 18-ம் ஆண்டிலும், 1 கோடியே 7 லட்சத்து 13 ஆயிரத்து 300 மெட்ரிக் டன் உணவு தானிய உற்பத்தி செய்து சாதனை படைத்துள்ளது.

### தேசிய புவி அறிவியல் விருதுகள் 2018

- 2018 ஆம் ஆண்டிற்கான தேசிய புவி அறிவியல் விருதுகள், புவியியல் அறிவியல், சுரங்கம் (ம) அதனுடன் தொடர்புடைய பிரிவுகளில் சிறப்பான பங்களிப்புக்காக இவ்விருது வழங்கப்பட்டது. இவ்விருது 1966 ஆம் ஆண்டு முதல் மத்திய சுரங்க அமைச்சகத்தால் வழங்கப்படுகிறது.

| பெயர் | விருது | காரணம் |
|---|---|---|
| பேராசிரியர் சையத் வாஜி அஹ்மத் நக்வி (அறிவியல் மற்றும் தொழில் துறை ஆராய்ச்சி கவுன்சில்) | சிறந்த விருது | நீர்வாழ் உயிரின வேதியியல் ஆராய்ச்சி துறையில் தனது குறிப்பிடத்தக்க உலகளாவிய பங்களிப்பு |
| டாக்டர். சோஹினி கங்குலி (கோவா பல்கலைக்கழகம்) | இளம் விஞ்ஞானி விருது 2018 | பெட்ரோல்ஜி, எரிமலை (ம) புவி வேதியியல் ஆகிய துறைகளில் குறிப்பிடத்தக்க பணி |

### கரூர் அரசுப் பள்ளிக்கு 2வது முறையாக தேசிய தூய்மைப் பள்ளி விருது

- கரூர் மாவட்டம் தோ. செல்லாண்டிபாளையம் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு 2வது முறையாக தேசிய அளவிலான தூய்மைப் பள்ளி விருது வழங்கப்பட்டுள்ளது.
- மத்திய அரசின் மனிதவளத் துறை அமைச்சகத்தின் கீழ் பள்ளிக் கல்வித் துறை மற்றும் எழுத்தறிவு பிரிவின்கீழ் நாட்டில் தூய்மையாகப் பராமரிக்கப்படும் 3 அரசுப் பள்ளிகளுக்கு தூய்மைப் பள்ளிக்கான தேசிய அளவில் 'ஸ்வச் வித்யாலயா புரஸ்கார் விருது' ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது.
- அரசுப் பள்ளிகளில் தூய்மையைப் பேணுவது, நீர் மேலாண்மை, தனிநபர் சுத்தம் ஆகியவற்றின் அடிப்படையில் இவ்விருது வழங்கப்படுகிறது.

### இந்திய பசுமை கட்டிட கவுன்சிலின் பிளாட்டினம் மதிப்பீடு பெற்ற முதல் ரயில் நிலையம்

- ஆந்திர பிரதேசத்தில் உள்ள செக்கந்தரபாத் ரயில்வே நிலையம் இந்திய பசுமை கட்டிட கவுன்சிலின் பிளாட்டினம் மதிப்பீடு பெற்ற முதல் ரயில் நிலையம் ஆகும். இந்த ரயில் நிலையத்தில் கார்பன் டை ஆக்ஸைடு சென்சார்கள் பொருத்தப்பட்ட ஏர் கண்டிஷனிங் காத்திருப்பு அரங்குகள், நிலையத்தில் சூரிய தகடுகள் பொருத்தம் மற்றும் இதர வசதிகள் மேற்கொண்டுள்ளது.

### 71-வது எம்மி விருது வழங்கும் விழா

- சின்னத்திரை கலைஞர்களுக்கான எம்மி விருதுகள் வழங்கும் விழா அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நடைபெற்றது. இதில் "பிளேபாக்" என்ற நகைச்சுவை தொடரை எழுதி நடித்த இங்கிலாந்தை சேர்ந்த பிரபல நடிகை டோபே வாலர் பிரிட்ஜ் என்பவருக்கு சிறந்த நடிகை, சிறந்த கதாசிரியர் உள்ளிட்ட பிரிவுகளில் 3 விருதுகள் வழங்கப்பட்டது.

### கௌரி லங்கேஷ் நினைவு விருது

- மூத்த பத்திரிக்கையாளரும், ரமோன் மகசேசே விருது பெற்றவருமான ரவிஷ்குமார் அவர்களுக்கு "கௌரி லங்கேஷ் நினைவு விருது" வழங்கப்பட்டது. இவ்விருது பெறும் முதல் நபர் இவர் ஆவார்.

### 'சிறந்த சர்வதேச ஒரு ஆண்டு வணிக பள்ளி 2019' தரவரிசை

- தெலங்கானாவில் ஹைதராபாத்தில் உள்ள இந்தியன் ஸ்கூல் ஆஃப் பிஸினஸ், பஞ்சாப்பில் மொஹாலி உள்ள இந்நிறுவனத்தின் மற்றொரு கிளை 'சிறந்த சர்வதேச ஒரு ஆண்டு வணிக பள்ளி 2019' தரவரிசைக்கான பட்டியலில் உலகளவில் 4 வது இடத்திலும், ஆசியா அளவில் முதல் இடத்திலும் உள்ளது. இந்த தரவரிசையை போர்ப்ஸ் இதழ் வெளியிட்டது.





### உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

- தனிநாயகம் அடிகளின் பெருமுயற்சியில், 1970-ஆம் ஆண்டில் உலகத் தமிழராய்ச்சி நிறுவனம் ஏற்படுத்தப்பட்டது. தமிழ் இலக்கியங்களின் மேன்மையையும் சிறப்பையும் உலகெங்கும் கொண்டு செல்ல வேண்டும் என்ற நோக்கத்துக்காக அரிய நூல்கள் பதிப்புப் பணிகளையும் மேற்கொண்டு பழந்தமிழ்ப் படைப்புகளை அழிந்து போகாமல் உலகத் தமிழாரய்ச்சி நிறுவனம் மீட்டெடுப்புச் செய்து வருகிறது. இதுவரை இந்நிறுவனத்தின் மூலம் 1,700 அரிய நூல்களும் வெளியிடப்பட்டுள்ளன.

# 1.8 சமீபத்திய வரலாற்று நிகழ்வு

### 'டினிசோவன்' களின் உருவம் இஸ்ரேல் விஞ்ஞானிகள் முதல் முறையாக வெளியீடு



- லட்சக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த மனிதர்களின் முன்னோடி இனமான டினிசோவன்கள், எந்த உருவத்தைக் கொண்டிருந்தார்கள்என்பதை இஸ்ரேல் விஞ்ஞானிகள் தங்கள் ஆய்வின் மூலம் வெளிப்படுத்தியுள்ளனர்.
- லட்சக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த நியாண்டர்தால்கள் போன்ற மற்றொரு மனித முன்னோடி இனமான டினிசோவன்கள் குறித்து இதுவரை மர்மம் நீடித்து வந்தது.
- ஜெருசலேம் நகரிலுள்ள எபிரேய பல் கலைக்கழக விஞ்ஞானிகள் அந்த எலும்புகளின் மரபணுக்கூறுகளை ஆய்வு செய்து டினிசோவன் மனிதர்கள் எப்படி இருந்திருப்பார்கள் என்பதைக் கண்டறிந்துள்ளனர்.
- 56 உடல்கூறுகளில் நியாண்டர்தால் மனிதர்களைப் போலவும் இல்லாமல், நவீன மனிதர்களைப் போலவும் இல்லாமல் பிரத்யேக அம்சங்களை டினிசோவன்கள் கொண்டிருந்தனர். அவற்றில் 34 அம்சங்கள் மண்டையோட்டில் மட்டுமே காணப்பட்டன.
- டினிசோவன்களின் மண்டையோடு நவீன மனிதர்கள் மற்றும் நியாண்டர்தால் மனிதர்களை விட அகலமாக இருந்தது.

### ஒரத்தநாடு முத்தம்மாள் சத்திரம் பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னமாகிறது



- தஞ்சாவூர் மாவட்டம் ஒரத்த நாட்டில் உள்ள பழமையான முத்தம்மாள் சத்திரம் பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னமாக விரைவில் அறிவிக்கப்பட உள்ளது என தமிழக தொல்லியல் துறையினர் தெரிவித்தனர்.
- தஞ்சாவூரை ஆட்சி செய்த மராட்டிய மன்னர்கள் கி.பி. 1743 முதல் 1837 வரை பெரிய, சிறிய சத்திரங்களை தஞ்சாவூர் முதல் தனுஷ்கோடி வரை அமைத்தனர்.
- இவற்றில் தஞ்சாவூரில் காஞ்சி வீடு சத்திரம், சிரேயஸ் சத்திரம், சூரக்கோட்டையில் சைதாம்பாள்புரம் சத்திரம், மீமிசலில் ராசகுமாரம்பாள் சத்திரம், ராமேசுவரத்தில் ராமேசுவரம் சத்திரம், தனுஷ்கோடியில் சேதுக்கரை சத்திரம் என நெடுகிலும் 20 சத்திரங்கள் முக்கியமானவை.
- இதில் ஒரத்த நாட்டில் உள்ள முத்தம்மாள் சத்திரம் முத்தம்மாள் என்பவரின் நினைவாக 1800-ல் இரண்டாம் சரபோஜி மன்னரால் கட்டப்பட்டது என இங்குள்ள மராட்டிய கல்வெட்டு குறிப்பிடுகிறது.

### பெங்களூருவில் கெம்பே கவுடா சிலை

- பெங்களூருவில் எலஹங்கா பகுதியை ஆண்ட கெம்பே கவுடா குறுநில மன்னர் கி.பி.1537ம் ஆண்டு பெங்களூரு நகரை நிர்மாணித்தார். இவரை கர்நாடக மாநிலத்தில் வாழும் ஒக்கலிக வகுப்பினர் தங்களது தலைவராக ஏற்றுக்கொண்டுள்ளனர். பெங்களூரு மெஜஸ்டிக் பேருந்து நிலையம், மெட்ரோ ரயில் நிலையம், சர்வதேச விமான நிலையம் ஆகியவற்றுக்கு கெம்பே கவுடா பெயர் சூட்டப்பட்டுள்ளது. தற்போது கர்நாடக முதல்வர் எடியூரப்பா ரூ.100 கோடி செலவில் அவருக்கு பிரம்மாண்டமான சிலை சர்வதேச விமான நிலையத்தில் அமைக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

# 1.9 இந்தியா மற்றும் அண்டை நாடுகள்

### காத்மண்ட் - சிலிகுரி இடையே பேருந்து சேவை தொடக்கம்

- *நேபாள நாட்டின் தலைநகர் காத்மண்டு மற்றும் இந்தியாவின் சிலிகுரி இடையே 10வது பேருந்து சேவை தொடங்கப்பட்டுள்ளது. போக்குவரத்து துறை அமைச்சர் ரகுபீர் மகாசெத் மற்றும் நேபாள இந்திய தூதர் மஞ்ஜீவ் ஆகியோர் இணைந்து தொடங்கி வைத்தனர். காத்மண்டு மற்றும் கோரக்பூர் இடையே பேருந்து தொடங்க உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

### இந்திய-நேபாள பள்ளி ஒப்படைப்பு

- *நேபாள நாட்டின் கிழக்கு ஜபா மாவட்டத்தில் இந்திய அரசாங்கத்தால் கட்டப்பட்ட புதிய பள்ளிகளில் அந்நாட்டிற்கு ஒப்படைக்கப்பட்டது. இந்திய நேபாள தூதர் மஞ்ஜிங் சிங் புரி மற்றும் நேபாளத்தின் அட்டர்னி ஜெனரல் அக்னி பிரசாத் காரல் இணைந்து இப்பள்ளியை தொடங்கி வைத்தனர்.*

### தெற்காசிய நாடுகளின் சபாநாயகர்களின் மாநாடு

- *மாலத்தீவு தலைநகர் மாலியில் தெற்காசிய நாடுகளைச் சேர்ந்த சபாநாயகர்களின் மாநாடு செப்டம்பர் 1 இல் நடைபெற்றது.*

### கர்தார்பூர் குருத்வாராவுக்கு இந்திய யாத்ரீகர்கள் விசா இல்லாமல் பயணிக்கலாம்


- *பாகிஸ்தானிலுள்ள கர்தார்பூர் குருத்வாராவுக்கு இந்திய யாத்ரீகர்கள் நுழைவு இசைவு (விசா) இல்லாமல் பயணிப்பதற்கு இருநாடுகளும் ஒப்புதல் அளித்துள்ளன. சீக்கிய மதத்தைத் தோற்றுவித்த குரு நானக் தேவ் நினைவாக பாகிஸ்தானின் கர்தார்பூரில் எழுப்பப்பட்ட தர்பார் சாயிப் குருத்வாரா, சர்வதேச எல்லைப் பகுதியிலிருந்து சுமார் 3 கி.மீ. தொலைவில் ராவி நதிக்கரையில் அமைந்துள்ளது.*
- *அந்த குருத்வாராவுக்கு இந்தியாவில் உள்ள சீக்கியர்கள் புனிதப்பயணம் மேற்கொள்ள வசதியாக இந்தியாவின் குருதாஸ்பூரையும், கர்தார்பூரையும் இணைக்கும் வகையிலான வழித்தடத்துக்கு கடந்த ஆண்டு இந்தியப் பகுதியிலும், பாகிஸ்தான் பகுதியிலும் தனித்தனியே அடிக்கல் நாட்டப்பட்டது.*

### எல்லைப் பகுதிகளின் வரலாற்றை எழுதுவதற்கு பாதுகாப்புத் துறை அமைச்சகம் ஒப்புதல்

- *நாட்டின் எல்லைப் பகுதிகள் குறித்த வரலாற்றை எழுதுவது குறித்து விவாதிப்பதற்காக, தில்லியில் பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நாட்டிலேயே முதல் முறையாக, அரசு சார்பில் நாட்டின் எல்லைப் பகுதிகள் குறித்த வரலாற்றை எழுதுவதற்கு பாதுகாப்புத் துறை அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது.*
- *நாட்டின் எல்லைகளைக் கண்டறிதல் அவற்றை மாற்றியமைத்தல், எல்லைப் பகுதிகளைப் பாதுகாப்பதில் பாதுகாப்புப் படையினர், எல்லையில் வசிக்கும் மக்கள் ஆகியோரின் பங்கு, எல்லையோர மக்களின் கலாச்சாரம், சமூக-பொருளாதார சூழல் ஆகிய அம்சங்கள் அந்த வரலாற்றில் இடம்பெறும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

# 1.10 நியமனங்கள்

### இந்திய விமானப்படையின் முதல் பெண் விமான தளபதி



- இந்திய விமானப்படை விங்க மாண்டர் ஷாலிஜா தாமி நாட்டின் முதல் பெண் விமானப் படை தளபதியாக நியமிக்கப் பட்டார். இவர் பஞ்சாப் மாநிலத்தை சேர்ந்தவர் ஆவார்.

### சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி ஏ.கே.மிட்டல்



- சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக சத்தீஸ்கர் மாநிலத்தைச் சேர்ந்த நீதிபதி ஏ.கே.மிட்டலை நியமிக்க உச்சநீதிமன்ற மூத்த நீதிபதிகள் குழு (கொலீஜியம்) பரிந்துரை செய்துள்ளது. சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக பதவி வகித்து வருபவர் வி.கே.தஹில்ரமாணி. இவர், கடந்த 2018-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 12-ஆம் தேதி சென்னை உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாகப் பதவியேற்றுக் கொண்டார். இந்த நிலையில் உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி வி.கே.தஹில்ரமாணியை, மேகலாய மாநில உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக உச்சநீதிமன்ற மூத்த நீதிபதிகள் குழு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்துள்ளது.

### உலக தேர்தல் ஆணையங்கள் கூட்டமைப்பு தலைவராக சுனில் அரோரா பொறுப்பேற்பு

- உலக தேர்தல் ஆணையங்கள் கூட்டமைப்பின் தலைவராக தலைமைத் தேர்தல் ஆணையர் சுனில் அரோரா பொறுப்பேற்றார். கர்நாடகத் தலைநகர் பெங்களூரில் இந்த கூட்டமைப்பின் 4-ஆவது பொதுக்கூட்டம் நடைபெற்றது.

- உலகில் உள்ள 109 நாடுகளைச் சேர்ந்த 115 தேர்தல் ஆணையங்கள் இணைந்து இந்தக் கூட்டமைப்பு கடந்த 2013 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. தென் கொரியாவில் இதன் தலைமையிடம் அமைந்துள்ளது.

### பண மோசடி தடுப்பதற்கான மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தின் தலைவராக சுனில் கௌர் நியமனம்

- முன்னாள் டெல்லி உயர்நீதிமன்ற நீதிபதி சுனில் கௌர் பண மோசடி தடுப்பதற்கான மேல் முறையீட்டு தீர்ப்பாயத்தின் தலைவராக (PMLA - Prevention of Money Laundering Act) நியமிக்கப்பட்டார்.

**பண மோசடி தடுப்பதற்கான மேல் முறையீட்டு தீர்ப்பாயம்**

- தொடக்கம் : 1977
- இந்தியாவின் பழமையான தீர்ப்பாயங்களில் இதுவும் ஒன்று.
- பணமோசடி தடுப்பு சட்டம் (PMLA) 2002 ஆம் ஆண்டு இயற்றப்பட்டது. இச்சட்டம் ஜூலை 1, 2005 அன்று நடைமுறைக்கு வந்தது.

### உச்சநீதிமன்ற நீதிபதியாக வெ.இராம சுப்பிரமணியன் நியமனம்

- உச்சநீதிமன்ற நீதிபதியாக வெ.இராம சுப்பிரமணியன் உள்பட 4 நீதிபதிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். இதன் மூலம் உச்சநீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை 34-ஆக அதிகரித்துள்ளது.

### முதல் பழங்குடியின பெண் பைலட்

- ஒடிசா மாநிலத்தில் மாவோயிஸ்ட் பாதிப்பு அதிகமுள்ள மல்காங்கிரி மாவட்டத்தி லிருந்து முதல் பழங்குடியின பெண் பைலட் அனுப்பிரியா லக்ரா ஆவார். இதன் மூலம் இந்தியாவில் முதன்முதலாக விமானத்தை இயக்கும் பழங்குடியினப் பெண் என்ற பெருமை அனுப்பிரியாவுக்கு கிடைக்கவுள்ளது.

1. இந்தியாவின் முதல் பெண் போர் விமானி - அவனி சதுர்வேதி
2. இந்தியாவின் முதல் பெண் விமானி - பவானா காந்த்
3. இந்தியாவின் முதல் பெண் பொறியாளர் - ஹீனா ஜெய்வால்

### பிரதமரின் முதன்மை ஆலோசகராக பி.கே. சின்ஹா நியமனம்

- பிரதமர் நரேந்திர மோடியின் முதன்மை ஆலோசகராக முன்னாள் அமைச்சரவைச் செயலர் பி.கே.சின்ஹா நியமிக்கப்பட்டார். தில்லியில் உள்ள பிரதமர் அலுவலகத்தில் சிறப்பு பணி அதிகாரியாக கடந்த மாதம் சின்ஹா நியமிக்கப்பட்டார். இந்நிலையில், அவரை பிரதமரின் முதன்மை ஆலோசகராக நியமிப்பதற்கான ஒப்புதலை அமைச்சரவை நியமனக் குழு வழங்கியது.

### தூதரகப் பணியில் முதல்முறையாக விமானப்படை பெண் அதிகாரி

- இந்திய விமானப் படையின் விங் கமாண்டர் அஞ்சலி சிங் வெளிநாட்டு தூதரகப் பணிக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார். இப்போதுதான் முதல்முறையாக அப்பொறுப்புக்கு பெண் அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார்.

### ஐ.நா.வின் அமைதி தலைவராக இந்தியர் நியமனம்

- இந்திய இராணுவத்தின் ஓய்வுபெற்ற லெப்டின்னட் இயக்குநர் அப்ஜீத் குஹா ஏமனில் ஹோடைடா என்ற இடத்தில் உள்ள ஐ.நா. வின் அமைதி மிஷனுக்கு தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

### தமிழ்நாடு கிரிக்கெட் சங்கத் தலைவராகிறார் ரூபா குருநாத்

- பிசிசிஐ இணைப்பு பெற்ற மாநில சங்கத்தின் தலைவராக தேர்வு செய்யப்படும் முதல் பெண் என்ற சிறப்பை பெறுகிறார் ரூபா குருநாத்.

### சென்னை உயர்நீதி மன்றத்துக்கு பொறுப்பு தலைமை நீதிபதி நியமனம்

- சென்னை உயர்நீதி மன்ற தலைமை நீதிபதி வி.கே. தஹிலராமாணீயின் ராஜிநாமாவை குடியரசுத் தலைவர் ஏற்றுக் கொண்டார். இதனைத் தொடர்ந்து பொறுப்பு தலைமை நீதிபதியாக மூத்த நீதிபதி வினீத் கோத்தாரி நியமிக்கப்பட்டுள்ளார்.

### இந்திய பரஸ்பர நிதிகள் கூட்டமைவின் புதிய தலைவர் நியமனம்

- கோட்டக் மஹிந்திரா வங்கியின் மேலாண்மை இயக்குநராக பணியாற்றி வரும் "நிலேஷ் ஷா" இந்திய பரஸ்பர நிதிகள் கூட்டமைவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

**Association of Mutual Funds of India (AMFI)**

- துவங்கப்பட்ட வருடம் : 1995
- தலைமையகம் : மும்பை, மகாராஷ்டிரா

## 1.11 கலாச்சாரம்

### பசிபிக் நாடுகளின் கலாச்சாரம் நமஸ்தே பசிபிக்

- நமஸ்தே பசிபிக் நிகழ்ச்சி டெல்லியில் நடைபெற்றது. டெல்லியில் பசிபிக் நாடுகளின் கலாச்சாரத்தை இந்தியாவில் காண்பிப்பதற்காக ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, பப்புவா நியூ கினியா மற்றும் பிஜி தூதரகங்கள் நடத்தியது.

### "Nuakhai Juhar" அறுவடை திருவிழா

- ஒடிசா மாநிலத்தில் அறுவடை திருவிழவான நுவாஹாய் ஜூவார் கொண்டாடப்பட்டது. ஒடிசா மாநிலத்தின் மிகப்பழமையான பண்டிகைகளில் இதுவும் ஒன்றாகும்.




## 2.1 இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை

### இந்தியா - ஸ்விட்சர்லாந்து இடையே 3 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்து

- *அரசுமுறைப் பயணமாக, ஸ்விட்சர்லாந்து சென்றுள்ள ராம்நாத் கோவிந்த், பெர்ன் நகரில் அந்நாட்டு அதிபர் உல்ரிக் மாரரை சந்தித்தார். இந்தியா, ஸ்விட்சர்லாந்து இடையே பொருளாதாரம் தொழில் நுட்பம் ஆகிய துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் இருவரும் உறுதிபூண்டனர்.*
- *பருவநிலை மாற்றத்தை ஒன்றிணைந்து எதிர்கொள்வது, அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஆராய்ச்சியில் ஒத்துழைப்பு அளிப்பது என்பன உள்ளிட்ட 3 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.*

காந்திசிலை திறப்பு:

- *முன்னதாக மகாத்மா காந்தியின் 150-வது பிறந்த தினத்தை முன்னிட்டு வில்லனூரவ் நகரில் அவரது சிலையை ராம்நாத் கோவிந்த் திறந்து வைத்தார்.*

## 2.2 மத்திய அரசாங்கம் - பொதுநலம் சார்ந்த அரசுத் திட்டங்கள், அவற்றின் பயன்பாடுகள்

### 'ஜல் ஜீவன்' திட்டம்

- நீர்ப் பாதுகாப்பு தொடர்பாக, விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் **ஜல் சக்தி இயக்கம்** திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது, *2024*-ஆம் ஆண்டுக்குள் ஒவ்வொரு ஊரக குடியிருப்புக்கும் குழாய் மூலம் குடிநீர் வழங்குவதை நோக்கமாகக் கொண்டு, **ஜல் ஜீவன்** திட்டத்தை மத்திய அரசு தொடங்கியுள்ளது.

### 'அங்கிகார் திட்டம்'

- மத்திய வீட்டு வசதி மற்றும் நகர விவகாரங்கள் அமைச்சகம், பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா, ஆயுஷ்மான் பாரத் மற்றும் உஜ்வாலா ஆகிய மத்திய அரசு திட்டங்கள் மூலம் பயன் பெறுபவர்களை ஒரு திட்டத்தின் கீழ் கொண்டுவர **அங்கிகார் திட்டம்** அறிமுகப்படுத்தி உள்ளது.

### வருங்கால வைப்பு நிதிக்கு 8.65% வட்டி

- தொழிலாளர்களின் வருங்கால வைப்பு நிதிக் கணக்குகளுக்கு (பிஎஃப்) *8.65* சதவீதம் வட்டி வழங்க மத்திய தொழிலாளர் நல அமைச்சகம் அறிவிக்கை வெளியிட்டுள்ளது.
- கடந்த *2017 18* நிதியாண்டில் தொழிலாளர்களின் வருங்கால வைப்பு நிதிக்கு *8.55* சதவீத வட்டி வழங்கப்பட்டது. *2018 19* நிதியாண்டுக்கு *8.65* சதவீத வட்டி வழங்க கடந்த பிப்ரவரி மாதம் முடிவெடுக்கப்பட்டது. இதற்கு மத்திய நிதியமைச்சகம் கடந்த *19* ஆம் தேதி ஒப்புதல் அளித்தது. அதற்கான அறிக்கையை மத்திய தொழிலாளர் நல அமைச்சகம் வெளியிட்டுள்ளது.
- வருங்கால வைப்பு நிதிக்குக் கூடுதல் வட்டி வழங்கப்பட்டுள்ளதன் மூலம் *6* கோடிக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பயனடைய உள்ளனர்.

### தேசிய ஆய்வக கோப்பகம் அறிமுகம்

- *மத்திய நுகர்வோர் விவகாரங்கள் உணவு மற்றும் பொது விநியோக அமைச்சர் ராம் விலாஸ் பஸ்வான் தேசிய ஆய்வு கோப்பகம் தொடங்கி வைத்தார். இதன் மூலம் தொழில் துறை, நிறுவனம், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் இதர பங்குதாரர்கள் தங்களின் சோதனைக்கு தேவையான அங்கீகார சான்றிதழ் எளிதாகப் பெறலாம்.*

### 2022-க்குள் 100 நகரங்களில் மத்திய அரசின் சுகாதாரத் திட்டம்

- *மத்திய அரசின் சுகாதாரத் திட்டச் சேவைகள் (சிஜிஹெச்எஸ்), வரும் 2022-ஆம் ஆண்டுக்குள் 100 நகரங்களில் கிடைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் ஹர்ஷ்வர்தன் கூறினார்.*
- *கடந்த 1954-ஆம் ஆண்டு தில்லி கோல் மார்க்கெட் பகுதியில் முதல் முறையாக தொடங்கப்பட்ட மத்திய அரசின் சுகாதாரத் திட்டச் சேவைகள், 2014-ஆம் ஆண்டு வரை வெறும் 25 நகரங்களில் மட்டுமே கிடைப்பதாக இருந்தது.*

### பிரதான் மந்திரி ஜன் ஆரோக்ய யோஜனா

- *50 கோடி பேருக்கு மருத்துவக் காப்பீடு அளிக்கும் ஆயூஷ்மான் பாரத் திட்டத்தை பிரதமர் நரேந்திர மோடி கடந்த ஆண்டு செப்டம்பர் 25 (தீனதயாள் உபாத்யாவின் பிறந்த தினம்) அன்று ஜார்கண்ட் தலைநகர் ராஞ்சியில் துவக்கி வைத்தார். ஆயுஷ்மான் பாரத் தேசிய சுகாதார பாதுகாப்பு திட்டத்தின் கீழ் நாட்டிலுள்ள 10.74 கோடி ஏழை குடும்பங்களுக்கு ஆண்டுக்கு ரூ.5 லட்சத்துக்கு மருத்துவக் காப்பீடு வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.*
- *தெலங்கானா, ஒடிசா, டெல்லி, கேரளா, பஞ்சாப் ஆகிய மாநிலங்கள் இதுவரை இந்த திட்டத்தில் இணையவில்லை. இந்தத் திட்டத்தின் கீழ் மக்கள் பயன்பெற அடுத்த 4 ஆண்டுகளில் ஒன்றரை லட்சம் நலவாழ்வு மையங்கள் அமைக்கப்படும் என்று பிரதமர் மோடி தெரிவித்தார்.*

### சிறு வியாபாரிகளுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டம்

- *சிறு வியாபாரிகளுக்கு மாத ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தை மத்திய அரசு கடந்த மார்ச் மாதம் அறிவித்தது. இந்த திட்டத்திற்கு* **பிரதம மந்திரியின் லகு வியாபாரி மான் தன் யோஜனா** *எனப் பெயரிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் சுயதொழில் செய்பவர்கள், சில்லறை வியாபாரிகள் ஆகியோருக்கு மாதம் ரூ.3,000 ஓய்வூதியம் வழங்கப்படும் என அறிவிக்கப் பட்டிருந்தது. மகாராஷ்டிரா மாநிலத்தின் நாக்பூர் நகரில் பிரதமர் மோடி தொடங்கி வைத்தார்.*

### தேசிய குடிநீர் குழாய்கள் அமைப்பதற்கான உள்கட்டமைப்பு பணிக்குழு அமைப்பு

- *2019-20 நிதியாண்டு முதல் 2024-25 வரையிலான ரூ.100 கோடி மதிப்புள்ள தேசிய குடிநீர் குழாய்களுக்கான உள்கட்டமைப்பு பாதை வரைபடத்தை உருவாக்குவதற்கான பணிக்குழுவை மத்திய அரசு அமைத்துள்ளது.*

**நோக்கம் :**

- *பொருளாதார ரீதியிலான சாத்தியமான உள்கட்டமைப்பு திட்டங்களை தொழில்நுட்ப உதவியுடன் துவங்குவதற்கான வழிமுறைகளை காணும் பணியை இக்குழு மேற்கொள்ளும்.*

### 'செல்வ மகள்' திட்டம்

- *பெண் குழந்தைகளின் எதிர்கால நலனுக்காக, தபால் துறை,* **சுகன்யா சம்ரிதி** *எனும் செல்வமகள் சேமிப்பு திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. பிறந்த குழந்தை முதல், 10 வயதிற்குட்பட்ட பெண் குழந்தைகளின் பெயரில், அவர்களது பெற்றோரோ, பாதுகாவலரோ, 250 ரூபாய் செலுத்தி, தபால் அலுவலகங்களில் கணக்கு துவக்கலாம். செல்வ மகள் சேமிப்பு திட்டத்தில், வயது சான்றுக்கு ஆதார், பான் கார்டு பயன்படுத்தலாம் என, தபால் துறை அறிவித்து உள்ளது.*

## விவசாயிகள் ஓய்வூதியத் திட்டம் தொடக்கம்

- சிறு, குறு விவசாயிகளுக்கான ஓய்வூதியத் திட்டத்தை ஜார்கண்ட் மாநிலத் தலைநகர் ராஞ்சியில் பிரதமர் நரேந்திர மோடி தொடக்கி வைத்தார். சிறு, குறு விவசாயிகளுக்கான ஓய்வூதியத் திட்டம், வணிகர்களுக்கான ஓய்வூதியத் திட்டம் **பிரதான் மந்திரி கிஸான் மான் தன் யோஜனா** உள்ளிட்ட பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை (செப் - 12) தொடக்கி வைக்கும் நிகழ்ச்சி, ராஞ்சியில் நடைபெற்றது.

### புதிய சட்டப்பேரவை கட்டடம்

- ராஞ்சியில் புதிதாக எழுப்பப்பட்ட மாநில சட்டப்பேரவைக் கட்டடத்தை பிரதமர் மோடி திறந்து வைத்தார். இந்தக் கட்டிடம் காகிதப் பயன்பாடு இல்லாத முதல் சட்டப்பேரவையாக இது விளங்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

### சரக்கு முனையம்

- சாஹிப்கஞ்சில் (ஜார்கண்ட்) கங்கை நதிக்கரையில், சரக்குப் பெட்டகங்களை எடுத்து செல்வதற்கான புதிய முனையத்தையும் பிரதமர் மோடி திறந்து வைத்தார். இந்த முனையத்தின் மூலம் ஆண்டுக்கு லட்சம் டன் சரக்கு கையாள முடியும்.
- இதன் மூலம் வட கிழக்கு மாநிலங்களுடனும், வங்கதேசம், நேபாளத்துக்கும் எளிதில் வர்த்தகத் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ள முடியும்.
- நாடு முழுவதும் அமைக்கப்படவுள்ள 462 ஏகலைவன் மாதிரிப் பள்ளிகளுக்கான அடிக்கல்லையும் பிரதமர் மோடி நாட்டினார். அவற்றில் 69 பள்ளிகள் ஜார்கண்ட் மாநிலத்தில் அமைக்கப்படவுள்ளன.

  - உலகின் மிகப் பெரும் சுகாதாரக் காப்பீட்டுத் திட்டமான ஆயுஷ்மான் பாரத் ஜார்கண்டில்தொடங்கி வைக்கப் பட்டது. அத்திட்டத்தின் மூலம் கடந்த ஓராண்டில் மட்டும் 44 லட்சம் பேர் பயனடைந்துள்ளனர்.

## ஏகல்வியா மாதிரி உண்டு உறைவிட பள்ளி

- ஜார்கண்டில் பழங்குடியின மாணவர்களுக்காக ‘ஏகல்வியா மாதிரி உண்டு உறைவிட பள்ளிகளையும் துவங்கி வைத்தார்.

### ஏகல்வியா மாதிரி உண்டு உறைவிட பள்ளிகள்

- பழங்குடியின மாணவர்களின் கல்வித்தரத்தை மேம்படுத்த 1997-98ம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- பழங்குடியின விவகாரங்கள் அமைச்சகத்தால் இந்த பள்ளிகள் செயல்படுத்தப் படுகின்றன.
- தேர்ந்தெடுக்கப்படும் மாவட்டங்களில் (பழங்குடியினர் அதிகம் வசிக்கும்) இந்த திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## இ-சிகரெட் தயாரிப்பை தடுக்க அவசரச் சட்டம் : மத்திய அரசு ஒப்புதல்

- சாதாரண சிகரெட்டைப் போல இ-சிகரெட் என்பதும் உடல் நலத்துக்கு கேடு விளைவிப்பதாகும். எனவே, மத்திய அரசு அதற்கு தடை விதித்து அவசர சட்டம் இயற்ற முடிவு செய்துள்ளது.
- இ-சிகரெட் தயாரிப்பு, இறக்குமதி, விநியோகம், விற்பனை ஆகியவற்றைத் தடுப்பதற்கான அவசரச் சட்டத்தை கொண்டு வர மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இந்த அவசரச் சட்டம் அடுத்த நாடாளுமன்றக் கூட்டத் தொடரின் போது மசோதாவாக அறிமுகப்படுத்தப்பட்டு நிறைவேற்றப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.
- உலக அளவில் புகையிலையை அதிகம் பயன்படுத்தும் நாடுகளில் இந்தியா 2-ம் இடத்தில் (26.8 கோடி) உள்ளது. புகையிலை தொடர்பான நோய் பாதிப்பு காரணமாக ஆண்டுக்கு 12 லட்சம் பேர் உயிரிழப்பதாக புள்ளி விவரம் கூறுகிறது.

## ‘ஒரே தேசம் ஒரே தர நிலை’

- வாடிக்கையாளர்களுக்குசிறந்ததயாரிப்புகளை வழங்க ஒரே தேசம் ஒரே தரநிலை என்ற திட்டத்தை மத்திய அரசு கொண்டு வர இருப்பதாக மத்திய நுகர்வோர் விவகாரத் துறை அமைச்சர் ராம் விலாஸ் பாஸ்வான் தெரிவித்தார்.
- இந்திய அரசின் தரநிர்ணய அமைப்பான பிஐஎஸ் இந்திய தயாரிப்புகள் மற்றும் சேவைகளுக்கு தர நிர்ணயங்களை வழங்கி வருகிறது. தவிர, 50-க்கும் மேற்பட்ட ஏஜென்சிகளும் தர நிர்ணயங்களை வழங்கி வருகின்றன. இந்நிலையில் அனைத்து தர நிர்ணய அமைப்புகளையும் பிஐஎஸ் அமைப்பின்கீழ் கொண்டு வருவதற்கான பணிகளை மத்திய அரசு மேற்கொண்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

## குழந்தைகளின் மரபணு நோயை சமாளிக்க இரண்டு முன்முயற்சிகளை மத்திய அரசு அறிமுகம்

- புதிதாக பிறந்த குழந்தைகளின் மரபணு நோய்களில் இருந்து சமாளிக்க சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர் ஹார்ஷ்வர்தன் இரண்டு முன்முயற்சிகளை தொடங்கி உள்ளார். அவைகள் மரபு சார்ந்த கோளாறுகளின் மேலாண்மை மற்றும் சிகிச்சையின் தனித்துவமான முறைகள் (UMMID) மற்றும் தேசிய மரபு சார்ந்த நோய்கள் நிர்வாகம் (NIDAN) ஆகும். இந்த இரண்டு முன்முயற்சி பயோடெக்னாலஜி துறை, அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகத்தால் மேற்கொள்ளப்படும்.

## பிரதான் மந்திரி மாத்ரூ வந்தன் யோஜனா

- நாடு முழுவதும் பிரதான் மந்திரி மாத்ரூ வந்தன் யோஜனா கீழ் பயனடைவோர்களின் எண்ணிக்கை 1 கோடி (1,00,11,200) தாண்டியுள்ளனர் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட மொத்த தொகை ரூ. 4000 கோடி ஆகும்.

**இத்திட்டத்தின் கீழ் பயனடைந்த முதல் ஐந்து மாநிலம்**

1. மத்திய பிரதேசம்
2. ஆந்திர பிரதேசம்
3. இமாச்சல பிரதேசம்
4. தாதர் & நாகர்ஹவேலி
5. ராஜஸ்தான்

- ஒடிசா மற்றும் தெலுங்கானா மாநிலங்கள் இத்திட்டத்தை நடைமுறை படுத்தவில்லை. இதன் செயல்பாட்டை மத்திய மற்றும் மாநில அரசுகள் PMMVY - CAS என்ற இணைய அடிப்படையிலான மென்பொருள் பயன்பாடு மூலம் கண்காணிக்கப்படுகின்றன.

- பிரதமமந்திரி மாத்ரு வந்தனா திட்டம் (Pradhan Mantri Matru Vandana Yojana - PMMVY) எனும் மகப்பேறு உதவித் திட்டத்தின் கீழ் மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் செயல்திறனை மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகமானது வெளியிட்டுள்ளது.
- ஜனனி சுரக்ஷா யோஜனா கீழ் பயனாளிகள் ரூ. 6000 ஊக்க தொகையாக வழங்கப்படுகிறது.
- கர்ப்பிணி பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய் மார்களுக்கு இன் கீழ் நேரடியாக மூன்று மாத தவணை முறையில் ரூ. 5000 வழங்கப்படுகிறது.

## தேசிய விவசாய கழிவுகள் மேலாண்மை மாநாடு :

- தேசிய விவசாய கழிவுகள் மேலாண்மைக்கான மாநாடு ஹரியானாவில் நடைபெற்றது. இம்மாநாட்டை மத்திய வேளாண்மை மற்றும் விவசாய நலவாழ்வு இணை அமைச்சர் தொடங்கி வைத்தார். விவசாயிகள் தங்கள் விளைச்சலுக்கு பிறகு மீதமுள்ள வைக்கோலை எறிப்பதை குறைக்க (Zero burning in all the Village) வேண்டும் என்று அறிவுறுத்தி உள்ளது. டெல்லி, உத்தரபிரதேச மாநில விவசாயிகள் தங்கள் குறைகளை இம்மாநாட்டில் பகிர்ந்து கொண்டனர். இம்மாநாட்டை மாநில அரசு மற்றும் இந்திய வேளாண்மை ஆராய்ச்சி கவுன்சில் இணைந்து (ICAR) ஏற்பாடு செய்திருந்தது. வைக்கோல் எறிப்பு கடந்த 2018 ஆம் ஆண்டில் 41% இருந்து 15% குறைந்து உள்ளதாக உயர் மட்ட குழுவின் தலைவரான டாக்டர்.நாகேஷ் சிங் தெரிவித்தார். இம்மாநாட்டில் பன்மொழி செயலியான (Customer Hiring Service Centres) விவசாயிகளுக்காக தொடங்கப்பட்டது. இதன் சேவை மையம் 50கி.மீ தொலைவில் அமைந்திருக்கும் இந்த செயலி விவசாயிகளை உதவி மையங்களுடன் இணைக்கிறது.

### பள்ளிகளில் செயற்கை நுண்ணறிவு திட்டம் அறிமுகம்

- *மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சகம் இன்டெல் போன்ற தொழில் நுட்ப நிறுவனத்துடன் இணைந்து, பள்ளிகளில் செயற்கை நுண்ணறிவு பற்றி அறிந்து கொள்ள ஒரு தொகுப்பை உருவாக்கி உள்ளது.*
- *இதை மத்திய இடைநிலைக் கல்வி வாரியத்தின் ஆசிரியர்கள் விருதுகள் (2018-19) வழங்கும் நிகழ்ச்சியில் மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் ரமேஷ் போக்ரியால் நிஷ்ஹாக் தெரிவித்தார்.*
- *கல்லூரிகள் கற்பிக்கப்படும் செயற்கை நுண்ணறிவு தற்போது 8ஆம் வகுப்பிலிருந்து அறிமுகப்படுத்தப்பட உள்ளது என்றும், நமது கல்வி முறையில் ஒரு மிகப்பெரிய மாற்றம் உருவாகும் என்று தெரிவித்தார்.*

**வித்யாதான் (Vidya Daan)** :

- *6 முதல் 10 வகுப்பு வரை உள்ள மாணவர் களுக்காக ஆசிரியர்கள் பாடத்திட்டங்களை தயார் செய்து அரசு இணைய தளமான திக்ஷா செயலியில் பதிவேற்றம் செய்யும், நடவடிக்கைகளை அமைச்சர் தொடங்கி வைத்தார்.*

### விலங்குகள் நோய் தடுப்பு திட்டம்

- *உத்தரபிரதேச மாநிலம் மதுரா நகரில் விலங்குகள் நோய் தடுப்புத் திட்டத்தை (என்ஏடிசிபி) பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்தார். கால்நடைகளுக்கு கால்பாதம் மற்றும் வாயில் ஏற்படும் கோமாரி மற்றும் கருச்சிதைவு நோய்களை ஒழிக்க இந்த திட்டம் தொடங்கப்பட்டு உள்ளது.*
- *இந்த திட்டத்தின்படி 2024-க்குள் நாடு முழுவதும் ஆடு, மாடு, பன்றிகள் உள்ளிட்ட 50 கோடி கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்படும். ரூ.12,652 கோடி மதிப்பிலான இந்த திட்டம் மத்திய அரசின் 100 சதவீத நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும்.*
- *இந்த திட்டத்தின்படி, 2025-க்குள் இந்த நோய்களைக் கட்டுப்படுத்தவும், 2030-க்குள் முற்றிலும் ஒழிக்கவும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.*

**கால்நடை செயற்கை கருவூட்டல் திட்ட முகாம்**

- *விருத்தாசலம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில், தேசிய கால்நடை நோய்க் கட்டுப்பாடு மற்றும் செயற்கை முறை கருவூட் திட்ட முகாம் நடைபெற்றது.*
- *செயற்கை முறை கருவூட்டல் திட்டத்தை பிரதமர் நரேந்திர மோடி உத்தரப்பிரதேச மாநிலம், மதுராவில் தொடங்கி வைத்தார்.*

# 2.3 சமீபத்திய நீதிமன்ற தீர்ப்புகள்

### அபூர்வ நோய்க்கு மாற்று மருந்து நிபுணர் குழு அமைப்பதாக தகவல்

- அபூர்வமான நோய்க்கு, இந்திய மருத்துவத்தில் மாற்று மருந்து கண்டுபிடிக்க, நிபுணர்கள் குழுவை அமைக்க உள்ளதாக, சென்னை உயர்நீதி மன்றத்தில், தமிழக அரசு தெரிவித்துள்ளது. எல்.எஸ்.டி., எனப்படும், லைசோசோமால் ஸ்டோரேஜ் டிஸ்ஆர்டர் நோய் பாதிக்கப் பட்டனர்.

**மாற்று மருத்துவம்:**

- குறைந்த செலவில் சிகிச்சை பெறவும், மாற்று மருத்துவ முறைகளான சித்தா, ஆயுர்வேதம், யுனானி மற்றும் ஹோமியோபதியில் மருந்து கண்டுபிடித்து, குணப்படுத்த முடியுமா என்பதை ஆய்வு செய்ய, இந்திய மருத்துவத்தில் நிபுணத்துவம் பெற்ற மருத்துவர்கள் குழுவை அமைக்க உள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

### உச்சநீதிமன்ற வரலாற்றில் முதல் முறையாக ஜாமீன் மனுக்களை தனி நீதிபதி விசாரணை

- உச்சநீதிமன்ற வரலாற்றில் முதல்முறையாக ஜாமீன் மற்றும் முன்ஜாமீன் மனுக்களை தனி நீதிபதி அமர்வு விரைவில் விசாரிக்க இருக்கிறது. உச்சநீதிமன்றத்தில் அதிக அளவில் வழக்குகள் தேங்குவதைக் குறைக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### பாலியல் வன்கொடுமை, போக்ஸோ வழக்குகளை விசாரிக்க 1,023 சிறப்பு விரைவு நீதிமன்றங்கள்


- பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றச் சம்பவங்கள் தொடர்பாக நாடு முழுவதும் நிலுவையில் இருக்கும் 1.66 லட்சம் வழக்குகளை விரைந்து விசாரிக்க, 1,023 சிறப்பு விரைவு நீதிமன்றங்களை அமைக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது.
- நாட்டில் மொத்தம் 389 மாவட்டங்கள் உள்ள நிலையில், ஒவ்வொரு மாவட்டத்திலும் தலா 100-க்கும் மேற்பட்ட போக்ஸோ வழக்குகள் நிலுவையில் உள்ளன. எனவே, மாவட்டத்துக்கு தலா ஒரு போக்ஸோ நீதிமன்றம் பிரத்யேகமாக அமைக்க வேண்டும் என்று உச்சநீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.
- போக்ஸோ நீதிமன்றங்கள் தவிர்த்து, எஞ்சிய 634 விரைவு நீதிமன்றங்கள் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமை வழக்குகளை விசாரிக்கும். தேவையேற்படும் பட்சத்தில் அந்த வழக்குகளுடன் போக்ஸோ வழக்குகளையும் சேர்த்து இந்த நீதிமன்றம் விசாரிக்கும் என்று அந்த முன்மொழிவில் கூறப்பட்டுள்ளது.
- இந்த சிறப்பு விரைவு நீதிமன்றங்களை அமைக்கும் பணி அக்டோபர் 2-ஆம் தேதி தொடங்கவுள்ளதாக ஏற்கெனவே அறிவிக்கப் பட்டுள்ளது.

# 2.4 பொதுத் தேர்தலில் நடக்கும் பிரச்சனைகள்

### மகாராஷ்டிரம், ஹரியாணா பேரவைகளுக்கு அக்டோபர் 21 - இல் தேர்தல்

- மகாராஷ்டிரம் மற்றும் ஹரியாணா சட்டப் பேரவைகளுக்கு ஒரே கட்டமாக வரும் அக்டோபர் 21 ஆம் தேதி தேர்தல் நடத்தப்படும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. வாக்கு எண்ணிக்கை அக்டோபர் 24 இல் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.
- தமிழகம் உள்பட 18 மாநிலங்களில் உள்ள 64 சட்டப் பேரவைத் தொகுதிகளுக்கும் அக்டோபர் 21 இல் இடைத் தேர்தல் நடைபெறும்.

# 3. புவியியல்



## 3.1 சுற்றுச்சூழல் மற்றும் சுற்றுச்சூழல் பற்றிய கொள்கை

### சட்லஜ் நதிக்கரை

- சட்லஜ் நதி திபெத்தில் உற்பத்தியாகி, இந்தியாவின் இமாச்சல பிரதேச மாநிலத்தில் நுழைகிறது. அங்கிருந்து பஞ்சாப் மாநிலத்தில் நுழையும் இந்த நதி பெரோஸ்பூர் மாவட்டம் வழியாக சர்வதேச எல்லையில் பாகிஸ்தானுக்குள் நுழையும் மீண்டும் இந்தியாவுக்குள் வந்து பிறகு, பசில்கா மாவட்டத்தில் பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணம் காசுர் மாவட்டத்துக்குள் பாய்கிறது. தற்போது பாகிஸ்தான் கழிவுநீரால் சட்லஜ் நதிக்கரை சேதம் அடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பிஎஸ்-6 மாசுக்கட்டுப்பாட்டு தரத்தில் ஹார்லி டேவிட்சன் முதல் பைக் அறிமுகம்

- அமெரிக்காவைச் சேர்ந்த ஹார்லி டேவிட்ஸன் நிறுவனம், பிஎஸ்-6 மாசுக் கட்டுப்பாட்டு தரத்தில் தனது முதல் பைக்கை அறிமுகம் செய்தது. மோட்டார் வாகனங்களுக்கான பிஎஸ்-6 மாசுக்கட்டுப்பாட்டு தர நிர்ணய விதிமுறைகள் வரும் 2020-ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் அமலுக்கு வரவுள்ளன. இந்த நிலையில், நிறுவனம் முதன்முதலாக பிஎஸ்-6 தரக் கட்டுப்பாட்டில் **ஸ்டீரீட் 750** என்ற புதிய வகை பைக்கை இந்தியாவில் அறிமுகம் செய்துள்ளது.

### இரண்டு புதிய இனங்கள் கண்டுபிடிப்பு

- ஒடிசாவின் கோபால்பூர் கடலில் இரண்டு புதிய கடல் ஈல்கள் (eel Species) இந்திய விலங்கியல் ஆய்வின் எஸ்டுவாரைன் உயிரியல் பிராந்திய மையத்தால் கண்டுபிடிக்கப்பட்டு ஆவணப் படுத்தப்பட்டுள்ளன.

### காண்டாமிருகம் பிரச்சாரம்

- இந்திய கிரிக்கெட் அணியின் நட்சத்திர வீரர் ரோஹித் சர்மா, ஒற்றை கொம்பு காண்டாமிருகங்களைபாதுகாப்பதன்அவசியம் குறித்து விழிப்புணர்வை பரப்புவதற்காக சர்வதேச இயற்கைக்கான இந்திய நிதியம் மற்றும் அனிமல்பிளானட் (Animal Planet) உடன்இணைந்து தொடங்கிவைக்க உள்ளார். இப்பிரச்சாரத்தை செப்டம்பர் 22 சர்வதேச காண்டாமிருக தினத்தன்று தொடங்கப்பட உள்ளது. உலக மொத்த எண்ணிக்கையில் இந்தியாவில் 82 சதவீத காண்டாமிருகம் உள்ளது.


**இந்திய இயற்கைக்கான சர்வதேச நிதியம் (WWF India)**

- தொடக்கம் : 27 நவம்பர் 1969
- தலைமையிடம் : டெல்லி

### பச்சை நிறமாக மாறிய பாம்பன் கடல்

- பாம்பன் குந்துகால் கடற்கரை பகுதியில் கடல் நீரின் நிறம் பச்சையாக மாறியது. பூங்கேரை பாசியால் இந்த சம்பவம் நடந்துள்ளதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர். இதைத் தொடர்ந்து மரைக்காயல் பட்டினத்தில் உள்ள மத்தியக் கடல் மீன்வள ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் மன்னார் வளைகுடா கடல் பகுதியில் செப்டம்பர், அக்டோபர் ஆகிய மாதங்களில் **ஆல்கல் புளூம் எனும் கடற்பாசி** அதிக அளவில் உற்பத்தியாகும். இதை மீனவர்கள் **பூங்கோரை** என்று அழைப்பார்கள் மகரந்தச் சேர்க்கைக்காக இந்தப் பாசிகள் கடலில் படரும்போது கடல் நீர் திடீரென பச்சை நிறத்தில் காட்சியளிக்கும் என்று தெரிவித்தார்கள்.

## கிரேட் இந்தியன் பஸ்டார்ட் பாதுகாப்பதற்கான திட்டம் தயாரிக்க என்ஜிடி உத்தரவு




- *அழியும் நிலையில் உள்ள கிரேட் இந்தியன் பஸ்டார்ட் (Indian Bustard) பாதுகாக்க, தேசிய பசுமைத் தீர்ப்பாயம் இரண்டு மாதங் களுக்குள் செயல் திட்டத்தை தயாரிக்குமாறு தெரிவித்துள்ளது. தேசிய பசுமை தீர்ப்பாயத் தலைவர் ஆதர்ஷ் குமார் கோயல், சுற்றுச்சூழல், வன மற்றும் காலநிலை மாற்றம் அமைச்சகம் புதிய மற்றும் புதுப்பிக்கததக்க எரிசக்தி அமைச்சகம் அடங்கிய கூட்டுக் குழுவை அமைத்துள்ளது.*

**தேசிய பசுமை தீர்ப்பாயம்**

- *சட்டம் : 2010*
- *நடைமுறை : 5 மே 2010*
- *முதன்மை இருக்கை : டெல்லி*
- *தற்போதைய தலைவர் : ஆதர்ஷ் குமார் கோயல்.*

## நட்சத்திர ஆமைகள் மற்றும் நீர் நாய்கள் CITES பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது



- *சர்வதேச அழிவு நிலையில் உள்ள வன உயரினங்கள் வர்த்தகத்தை குறைப்பதற்கான அமைப்பு (CITES - Convention on International Trade in Endangered Species of Wild Fauna and Flora) இந்த நட்சத்திர ஆமைகள் மற்றும் நீர்நாய்கள்அதிகம் பாதுகாக்கப்பட வேண்டிய பட்டியலில் சேர்க்கப்படுகிறது. 18வது உறுப்பு நாடுகளில் கூட்டம் ஜெனீவாவில் சமீபத்தில் நடைபெற்றது. அங்கு இந்தியாவிலிருந்து அளிக்கப்பட்ட கோரிக்கையை ஏற்று CITES இவ்விரு விலங்குகளையும் பாதுகாப்பு பட்டியலில் இணைக்க ஒப்புதல் வழங்கியுள்ளது. இனி இவ்விரு விலங்குகளையும் CITES அட்டவணை 1ல் சேர்க்கப்பட்டு பாதுகாக்கப்படும்.*

## லியோ பார்க்கில் சிகரம் (Mt.Leo Pargyil)

- *இந்திய ராணுவத்தை சேர்ந்த குழுவினர் 6773 மீட்டர் உயரம் உள்ள லியோ பார்க்கில் சிகரத்தில் இந்திய தேசிய கொடியை ஏற்றி சாதனை புரிந்தனர். லெப்டினட் ஜெனரல் பி.எம்.பாலி தலைமையிலான குழு இமாச்சல பிரதேசத்தில் உள்ள மிகவும் சிரமமான பாதை கொண்ட சிகரத்தில் ஏறி சாதனை படைத்துள்ளனர். இந்த சிகரம் இமாச்சல பிரதேசத்தின் மூன்றாவது பெரிய சிகரம்.*

## புதிய பல்லி இனம் கண்டுபிடிப்பு

- *மேற்கு தொடர்ச்சி மலையில் சினேமாஸ்பிஸ் ஆனந்தன் (Anandan's day Gacko) என்ற புதிய பல்லி இனம் நீலகிரி மலைத்தொடரில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.*

## மத்திய உணவுத்துறை அமைச்சகம்

## நெகிழி பைக்கு தடை விதிப்பு

- மத்திய நுகர்வோர் விவகார உணவு மற்றும் பொது விநியோகம் அமைச்சகம், அனைத்து பொதுத்துறைகள், இந்திய உணவு நிறுவனம் உட்பட, செப்டம்பர் 15 முதல் அனைத்து வகையான ஒரு முறை பயன்படுத்தப்படும் நெகிழி பைக்கு தடை விதிப்பதாக அறிவித்துள்ளது.

## 'டோரியன்' புயல்

- டோரியன் என்ற சக்தி வாய்ந்த புயல், தீவு நாடான **பஹாமசை** தாக்கியது.

## மலேரியா பாதிப்பு 4<sup>வது</sup> இடத்தில் இந்தியா

- உலக அளவில் மலேரியா பாதிப்பில் இந்தியா 4-ஆவது இடத்தில் இருப்பதாக, தி லேன்செட் மருத்துவ இதழ் வெளியிட்ட ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அறிக்கையின்படி, கடந்த 2017-ஆம் ஆண்டில் உலகம் முழுவதும் மலேரியாவால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை சுமார் 22 கோடியாகும்.
- இந்தியாவில் மட்டும் சுமார் 1 கோடி பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். மலேரியா பாதிப்பில் ஆப்பிரிக்க நாடுகளான நைஜீரியா, காங்கோ ஜனநாயக குடியரசு, மொசாம்பிக் ஆகிய நாடுகள், முதல் 3 இடங்களில் உள்ளன.
- மலேரியா ஆய்வாளர்கள், உயிரி-மருத்துவ ஆய்வாளர்கள், பொருளாதார நிபுணர்கள், சுகாதார கொள்கை நிபுணர்கள் என சுமார் 40 வல்லுநர்கள் அடங்கிய குழுவால் தயாரிக்கப்பட்டுள்ள இந்த அறிக்கையில், 2030-ஆம் ஆண்டுக்குள் மலேரியாவை ஒழிப்பது இந்தியா உள்ளிட்ட நாடுகளுக்கு சவாலானது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## ரோடியோலா என்ற மூலிகையை வளர்க்க புதிய திட்டம்



- கடல் மட்டத்தில் இருந்து 16,000 அடி முதல் 18,000 அடி உயரம் கொண்ட லடாக் பகுதியில் மட்டுமே ரோடியோலா மூலிகை வளர்கிறது. இது நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும். கதிர்வீச்சு பாதிப்பில் இருந்து மக்களை பாதுகாக்கும் நினைவாற்றலை மீட்டுக் கொடுக்கும். சில வகை புற்றுநோய்க்கும் மருந்தாக உள்ளது. ஆக்ஸிஜன் பற்றாக்குறையாக இருக்கும் மலைப்பகுதிகளில் மக்களின் உயிர்காக்கும் மருந்தாக ரோடியோலா மூலிகை விளங்குகிறது.
- காஷ்மீரின் லடாக் பகுதியில் செயல்படும் மத்திய பாதுகாப்பு அமைச்சகத்தின் ஆராய்ச்சி நிறுவனம் (டி.ஐ.எச்.ஏ.ஆர்.), ரோடியோலா மூலிகையை அதிக அளவில் பயிரிட்டு வளர்க்க திட்டமிட்டுள்ளது.

## நிலத்தடி நீர் எடுப்பதை தடுக்க குழு தேசிய பசுமை தீர்ப்பாயம் நடவடிக்கை

- நிலத்தடி சட்டவிரோதமாக நிலத்தடி நீர் எடுப்பதை தடுப்பதற்கான நடவடிக்கைகளை வகுக்க மத்திய அரசு சைலேஷ் சிங் தலைமை யிலான குழுவை அமைத்தது. இக்குழு 2 மாதங்களில் தனது அறிக்கையை சமர்பிக்க வேண்டும் என்று உத்தரவிட்டது.

## வெப்பமான ஐந்து ஆண்டுகள்

- உலகின் சராசரி வெப்பநிலை 2015-2019 இதுவரை பதிவாகாத அளவுக்கு வெப்பமாக இருந்ததாகஐ.நா.வின் அறிக்கை தெரிவிக்கிறது. உலகின் முன்னணிப் பருவநிலை நிறுவனங்கள் இந்த அறிக்கையைத் தயாரித்திருக்கின்றன.
- ஐ.நா.பருவநிலை மாநாட்டில் பொதுச் செயலாளர் அந்தோனியோ குத்தேரஸ், பசுமைக்குடில் வாயுக்கள் குறைப்பு இலக்கை அதிகரிக்குமாறு உலக நாடுகளிடம் கேட்டுக் கொண்டுள்ளார்.

### பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை பிரச்சாரத்தை தொடங்கிய டிபிஐஐடி

- தொழில்துறை மற்றும் வர்த்தக அமைச்சகத்தின் கீழ் இயங்கும் உள்நாட்டு வர்த்தகம் மற்றும் தொழில்துறை (DPIIT) பிளாஸ்டிக் கழிவுகள் மேலாண்மை விழிப்புணர்வு பிரச்சாரத்தை செப்டம்பர் 11 அன்று துவங்கி வைக்கப்பட்டது.
- இந்த பிரச்சாரம் ஸ்வச்தா ஹை சேவா 2019 என்ற திட்டத்துடன் ஒருங்கிணைந்த இயக்கம் ஆகும். பிரதமர் நரேந்திர மோடியின் சுதந்திர தின உரையான பிளாஸ்டிக்கை ஒழிப்போம் என்ற சொல்லை செயலாக்கும் நோக்கில் செயல்படுத்தப்படுகிறது. இந்த இயக்கத்தின் இந்த ஆண்டுக்கான மையக்கருத்து: "Plastic Waste Management".

### காவிரி மீட்புத் திட்டம் : 16 பேர் கொண்ட சிறப்புக் குழு

- காவிரி மீட்புத் திட்டத்தில் 16 பேர் கொண்ட சிறப்புக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. கங்கை மறுசீரமைப்பு திட்டத்தின் கீழ் துணை நதிகளை மீட்டெடுக்கும் முயற்சியாக **நடந்தாய்வாழி காவிரி திட்டம்** செயல்படுத்தப்படும் என முதல்வர் எடப்பாடி க.பழனிசாமி அறிவித்திருந்தார்.
- கங்கை திட்டத்தை முன் உதாரணமாக கொண்டு காவிரி மறுசீரமைப்புப் பணிகள் தொடங்கப்பட உள்ளன. இதன் பகுதியாக அமைக்கப்பட்ட காவிரி மீட்புக்குழுவில் 16 உறுப்பினர்களை முதல்வர் நியமித்துள்ளார்.
- மத்திய ஜல்சக்தி அமைச்சகத்தின் நீர் மற்றும் மின் ஆலோசனை சேவைக் குழுவின் வழிகாட்டுதலின்படி ஒரு விரிவான திட்ட அறிக்கையைத் தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

### 2050-ம் ஆண்டிற்குள் கார்பன்-டை-ஆக்ஸைடு வெளியிடும் அளவை பூஜ்ஜியமாக மாற்ற முடிவு

- அமெரிக்காவின் நியூயார்க் நகரில் நடைபெற்ற ஐ.நா. சுற்றுச்சூழல் மாநாட்டில் பங்கேற்ற 66 நாடுகள் இணைந்து 2050 ம் ஆண்டிற்குள் தாங்கள் வெளியிடும் கார்பன்-டை-ஆக்ஸைடு அளவை பூஜ்ஜிய நிலைக்கு கொண்டு வர முடிவு செய்துள்ளது.
- 2015 ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பாரிஸ் உடன்படிக்கையை தீவிரத்துடன் செயல்படுத்தவும் அனைத்து நாடுகளும் உறுதி பூண்டுள்ளது.

### 1320 மெகாவாட் அனல்மின் நிலையம்

- பாரத் மின்சார கனரக தொழில் நிறுவனம் 1320 மெகாவாட் திறன் கொண்ட அனல் மின் நிலையம் ஒடிசா மாநிலத்தில் உள்ள ஜார்சுகுடா என்ற இடத்தில் தொடங்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒடிசா அரசு மற்றும் ஒடிசா மின் உற்பத்தி கார்பரேஷன் நிறுவனம் இணைந்து செயல்பட உள்ளது.

### H5N1 என்ற பறவை காய்ச்சல்

- விலங்குகள் ஆரோக்கியத்திற்கான சர்வதேச அமைப்பு இந்தியாவில் H5N1 என்ற பறவை காய்ச்சல் முற்றிலுமாக ஒழிக்கப்பட்டது என்று இந்நிறுவனம் தெரிவித்துள்ளது.



# 4. பொருளாதாரம்

## 4.1 புதிய பொருளாதாரக் கொள்கை மற்றும் அரசுத்துறை

### அமேசான் - வேலை வாய்ப்புதிட்டம் அறிமுகம்

- இ-காமர்ஸ் நிறுவனமான அமேசான் இந்தியாவில், முன்னாள் ராணுவ படை வீரர்களுக்கு வேலைவாய்ப்பு திட்டத்தை (Employment programme for Military Veterans and Their spouses) அறிமுகப்படுத்தி உள்ளது. இது நிறுவனத்தின் இராணுவ படைவீரர் மற்றும் அவர்களது குழந்தைகளுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கும்.

### எய்ட்ஸ், காசநோய், மலேரியா ஒழிப்புக்கான சர்வதேச நிதி

- தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கான உலக சுகாதார அமைப்பின் (டபிள்யு.ஹெச்.ஓ) பிராந்தியக் கூட்டம் தில்லியில் நடைபெற்றது. எய்ட்ஸ், காசநோய் (டி.பி), மலேரியா ஆகிய நோய்களை ஒழிப்பதற்கான சர்வதேச நிதிக்கு ரூ.160 கோடி வழங்க இந்தியா முடிவு செய்துள்ளது. 2020-22-ஆம் ஆண்டுக்கான இந்தியாவின் பங்களிப்பாக இந்த நிதி வழங்கப்படும் என்று மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் ஹர்ஷ்வர்த்தன் தெரிவித்துள்ளார்.

### இரண்டாம் நிலை சந்தை கடன்களை மேம்படுத்துவதற்கான பரிந்துரை

- இரண்டாம் நிலை சந்தை கடன்களை மேம்படுத்துவதற்கான பரிந்துரைகளை கனரா வங்கியின் தலைவரான டி.என்.மனோகரன் ரிசர்வ் வங்கியின் ஆளுநர் சக்திகந்த தாஸ்ஸிடம் சமர்பித்தார்.

### ஆதார் எண்ணை பயன்படுத்தி பணம் எடுக்கும் வசதி அறிமுகம்

- அஞ்சல்துறை சார்பில், ஆதார் எண்ணைப் பயன்படுத்தி இந்தியா போஸ்ட் பேமென்ட்ஸ் (ஐபிபிபி) வங்கியில் பணம் எடுக்கும் வசதி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம், எந்தவொரு வங்கியில் சேமிப்புக் கணக்கு வைத்திருந்தாலும், ஐபிபிபி வங்கியில் தங்களுடைய ஆதார் எண்ணை பயன்படுத்தி அதில் இருந்து பணம் எடுக்கலாம்.

### மொபைல் இல்லாமல் இனி ஏடிஎம்மில் எடுக்க முடியாது

- ஏடிஎம் மூலம் பணம் எடுக்க ஓடிபி (OTP) எனப்படும் பாஸ்வோர்டு பயன்படுத்தும் வசதியை கனரா வங்கி அறிமுகம் செய்துள்ளது. நாட்டிலேயே முதல் முறையாக இந்த வசதி கனரா வங்கியில் அறிமுகம் செய்து உள்ளது.

### மத்திய நேர்முக வரியின் புதிய சிறப்பு பிரிவு அமைப்பு

- மத்திய நேரடி வரிகள் வாரியம் ஏஞ்சல் வரியால் பாதிக்கப்படும் தொழில்முனைவான "ஸ்டார்ட் அப்" நிறுவனங்களின் குறைகளை களைவதற்காக 5 பேர் கொண்ட குழுவை நியமித்துள்ளது.
- "ஸ்டார்ட் அப் செல்" எனப்படும் இந்த குழுவின் தலைவராக நேரடி வரிகள் வாரியத்தின் உறுப்பினர் இருப்பார்.

## பொதுத் துறை வங்கிகள் இனி 12 மட்டுமே

- வங்கித் துறையில் மிகப்பெரிய சீர்திருத்தமாக, பல்வேறு பொதுத் துறை வங்கிகளை இணைப்பதாக மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அறிவித்தார். மத்திய அரசின் இந்த இணைப்பு நடவடிக்கைக்குப் பிறகு 12 பொதுத் துறை வங்கிகள் மட்டுமே இருக்கும். பொதுத் துறை வங்கிகளை சர்வதேச தரத்துக்கு மாற்றும் முயற்சியாகவும், வங்கிகளின் கடன் வழங்கும் திறனை அதிகப்படுத்தவும் இந்த நடவடிக்கையை மத்திய அரசு மேற் கொண்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

### இணைக்கப்படும் வங்கிகள்

| | |
|---|---|
| பஞ்சாப் நேஷனல் வங்கி | யுனைடெட் பாங்க் ஆஃப் இந்தியா |
| | ஓரியண்டல் பாங்க் ஆஃப் காமர்ஸ் |
| யூனியன் பாங்க் ஆஃப் இந்தியா | ஆந்திரா வங்கி |
| | கார்ப்பரேஷன் வங்கி |
| கனரா வங்கி | சிண்டிகேட் வங்கி |
| இந்தியன் வங்கி | அலகாபாத் வங்கி |

### தனித்தே இயங்க உள்ள வங்கிகள்

| |
|---|
| இந்தியன் ஓவர்சீஸ் வங்கி |
| யூகோ வங்கி |
| பாங்க் ஆஃப் மகாராஷ்டிரா |
| பஞ்சாப் & சிந்து வங்கி |
| பேங்க் ஆஃப் இந்தியா |
| சென்ட்ரல் பாங்க் ஆஃப் இந்தியா |
| ஐடிபிஐ வங்கி (தனியார் வங்கியாக கடந்த ஜனவரியில் அறிவிப்பு) |

### ஏற்கெனவே இணைக்கப்பட்ட வங்கிகள்

| | |
|---|---|
| பரோடா வங்கி | தேனா வங்கி |
| | விஜயா வங்கி |
| பாரத ஸ்டேட் வங்கி | ஸ்டேட் பாங்க் ஆஃப் பிகானீர் & ஜெய்ப்பூர் |
| | ஸ்டேட் பாங்க் ஆஃப் மைசூர் |
| | ஸ்டேட் பாங்க் ஆஃப் திருவாங்கூர் |
| | ஸ்டேட் பாங்க் ஆஃப் பாட்டியாலா |
| | பாரதிய மகிளா வங்கி |

| வங்கியின் தரநிலை | வங்கி | மதிப்பு |
|---|---|---|
| முதலாவது | பாரத ஸ்டேட் வங்கி | ரூ.52.05 லட்சம் கோடி |
| 2வது | பஞ்சாப் நேஷனல் வங்கி | ரூ.17.94 லட்சம் கோடி |
| 3வது | பேங்க் ஆஃப் பரோடா | ரூ.16.13 லட்சம் கோடி |
| 4வது | கனரா வங்கி | ரூ.15.2 லட்சம் கோடி |
| 5வது | யூனியன் பாங்க் ஆப் இந்தியா | ரூ.14.59 லட்சம் கோடி |

## சுபாஷ் சந்திர கார்க் கமிஷன்

- நிதி தொழில்நுட்பம் சார்ந்த சீரமைப்புகள் மேற்கொள்வதற்காக 2018-19ம் ஆண்டு பட்ஜெட்டில் சுபாஷ் சந்திர கார்க் (நிதி செயலாளர்) தலைமையில் குழு ஏற்படுத்தப் பட்டது. சிறு, குறு தொழில் நிறுவனங்கள் வாயிலாக உள்ளடங்கிய பொருளாதார சூழலை ஏற்படுத்தும் நோக்கில் அமைக்கப்பட்ட இந்த குழுவின் பரிந்துரைகள் நிதி அமைச்சரிடம் சமர்பிக்கப்பட்டுள்ளது. இடையில் நிதி செயலாளராக ராஜீவ் குமார் நியமிக்கப்பட்ட போதிலும் அறிக்கை சுபாஷ் சந்திர கார்க் தலைமையிலேயே இறுதி செய்யப்பட்டது.

## புதிய "Digismart" கிரெடிட் கார்டு

- இங்கிலாந்தைச் சேர்ந்த ஸ்டாண்டர்ட் சார்டர்டு பேங்க் புதிய டிஜிஸ்மார்ட் என்ற கடன் அட்டையை அறிமுகம் செய்துள்ளது.

## அந்நிய நேரடி முதலீடு 28 சதவீதம் உயர்வு

### சிங்கப்பூர் அதிக முதலீடு

- இந்தியாவில் அதிக அந்நிய நேரடி முதலீடு செய்த நாடுகளில் சிங்கப்பூர் முதலிடத்தில் இருக்கிறது. ரூ.37,310 கோடி அளவில் சிங்கப்பூர் முதல் காலாண்டில் இந்தியாவில் முதலீடு செய்து இருக்கிறது.

| தரவரிசை | நாடு | முதலீடு |
|---|---|---|
| இரண்டாவது | மொரிஷியஸ் | ரூ.32,690 கோடி |
| மூன்றாவது | அமெரிக்கா | ரூ.10,150 கோடி |
| நான்காவது | நெதர்லாந்து | ரூ.9,450 கோடி |
| ஐந்தாவது | ஜப்பான் | ரூ.3,304 கோடி |

## எந்த வங்கியில் கணக்கு இருந்தாலும் தபால் நிலையங்களில் பணம் எடுக்கலாம்

- எந்த வகையில் கணக்கு வைத்திருந்தாலும் இனிமேல் தபால் நிலையங்களில் பணம் எடுக்கலாம். இந்த புதிய சேவை அமலுக்கு வந்துள்ளது.

### தமிழகத்துக்கு விருது

- இந்திய போஸ்ட் பேமண்ட் வங்கியின் ஓராண்டு நிறைவையொட்டி, தபால் வங்கி சேவையை சிறப்பாக செயல்படுத்திய மாநிலங்களுக்கு மத்திய அமைச்சர் ரவிசங்கர் பிரசாத் விருதுகளை வழங்கினார்.
- இதில் ஊழியர்களின் சிறந்த செயல்பாட்டுக்காக (கோன் பனேகா பாகுபலி) இந்திய அளவில் முதல் இடத்துக்கான விருதை தமிழகம் பெற்றது. அதைப்போல **டிஜிட்டல் கிராமம் திட்டத்தில்** 3-வது இடத்துக்கான விருதையும் தமிழகம் பெற்றது.
- இந்த விருதுகளை தமிழக தலைமை தபால் துறை தலைவர் சம்பத் தலைமையிலான குழுவினர் பெற்றுக்கொண்டனர்.

## ரஷ்யாவின் தூரக்கிழக்கு பகுதியின் வளர்ச்சிக்காக இந்தியா ரூ.7,200 கோடி நிதியுதவி

- ரஷ்யாவின் தூரக்கிழக்கு பகுதியின் வளர்ச்சிக்காக இந்தியா ரூ.7,200 கோடி கடன் வழங்கும் என பிரதமர் நரேந்திர மோடி அறிவித்தார். இந்தியா-ரஷ்யா 20-வது வருடாந்திர உச்சி மாநாடு நடைபெற்றது.
- இருதரப்பு பிரதிநிதிகள் பங்கேற்ற இதில், பாதுகாப்பு, வான் மற்றும் கடல் வழி இணைப்பு, அணுசக்தி, இயற்கை எரிவாயு மற்றும் பெட்ரோலியம் மற்றும் வர்த்தகம் உள்ளிட்ட பல்வேறு துறைகள் தொடர்பாக 15 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின.
- விளாடிவாஸ்டாக் நகரில் கிழக்கிந்திய பொருளாதார பேரவையின் (இஇஎப்) மாநாடு தொடங்கியது. இதில் வர்த்தகம் மற்றும் முதலீட்டு வாய்ப்புகளை இப்பகுதியில் அதிகரிப்பது தொடர்பாக ஆலோசிக்கப் பட்டது.
- ரஷ்யாவின் தூரக்கிழக்கு பகுதியுடன் இந்தியாவுக்கு நீண்டகால தொடர்பு உள்ளது. விளாடிவாஸ்டாக் நகரில் துணைத் தூதரகத்தை திறந்த முதல் நாடு இந்தியா.

## உணவுப் பூங்காக்கள் அமைக்க உலக வங்கி ரூ.3,000 கோடி நிதி

- இந்திய-அமெரிக்க வர்த்தக சபையின் வட இந்திய கவுன்சில் ஐஏசிசி-என்ஐசி சார்பில் 15-ஆவது இந்திய-அமெரிக்க பொருளாதார மாநாடு தில்லியில் நடைபெற்றது. இதில் நாடு முழுவதும் சிறிய மற்றும் பெரிய அளவிலான உணவு பூங்காக்களை அமைக்க ரூ.3,000 கோடி நிதியுதவியை அளிப்பதற்கு உலக வங்கி ஒப்புக் கொண்டுள்ளதாக மத்திய உணவுப் பதப்படுத்துதல் துணை இணையமைச்சர் தெரிவித்துள்ளார்.

## வீட்டு கடன்களுக்கான சந்தை பாதுகாப்பை மேம்படுத்துவதற்கான குழு

- வீட்டு கடன்களுக்கான சந்தை பாதுகாப்பு மேம்படுத்துவதற்கான அறிக்கையை அளிக்க ஹர்ஷவர்தன் தலைமையிலான குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கையை ரிசர்வ் வங்கி ஆளுநர் சக்திகாந்த் தாஸ் அவர்களிடம் சமர்பிக்கப்படவுள்ளது.

### மும்பையை விட லண்டனில் ரூபாய் வர்த்தகம் அதிகம்

- ரூபாய் வர்த்தகம் மும்பையைவிட லண்டனில் அதிகமாக உள்ளது. லண்டனில் தினசரி ரூபாய் வர்த்தகம் கடந்த ஏப்ரலில் 46.8 பில்லியன் டாலர் அளவாக உயர்ந்துள்ளது. 2016-ம் ஆண்டில் அது 8.8 பில்லியன் டாலராக இருந்தது. கிட்டத்தட்ட இது 5 மடங்கு உயர்வு ஆகும்.
- இந்தியாவில் தினசரி ரூபாய் வர்த்தகம் 34.5 பில்லியன் டாலர் அளவிலேயே உள்ளது. சர்வதேச தீர்வுகளுக்கானவங்கி(பிஐஎஸ்) வெளியிட்ட ஆய்வறிக்கையில்இந்தத்தகவல்குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நிலையில் உள்நாட்டில் ரூபாய் வர்த்தகத்தை அதிகரிக்கச் செய்ய வேண்டிய கட்டாயத்தில் இந்திய அரசு உள்ளது.
- லண்டனைத் தவிர சிங்கப்பூர், ஹாங்காங், அமெரிக்கா ஆகிய நாடுகளிலும் ரூபாய் வர்த்தகம் கடந்த மூன்று ஆண்டுகளில் உயர்ந்துள்ளது. கடந்த மாதம் ரிசர்வ் வங்கியின் குழு, உள்நாட்டில் ரூபாய் வர்த்தகத்தை அதிகரிக்க, வர்த்தக நேரத்தை உயர்த்த வேண்டும் என்ற திட்டத்தை முன்வைத்துள்ளது.

### நிதி ஒதுக்கீட்டு தேவையை ஆய்வு செய்ய சிறப்புக்குழு

- உள்கட்டமைப்புத் துறை சார்ந்த திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீட்டுத் தேவைகளை ஆய்வு செய்ய சிறப்புக் குழு அமைக்கப்பட்டிருப்பதாக மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராம் தெரிவித்தார்.
- அந்தக் குழுவில் பல்வேறு அமைச்சர்கள், நீதிஆயோக் தலைமை செயல் அதிகாரி, உயர் அதிகாரிகள் உள்ளிட்டோர் இடம் பெற்றுள்ளனர். உள்கட்டமைப்புத்துறைசார்ந்த திட்டங்களுக்காக ரூ.100 லட்சம் கோடி நிதி ஒதுக்கீடு ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ளது. அந்த நிதியானது நாட்டின் உள்கட்டமைப்புத் திட்டப் பணிகளை விரைந்து மேற்கொள்ள வழி வகுக்கும்.

### விவசாயத் துறை நிர்வகிக்க ஜி.எஸ்.டி கவுன்சில் போன்ற கூட்டாட்சி அமைப்பு உருவாக்க திட்டம்

- ரிசர்வ் வங்கியின் சிறப்பு குழு அரசுக்கு அளித்த பரிந்துரையை விவசாயத் துறையில் மாற்றங்கள் ஏற்படுத்த தன்னாட்சி பெற்ற அமைப்பை ஏற்படுத்துவது அவசியம் என கூறப்பட்டு உள்ளது. மேலும் மானியங்களை விவசாயிகளின் வங்கி கணக்கிற்கு நேரடியாக செலுத்தும் முறையை மேம்படுத்தவும் பரிந்துரைகளை அளித்துள்ளது.
- விவசாய கடன்களை பரிசீலனை செய்ய மகேஷ் குமார் ஜெயின் தலைமையில் ஒரு இடைநிலை குழுவை ரிசர்வ் வங்கி அமைத்துள்ளது.

### ஏற்றுமதி வளர்ச்சிக்கு ரூ.50,000 கோடி

- ஏற்றுமதி வளர்ச்சிக்காக ரூ.50,000 கோடி வழங்கப்படும் என்று மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அறிவித்தார்.

### மார்ச்சில் மாபெரும் விற்பனை கண்காட்சி

- உலகப் புகழ் வாய்ந்த துபாய் விற்பனை கண்காட்சியைப் போலவே இந்தியாவில் 4 இடங்களில் வரும் மார்ச் மாதம் மிகப்பெரிய அளவில் விற்பனை கண்காட்சி நடத்தப்படும் என்று தெரிவித்தார்.

### சர்வதேச நாணய நிதியம் 2020ஆம் ஆண்டிற்கான ஜி.டி.பி கணிப்பு

- சர்வதேச நாணய நிதியம் (ஐ.எம்.எஃப்) இந்தியாவின் 2020ஆம் ஆண்டிற்கான மொத்த உள்நாட்டு உற்பத்தி 7.3 சதவீதம் இருந்து 7 சதவீதம் இருக்கும் என கணித்து உள்ளது. சில வங்கி சாரா நிதி நிறுவனங்களின் சீரற்ற செயல் பாட்டுச் சூழல் மற்றும் நிச்சயமற்ற வளர்ச்சி தன்மையே இந்த குறைப்புக்கு காரணம் என தெரிவித்துள்ளது.

### இந்தியாவின் உடனடி கட்டண சேவை (IMPS)

- இது 22 நவம்பர் 2010 ல் நிறுவப்பட்ட இந்தியாவின் உடனடி கட்டணம் செலுத்தும் இடை - வங்கி மின்னணு நிதி பரிமாற்ற அமைப்பு ஆகும்.
- இது இந்திய தேசிய பணப்பரிவர்த்தனை கழகம் (என்.பி.சி.ஐ.) நிர்வகிக்கிறது.

## மறு ஆய்வில், '59 நிமிடங்களில் கடன்' திட்டம்

- மத்திய அரசு, '59 நிமிடங்களில் கடன்' எனும் திட்டத்தை மேலும் பயனுள்ளதாக மாற்ற இருப்பதாக, மத்திய குறு, சிறு, நடுத்தர நிறுவனங்கள் துறை அமைச்சர், நிதின் கட்கரி தெரிவித்துள்ளார். 'ஆன்லைன்' மூலமாக கடன் வழங்கும், நாட்டின் மிகப்பெரிய இந்த திட்டம், பிரதமர் நரேந்திர மோடியால், கடந்த ஆண்டு நவம்பரில் அறிமுகம் செய்யப்பட்டது.
- குறு, சிறு, நடுத்தர நிறுவனங்கள் கடன் வசதி பெறுவதை எளிதாக்கவும், வெளிப்படையான முறையில் அவர்களுக்கு கடன் வழங்கவும், இந்த திட்டம் அறிமுகம் செய்யப்பட்டது.
- இந்த கடன் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட நான்கு மாதங்களுக்குள், 35 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான கடன்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

## ஃபோர்ப்ஸ் பட்டியலில் இன்ஃபோசிஸ்

- ஃபோர்ப்ஸ் பத்திரிக்கை தேர்வு செய்த மிகச்சிறந்த நிறுவனங்களின் பட்டியலில் இன்ஃபோசிஸ், டிசிஎஸ் உள்ளிட்ட 17 இந்திய நிறுவனங்கள் இடம் பெற்றுள்ளன. உலக அளவில் மிகச் சிறப்பாக செயல்படும் நிறுவனங்களின் பட்டியலை ஃபோர்ப்ஸ் பத்திரிக்கை நிறுவனம் ஆண்டுதோறும் தொகுத்து வருகிறது. தற்போது அந்நிறுவனம் வெளியிட்டுள்ள 2019 ஆம் ஆண்டுக்கான பட்டியலில் இந்தியாவைச் சேர்ந்த தகவல் தொழில்நுட்ப நிறுவனமான இன்ஃபோசிஸ் மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளது.
- கடந்த 2018 ஆம் ஆண்டு 31 ஆவது இடத்தில் இருந்த இந்நிறுவனம் தற்போது முதல் மூன்று இடங்களுக்குள் வந்துள்ளது. இப்பட்டியலில் சர்வதேச பேமண்ட்ஸ் நிறுவனமான விசா முதலிடத்திலும், கார் தயாரிப்பில் ஈடுபட்டு வரும் ஃபெராரி இரண்டாவது இடத்திலும் உள்ளன.

## பெரு நிறுவன வரி 25.17 சதவீதமாக குறைப்பு

- கோவா தலைநகர் பனாஜியில் நடைபெற்ற ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டம் நடைபெற்றது.
- உள்நாட்டு நிறுவனங்களுக்கான பெரு நிறுவன வரியை (கார்பரேட் வரி) மத்திய அரசு 25.17 சதவீதமாகக் குறைத்துள்ளது. இது சுமார் 10 சதவீத வரிக் குறைப்பதாகும். இந்த வரிக் குறைப்பு கடந்த ஏப்ரல் மாதம் முதல் முன்தேதியிட்டு அமலுக்கு வருகிறது.
- இதன் மூலம் அரசுக்கு ஆண்டுதோறும் ரூ. 1.45 லட்சம் கோடி வருவாய் இழப்பு ஏற்படும். மத்திய அரசின் முடிவை பெரு நிறுவனங்கள் மற்றும் தொழில் துறையினர் வரவேற்றுள்ளனர்.
- அடிப்படையில் பெரு நிறுவன வரி இப்போதுள்ள 30 சதவீதத்தில் இருந்து 22 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது.

### இதுவே முதல் முறை:

- கடந்த 1991 ஆம் ஆண்டு இந்தியாவில் தாராளமயமாக்கல் கொள்கை அறிமுகப் படுத்தப்பட்டது. அதன் பிறகு பெரு நிறுவன வரி ஒரே நாளில் இந்த அளவுக்கு குறைக்கப்படுவது இதுவே முதல் முறையாகும். கடந்த 1997 ஆம் ஆண்டில் பெரு நிறுவன வரி மிக அதிகபட்சமாக 38.05 சதவீதமாக இருந்தது.

### பிற நாடுகளின் வரி விகிதம்:

- ஆசியக் கண்டத்தில் சீனா, தென்கொரியா, இந்தோனேசியா உள்ளிட்ட நாடுகளில் பெரு நிறுவன வரி 25 சதவீதமாகவும், மலேசியாவில் 24 சதவீதமாகவும் உள்ளது. ஆசிய நாடுகளில் அதிகபட்சமாக ஜப்பான் மட்டுமே இப்போது இந்தியாவைவிட அதிகமாக, அதாவது 30.6 சதவீத நிறுவன வரி விதித்து வருகிறது.

## 5 லட்சம் கோடி டாலர் பொருளாதார இலக்கை அடைய 12 சதவீத வங்கி கடன் வளர்ச்சி அவசியம்: எஸ்பிஐ

- மத்திய அரசின் இலக்கான 5 லட்சம் கோடி டாலர் பொருளாதார இலக்கை அடைவதற்கு ஆண்டுதோறும் 12 சதவீத வங்கி கடன் வளர்ச்சி அவசியம் என பாரத ஸ்டேட் வங்கியின் நிர்வாக இயக்குநர் தினேஷ் குமார் கரா தெரிவித்துள்ளார்.

# 4.2 தற்போதைய சமூக பொருளாதார சிக்கல்

### 178 ஆண்டு பழமையான சுற்றுலா நிறுவனம் 'தாமஸ் குக்'

- *சர்வதேச அளவில் மிகவும் பிரபலமான, பழமையான பயண ஏற்பாட்டு நிறுவனமான தாமஸ் குக் திவாலானது. 178 ஆண்டு பழமையான இந்நிறுவனம் 25 கோடி டாலர் கடன் சுமையால் திவாலாகியுள்ளது. 1841ம் ஆண்டு உருவாக்கப்பட்ட இந்நிறுவனத்துக்கு 16 நாடுகளில் 21 ஆயிரம் பணியாளர்கள் உள்ளனர்.*
- *உலகிலேயே மிகவும் பழமையான சுற்றுலா நிறுவனமாக இது திகழ்கிறது. இந்நிறுவனத்துக்கு உள்ள மொத்த கடன் சுமை 210 கோடி டாலராகும்.*

EXTRA News

### இந்தியாவுடன் விரைவில் வர்த்தக ஒப்பந்தம்

*இந்தியா-அமெரிக்கா இடையே பொருளாதார உறவுகளை ஊக்குவிக்கும் நோக்கில் விரைவில் புதிய வர்த்தக ஒப்பந்தம் செய்து கொள்ளப்படும் என்று பிரதமர் நரேந்திர மோடியுடனான சந்திப்பின் போது அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் தெரிவித்தார்.*

- *ஐ.நா. பொதுச் சபையின் 74 ஆவது ஆண்டுக் கூட்டத்தின் பொது விவாதம் தொடங்கியுள்ள நிலையில், அதில் உரை நிகழ்த்துவதற்காகவும், பல நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காகவும் பிரதமர் நரேந்திர மோடி அமெரிக்காவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டார்.*
- *ஹூஸ்டன் நகரில் நடைபெற்ற 'மோடி நலமா' (ஹெளடி மோடி) நிகழ்ச்சியில் பங்கேற்ற அவர், இந்திய வம்சாவளியினர் மத்தியில் உரையாற்றினார். இந்த நிகழ்ச்சியில் மோடியுடன் அதிபர் டொனால்ட் டிரம்ப்பும் ஒரே மேடையில் பங்கேற்றுப் பேசியது உலக நாடுகளின் கவனத்தை ஈர்த்தது. இந்தியா-அமெரிக்கா இடையிலான உறவுகளை மேம்படுத்துவது தொடர்பாக, அதிபர் டிரம்ப்பும், மோடியும் சந்தித்து பேச்சுவார்த்த நடத்தினர்.*
- *இரு நாடுகளுக்கும் இடையே விரைவில் வர்த்தக ஒப்பந்தம் செய்து கொள்ளப்படும். இது தொடர்பாக வர்த்தகத் துறை ஆலோசகர் ராபர்ட் லைத்திஸர் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறார் என்று கூறப்பட்டுள்ளது.*

# 5. அறிவியல்




## 5.1 அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகள்

### திசுக்கள் உயிரி வங்கி மூலம் புற்றுநோய்க்கான சிகிச்சை முறைகளை உருவாக்க முடியும்

- சென்னை ஐ.ஐ.டி.யில் உள்ள திசுக்கள் உயிரி வங்கி மூலம் புற்றுநோய்க்கான சிகிச்சை முறைகளை உருவாக்க முடியும் என்று மத்திய மந்திரி அஸ்வினி குமார் சவுபே தெரிவித்துள்ளார்.

**புற்றுநோய் திசுக்கள் உயிரி வங்கி**

- மத்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகமும், சென்னை ஐ.ஐ.டி.யும் இணைந்து தேசிய புற்றுநோய் திசுக்கள் உயிரி வங்கியை உருவாக்கி உள்ளது. இந்த உயிரி வங்கியானது தற்போது, புற்றுநோய் மரபணுவியல் தரவுகளை மேம்படுத்த திட்டமிட்டுள்ளது.
- சென்னை ஐ.ஐ.டி.யில் உருவாக்கப்பட்டுள்ள நாட்டிலேயே தனித்துவமிக்க இந்த தேசிய புற்றுநோய் திசுக்கள் உயிரி வங்கியை மத்திய சுகாதாரத்துறை இணை மந்திரி அஸ்வினி குமார் சவுபே பார்வையிட்டார்.

### ஆரவ் ஆளில்லா அமைப்பு

- பெங்களூரின் ஆரவ் என்ற நிறுவனம் வடிவமைத்த ஆளில்லா சிறிய ட்ரோன் இந்திய விமான போக்குவரத்து இயக்குநகரத்தின் சான்றிதழ் பெற்றுள்ளது. தனியார் நிறுவனத்தின் முதல் ஆளில்லா சிறிய ட்ரோன்களில் முதன் முதலில் பயன்பாட்டு சான்றிதழ் பெற்ற நிறுவனம் ஆரவ் என்பது குறிப்பிடத்தக்கது.

- தானியங்கி வானூர்தி (Unmanned Aerial Vehicle - UAV) என்பது ஆளில்லாமல் தானே இயங்கும். இவை ராணுவப் பணிகளுக்காக அதிகமாக பயன் படுத்தப்படுகின்றன.

### ஆர்.வி.ஐ. 16 எக்ஸ் நானோ சிப் உருவாக்கம்

- எம்.ஐ.டி யைச் சேர்ந்த விஞ்ஞானிகள் கார்பன் நானோ டியூபால் மிகப்பெரிய கணினி சிப் ஆர்.வி.ஐ. 16 எக்ஸ் நானோ (RVI 16X Nano) உருவாக்கி உள்ளனர். இந்த ஆர்.வி.ஐ. 16 எக்ஸ் நானோ சிப் 14 டிரான்சிஸ்டர்களை உள்ளடக்கியது.

### செஞ்சி அருகே பாக்கம் காப்புக்காடு பகுதியில் கண்டறியப்பட்ட அபூர்வ வகை சிலந்தி

- விழுப்புரம் மாவட்டம் செஞ்சி அருகே பாக்கம் காப்புக்காடு பகுதியில் அரியவகை சிலந்தியை உள்நாட்டு பல்லுயிர் பாதுகாப்பு அமைப்பு கண்டறிந்துள்ளது. கிழக்கு தொடர்ச்சி மலைகளிலும் இந்த சிலந்திகள் வாழ்கின்ற என்பதை கண்டறியப்பட்டுள்ளது.

**ரெஜினால்டு குழு:**

- தற்போது கண்டறியப்பட்ட சிலந்தி, அழியும் நிலையில் உள்ள உயிரினமாகும். இது பாறைகளுக்கு அடியிலும், பாறை இடுக்குகளிலும் உயிர் வாழும்.
- ஆந்திர மாநிலம் நந்தியாலு, கிட்டலுர் இடைப்பட்ட காடுகளில் பூட்டி என்ற இடத்தில் 1899-ம் ஆண்டு இந்த வகை சிலந்தியை ரெஜினால்டு தலைமையிலான குழுவினர் கண்டறிந்தனர்.

## மலிவு விலையில் தயாரித்த சிறிய குளிர்சாதனப் பொட்டி

- *சிறு விவசாயிகளும் பயன்படுத்துவதற்கு ஏற்ப தரமான, மலிவான, சிறிய குளிர்பதனப் பெட்டியை சென்னை ஐஐடியை சேர்ந்த மாணவர்கள் உருவாக்கியுள்ளர். இந்த சிறிய குளிர்சாதனப் பெட்டி 58 லிட்டர் கொள்ளளவு கொண்டது.*

## சாம்பலில் இருந்து நீர் சுத்திகரிப்பு பொருள் தயாரிப்பு

- *இந்திய தொழில்நுட்ப நிறுவனம் ஹைதராபாத்தை சேர்ந்த மாணவர்கள் நிலக்கரி சார்ந்த அனல் மின் நிலையங்களில் இருந்து வெளிவரும் சாம்பலை கொண்டு நீர் சுத்திகரிப்பு பொருள் தயாரித்து உள்ளனர். இந்த சாம்பலை ஸ்டெரிக் அமிலமாக மாற்றி, நீர் சுத்திகரிப்பு பொருளை தயாரித்துள்ளனர். இந்த ஸ்டெரிக் அமிலம் பொதுவாக சோப் மற்றும் ஸாம்புகளில் உபயோகிக்கப்படுகிறது.*

## மின்சாரம், டீசல் இரண்டிலும் இயங்கும் டிராக்டர்

- *மின்சாரம், டீசல் ஆகிய இரண்டிலுமே இயங்கக் கூடிய ஹைபிரிட் டிராக்டர் ரகத்தை எஸ்கார்ட்ஸ் நிறுவனம் இந்தியாவில் முதல் முறையாக அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த டிராக்டரை பேட்டரி மூலமும் இயக்க முடியும். அவ்வாறு இயக்கும்போது அந்த டிராக்டர் புகை மாசை ஏற்படுத்தாது. பேட்டரியின் மின்சக்தி தீர்ந்து போனால், இந்த டிராக்டரை டீசல் மூலமும் இயக்க முடியும் என்று நிறுவனம் தெரிவித்தது.*


## இந்திய தாவரவியலாளர்கள் புதிய இரண்டு வகை இஞ்சி இனம் கண்டறிந்துள்ளனர்

- *இந்திய தாவரவியலாளர்கள் நாகலாந்து மாநிலம் பெரன் மாவட்டத்தில் புதிய இரண்டு வகை இஞ்சி இனம் கண்டறிந்துள்ளனர். இந்த புதிய வகை இஞ்சியின் பெயர்கள்* Zinger Perenense *மற்றும்* Zingiber dimapurense *என்பதாகும்.*

**இந்திய தாவரவியல் ஆய்வு மையம்**

- *தலைமையகம் : கொல்கத்தா*
- *தொடக்கம் : பிப்ரவரி 13, 1890*

## தமிழகத்தில் முதன் முறையாக சேலத்தில் கண்டுபிடிப்பு ஒளி ஊடுருவும் இறகுகள் கொண்ட வண்ணத்துப்பூச்சி



- *தமிழகத்தில் முதன்முறையாக ஒளி ஊடுருவும் இறகுகள் கொண்ட வண்ணத்துப் பூச்சி சேலத்தில் கண்டறியப்பட்டுள்ளது. வண்ணத்துப்பூச்சிகளில் ஒளி ஊடுருவும் தன்மை கொண்ட இறகுகளைக் கொண்ட அரிய வகைகள் உள்ளன. அவற்றில்,* **இண்டியன் பைரட்** *எனப்படும்* **டாருகஸ் இன்டிகா** (Indian Pierrot - Tarucus Indica) *என்ற மிகவும் அரிதான வண்ணத்துப்பூச்சி குரும்பபட்டி உயிரியல் பூங்காவை அடுத்துள்ள மலையடிவாரத்தில் இருந்ததைக் கண்டறியப்பட்டுள்ளது.*
- *இந்த வகை வண்ணத்துப்பூச்சிகள் நீலன் வகை என தமிழில் அழைக்கப்படுகின்றன. 2 செ.மீ., நீளம் கொண்டுள்ள இந்த வண்ணத்துப்பூச்சியின் இறகுகள் 26 மிமீ முதல் 29 மி.மீ., நீளத்துடன் காணப்படுகின்றன.* **டாருகஸ் இண்டிகா** *வகை, இந்தியாவில் மகாராஷ்டிரா, ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் இருந்து கண்டறியப்பட்டுள்ளது.*

## மூன்று செயற்கைக்கோள்களை விண்ணில் செலுத்தியது சீனா

- *சீனாவில் உருவாக்கப்பட்ட 3 செயற்கைக்கோள்களை அந்த நாட்டின் லாங் மார்ச் -4பி ராக்கெட் விண்ணில் செலுத்தியது. அந்த 3 செயற்கைக்கோள்களில் ஒன்றான* **இஸட்ஒய்–102டி**, *சீன விண்வெளி தொழில்நுட்ப நிறுவனத்தால் உருவாக்கப்பட்டதாகும். பிற செயற்கைகோள்களுடன் தகவல் இணைப்பை ஏற்படுத்தி பூமியிலுள்ள வள ஆதாரங்களைக் குறித்து துல்லியமான தகவல்களை இஸட்ஒய்-102டி செயற்கைக்கோள் பெற்றுத் தரும்.*

### பூமியைப் போன்ற மற்றொரு கிரகத்தில் நீர் : விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பு

- பூமியிலிருந்து 110 ஒளிவருட தூரத்தில் இருக்கும் கே2-18பி என்ற கிரகம், பூமியைப் போல் 8 மடங்கு பெரிதானது. இதுவரை கண்டறியப்பட்ட கிரகங்களிலேயே, உயிரினங்கள் வசிப்பதற்கு ஏற்ற தட்பவெப்ப நிலையைக் கொண்டுள்ள, பூமி அல்லாத ஒரே கிரகம் இதுவாகும்.
- கே2-18பி என்ற நட்சத்திரத்தைச் சுற்றி வரும் அந்த கிரகத்தில் தண்ணீர் இருப்பதை ஐரோப்பிய விண்வெளி ஆய்வு மையம், மற்றும் அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆய்வு மையத்தின் விண்கல தொலைநோக்கிகள் கண்டறிந்துள்ளன.

### விண்வெளி வீரர்களுக்கு ஆயுதம் : ரஷியா திட்டம்

- விண்வெளிக்குச் செல்லும் வீரர்களுக்கு ஆயுதம் கொடுத்து அனுப்ப ரஷியா திட்டமிட்டு வருகிறது. பிரத்யேக துப்பாக்கி ஒன்றையும் அந்த நாடு வடிவமைத்துள்ளது.
- மனிதர்களைச் சுமந்து செல்லும் ராக்கெட்டுகளை வனங்கள் நிறைந்த கிழக்குப் பகுதியிலிருந்து அனுப்ப முடிவு செய்துள்ள ரஷியா, அந்தப் பகுதியில் மீண்டும் தரையிறங்கும் விண்வெளி வீரர்கள் வன விலங்குகளிடமிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக அந்தத் துப்பாக்கியை உருவாக்கியுள்ளது.

## 5.2 ஊடகம் மற்றும் தொலைத்தொடர்பு

### ஜன் ஔஷதி சுகம் செயலி

(Janushadi Sugam Application)

- நாடு முழுவதும் ஜன் ஔஷதி கடைகள் எங்கு உள்ளது என்பதை மக்கள் தெரிந்து கொள்ள மத்திய அரசு **ஜன் ஔஷதி சுகம் செயலி** அறிமுகம் செய்துள்ளது.

### ஒரு ரூபாய்க்கு 'சானிடரி நாப்கின்'

- மக்கள் மருந்தகங்களில் விற்பனை செய்யப் படும் சானிடரி நாப்கின்களின் விலையை ரூ.2.50இல் இருந்து ரூ.1 ஆக மத்திய அரசு குறைந்து உள்ளது. மகளிர் நலத்தை மேம் படுத்தும் முயற்சியாக இந்த விலை குறைப்பு நடவடிக்கையை அரசு மேற்கொண்டுள்ளது.

- ஜன் ஔஷதி மருந்தகங்கள் மத்திய அரசால் 2008ல் தொடங்கப்பட்டது. செப்டம்பர் 2015ல் இந்த திட்டம் பிரதான் மந்திரி ஜன் ஔஷதி யோஜனா (PMJAY) என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. நவம்பர் 2016ல் இத்திட்டத்திறகு மீண்டும் ஒரு முறை பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இத்திட்டத்தின் இப்போதைய பெயர் பிரதான் மந்திரி பாரதிய ஜன் ஔஷதி பரியோஜனா (PMBJP) ஆகும்.

### மைத்ரி செயலி (Maitri Application)

- உத்தரபிரதேச மாநிலத்தின் நொய்டாவில் உள்ள அமிட்டி இண்டர்நேஷனல் பள்ளியை (Amity International School) சேர்ந்த ஐந்து மாணவிகள் அனாதை இல்லங்களில் உள்ள குழந்தைகளை முதியோர் இல்லங்களில் உள்ள மூத்த குடிமக்களுடன் இணைக்கும் "மைத்ரி செயலி'யை உருவாக்கி உள்ளனர். இதன் மூலம் அமெரிக்காவில் நடைபெற்ற "Technovation Challenge" உலகளாவிய போட்டியில் இந்த குழு வெண்கலம் வென்றது.
- இந்த "Technovation Challenge" போட்டி பெண்களுக்கான உலகின் மிகப்பெரிய தொழில்நுட்ப மற்றும் தொழில்முனைவோர் திட்டமாகும். உலகம் முழுவதும் 100 நாடுகளில் நடைபெறுகிறது. இப்போட்டிக்கு கூகுள் ஆதரவு அளிக்கிறது.

### C-Plan செயலி

- உத்தரபிரதேச மாநிலத்தின் காவல்துறைக்கு உதவ C-Plan செயலி அறிமுகம் செய்துள்ளது. இந்த செயலி மூலம் சமூகத்தில் நடைபெறும் பிரச்சனைகள் பற்றி அறிந்து கொள்ளவும், உறுதி செய்யவும் இந்த செயலி உதவும்.

## ரூபாய் நோட்டுகளை எண்ணுவதற்கு ரோபோ

- ரூபாய் நோட்டுகளை எண்ணுவதற்கென்று நவீன தொழில் நுட்பத்தைக் கொண்டிருக்கும் ரோபோக்களை ஐசிஐசிஐ வங்கி அறிமுகம் செய்துள்ளது. இந்திய அளவில் வங்கி செயல் பாட்டுக்காக ரோபோவை பயன்படுத்துவது இதுவே முதல் முறையாகும்.
- மும்பை, புதுடெல்லி, பெங்களூரு, மங்களூரு, ஜெய்ப்பூர், ஹைதராபாத், சண்டிகர், போபால், ராய்ப்பூர், சங்லி, சிலிகுரி, வாரணாசி ஆகிய 12 நகரங்களில் பணம் எண்ணும் ரோபோக்கள் பயன்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ளன.
- இந்த ரோபோக்கள் 70 விதமான கணக்கீடுகளை ஒரே விநாடியில் செய்து முடிக்கும் ஆற்றல் கொண்டவை

## இ.ஆர்.எஸ்.எஸ் - டயர் 112, இ-பீட்புக் மற்றும் இ-சாதி செயலி வெளியீடு

- 29 வது வடக்கு மண்டல கூட்டம் சண்டீகர் நகரில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் உள்துறை அமைச்சர் இ.ஆர்.எஸ்.எஸ் - டயர் 112, இ-பீட்புக் அமைப்பு, இ-சாதி செயலி ஆகியவற்றை வெளியிட்டார்.

### இ.ஆர்.எஸ்.எஸ் – 112

- பெண்களுக்கு எதிரான குற்றங்களை தடுக்க, அவசரகால பதில் ஆதரவு மையம் டயர் 112 தொடங்கி வைத்தார்.

### இ–பீட்புக் (E-Beat Book)

- நிகழ் நேர குற்றங்கள் மற்றும் குற்றவாளிகளை அறிந்து கொள்ள இ-பீட் புக் என்ற இணையதள மற்றும் மொபைல் அடிப்படையிலான செயலி வெளியிடப்பட்டது. இந்த செயலி குற்றம் மற்றும் குற்றவியல் கண்காணிப்பு நெட்வொர்க் அமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளது.

### இ–சாதிசெயலி (E-Saathi App)

- பொதுமக்கள் காவல் ஆய்வாளர்களுடன் இணைப்பில் இருக்க தொடங்கப்பட்டது. (Your Police at your doorstep initiative)

## மின்னணு பொருளாதார அறிக்கை 2019

- ஐ.நாவின் வர்த்தக மேம்பாட்டு மாநாடு சபையில் மின்னணு பொருளாதார அறிக்கையில் "Digital Economy Creation and Capture: Implication for developing countries" வெளியிட்டுள்ளது. இந்த அறிக்கை முன்னதாக பொருளாதார தகவல் அறிக்கை (Information Economic Report) என்ற பெயரில் வெளியிடப்பட்டு வந்தது. வளரும் நாடுகளில் மின்னணு பொருளாதாரத்திற்கான வாய்ப்புகள் மற்றும் மதிப்புகளை ஆராயந்து பட்டியலிடப்பட்டுள்ளது.

**UNCTAD :**

- தலைமையிடம் : ஜெனிவா, சுவிட்சர்லாந்து
- தொடக்கம் : 1964

## இந்தியாவின் முதல் மின்னணு திறன் மையம்

- மத்திய அரசு இந்தியாவின் முதல் மின்னணு திறன் மையம் டெல்லியில் தொடங்கப்பட்டுள்ளது. இதற்காக நிதி ஆயோக் Mckinsey நிறுவனத்தை தேர்ந்தெடுத்து உள்ளது. திறன் மையம் அமைப்பதன் மூலம் தொழில், கல்வி மற்றும் ஆராய்ச்சி ஆகியவற்றை ஒன்றிணைந்த தளமாக இருக்கும்.

## இந்தியாவின் முதல் பொது தகவல் களஞ்சியம்

- ராஜஸ்தான் மாநில அரசு, அரசாங்க துறைகள் குறித்த தகவல்களை விரைவாக தெரிந்து கொள்ள ஜான் சூச்னா போர்டல் என்று பொது தகவல் இணையதளத்தை அறிமுகம் செய்துள்ளது.
- ராஜஸ்தான் மாநிலம் புதிய கண்டுபிடிப்பு களுக்கான பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக இந்த தகவல் களஞ்சியம் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் 75வது ஆண்டு நினைவு கூறும் விதமாக தொடங்கியது.
- அரசாங்க துறைகள் பற்றி அறிந்து கொள்ள தகவல் மற்றும் தொழில்நுட்பத்தால் வடிவ மைக்கப்பட்ட முதல் இணையத்தளமாகும். இந்த இணையத்தளம் மக்கள் அரசாங்கத்தின் வெளிப்படைத்தன்மையை இதன் மூலம் அறிந்து கொள்ள முடியும்.

## பிளாஸ்டிக் இல்லாத முதல் பாலிவுட் படம் - கூலி நம்பர் 1

- வருண் தவானின் கூலி நம்பர் 1 (Coolie No. 1) என்ற பாலிவுட் திரைப்படம் பிளாஸ்டிக் பயன்பாடு இல்லாத முதல் பாலிவுட் படமாக திரையிடப்படவுள்ளது.

### மாலுமிகளுக்கான முதல் பயோமெட்ரிக் அடையாள அட்டை (World's First Ever Facial Bio-Metric Data Based Safaer Identity Document)

- உலகின் முதல்முறையாக கடற்படை மாலுமிகளுக்கான **பயோமெட்ரிக் அடையாள ஆவணம்** (BSID) இந்தியா அறிமுகம் செய்துள்ளது. இந்த பயோமெட்ரிக் கடற்படை அடையாள ஆவணம் மேம்பட்ட கணினி மேம்பாட்டு துறை மையத்தால் உருவாக்கப்பட்டது.

### 12வது இந்திய பாதுகாப்பு மாநாடு

- இந்திய பாதுகாப்பு மாநாட்டின் 12வது பதிப்பு டெல்லியல் நடைபெற்றது. இம்மாநாட்டின் கருப்பொருள் "Towards New National Cyber Security Strategy" என்பதாகும். வளர்ந்து வளரும் இணையத்தள அச்சுறுத்தல், நாட்டிற்கான சவால்கள் மற்றும் பொறுப்புகள் பற்றி விவாதிக்கப்பட்டன.

### உலகின் மிகப்பெரிய ஒருங்கிணைந்த இணையதள இணைப்பு: மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சகம்

- மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சகம் ரமேஷ் போக்ரியால் நிஷாங் இந்தியாவின் பள்ளி கல்வி அமைப்பை ஒருங்கிணைக்க உலகின் மிகப்பெரிய ஒருங்கிணைந்த இணையத்தள இணைப்பு "Shagun Portal" தொடங்கி வைத்தார். இதன் மூலம் நாடு முழுவதும் 15 லட்சம் பள்ளிகள், 25 கோடி மாணவர்கள், 9 லட்சம் ஆசிரியர்கள் உள்ளனர் என்று ஷகுன் போர்டல் செய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ஆன்லைன் மூலம் பசுக்களை தத்தெடுக்கும் திட்டம்: மத்திய பிரதேச அறிவிப்பு

- ஆன்லைன் மூலம் பசுக்களை தத்தெடுக்கும் திட்டத்தை மத்திய பிரதேச அரசு அறிவித்துள்ளது. மத்திய பிரதேசத்தில் முதல்வர் கமல்நாத் தலைமையிலான பசு பாதுகாப்புக்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

### கிராம் நெட் விரைவில் (GramNet soon)

- மத்திய அரசு, இந்தியாவில் உள்ள அனைத்து கிராமங்களுக்கும் வைஃபை வசதி வழங்க திட்டமிட்டுள்ளது. இதன் மூலம் அனைத்து கிராமங்களுக்கும் கிராம்நெட் மூலம் இணைக்கப்பட்டுள்ளன, 10mbps முதல் 100mbps வரை இணையத்தள வசதி வழங்கப்பட உள்ளது. பாரத்நெட்டின் 1GBPS லிருந்து 10GBPS இணையதள வசதி வழங்க திட்டமிட்டுள்ளதாக டெலிமாடிக்ஸ் மேம்பாட்டு மையத்தின் CC-DoT 36வது நிறுவன நாள் கொண்டாட்டத்தில் தகவல் தொடர்புத்துறை அமைச்சர் சஞ்சய் ஷாம்ராவ் தோதரே தெரிவித்தார்.

### தேசிய செயற்கை நுண்ணறிவு வள இணையவாயில் - திட்டம்

- தேசிய செயற்கை நுண்ணறிவு வள இணையவாயிலை (NAIRP - National Artificial Intelligence Resource Portal) தொடங்க அமேசான் சேவைகள் நிறுவனத்துடன் (IIT-Karagpur) கரக்பூர் கல்வி நிறுவனம் இணைந்துள்ளது. செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence) கற்றல் மற்றும் வளர்ச்சியை மேம்படுத்துவதற்காக இந்த வள இணையவாயில் உருவாக்கப்படவுள்ளது.

### டிஜிட்டல் மயமாக்கத்தில் தமிழகம் முன்னிலை

- இந்திய அளவில், டிஜிட்டல் மயமாக்கத்தில் தமிழகம் முன்னிலை வகித்து வருகிறது. தமிழக அரசு தொடர்பான செயல்பாடுகள், சேவைகள் அனைத்தும் டிஜிட்டல் மயமாக்கப்பட்டு வருகின்றன என்று தமிழ்நாடு மின்-ஆளுமை தலைமை நிர்வாக அதிகாரி சந்தோஷ் கே. மிஸ்ரா தெரிவித்துள்ளார்.

- தகவல் அமைப்புகள் தொடர்பான தணிக்கை மற்றும் கட்டுப்பாட்டு சங்கம் ஐஎஸ்ஏசிஏ என்று அழைக்கப்படுகிறது.

### "Good Vibes" மற்றும் "Relumino" என்ற செயலி

- தென்கொரியா தொழில்நுட்ப நிறுவனத்தின் சாம்சங், காது கேளாதோர் மற்றும் பார்வையற்றோருக்கான தகவல் தொடர்பு கருவி **குட் வைப்ஸ்** மற்றும் பார்வையற்றோர்களுக்கு உதவும் **ரெலுமினோ** ஆகிய இரண்டு செயலி வெளியிட்டுள்ளது.

## தேசிய உளவு தகவல் சேகரிப்பு மையம்

- வங்கிப் பரிவர்த்தனைகள், வரி செலுத்துபவர்கள், ரயில் மற்றும் விமானப் பயணிகள் உட்பட பல்வேறு தகவல்களை சேகரித்து வைக்கும் தேசிய உளவு தகவல் சேகரிப்பு மையம் (நேட்கிரிட்), அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் முதலாக செயல்பாட்டிற்கு வரவுள்ளதாக மத்திய அரசு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.
- மும்பையில் கடந்த 2008 ம் ஆண்டு நிகழ்த்தப்பட்ட தீவிரவாத தாக்குதல்களில் 166 பேர் உயிரிழந்தனர். இந்தியா முழுவதும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்திய இச்சம்பவம் தொடர்பாக பல்வேறு புலனாய்வு அமைப்புகள் விசாரணை மேற்கொண்டன.
- உளவுத் தகவல்களை சேகரிக்கும் முயற்சியை மத்திய அரசு மேற்கொண்டது. நாட்டு மக்கள் தொடர்பான முக்கியமான அனைத்து விவரங்களையும் ஓரிடத்தில் சேகரித்து வைத்து உரிய நேரத்தில் புலனாய்வு அமைப்புகளுக்கு வழங்க வகை செய்யும் 'நேட்கிரிட்' (தேசிய உளவு தகவல் சேகரிப்பு மையம்) என்ற அமைப்பை உருவாக்கும் நடவடிக்கைகள் தொடங்கப்பட்டன.
- நாட்டு மக்களின் வங்கிப் பணப்பரி வர்த்தனைகள், விமானம் மற்றும் ரயில்களில் பயணிக்கும் பயணிகள், வெளிநாடுகளில் இருந்து இந்தியா வருபவர்கள், குடியேற்றத் தகவல்கள், வரி செலுத்துபவர்கள், கடன் அட்டைகளை வாங்குபவர்கள், தொலைத் தொடர்பு நிறுவனங்கள் என அனைவரின் விவரங்களும் உடனுக்குடன் இந்த அமைப்பில் சேகரிக்கப்பட்டுவிடும். சிபிஐ, அமலாக்கத்துறை, ரா அமைப்பு உள்ளிட்ட புலனாய்வு மற்றும் உளவு நிறுவனங்களுக்கு இந்தத் தகவல்கள் பகிரப்படும்.

## டிஜிட்டல் பேமண்ட் அபியான்

- கொம்), இந்திய தரவு பாதுகாப்பு கவுன்சில் (டிஎஸ்சிஐ), மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில் நுட்ப அமைச்சகம் மற்றும் கூகுள் இணைந்து இணைய வழி பணம் செலுத்தும் வசதியான "டிஜிட்டல் பேமெண்ட் அபியான்" அறிமுகம் செய்யப்பட்டது. டெல்லியில் நடைபெற்ற கூகுள் ஃபார் இந்தியா நிகழ்ச்சியில் மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் ரவி சங்கர் பிரசாந்த் தொடங்கி வைத்தார்.

# 6 தினசரி தேசிய நிகழ்வு



### 7வது சமூக வானொலி சம்மேளன்

(Community Ratio Sammelan)

- *ஏழாவது சமூக வானொலி மாநாடு டெல்லியில் நடைபெற்றது. இம்மாநாட்டின் கருப்பொருள்: "Community Ratio for SDG's" நீடித்த வளர்ச்சி இலக்குகள் SDG 17ஐயும் அடைவதற்கான விழிப்புணர்வு ஏற்படுத்தும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை வழங்குவதற்கான சாதகங்கள் இங்கு ஆராயப் பட்டன.*

### மத்திய பிரதேசத்தின் முதல் டிஜிட்டல் கிராமம்

- *மத்திய பிரதேசத்தில், கட்னி மாவட்டத்தின் பஞ்சாரி கிராமம் முதல் டிஜிட்டல் கிராமம் ஆகும். இதனால் பிரதமரின் லட்சியத் திட்டமான டிஜிட்டல் இந்தியா திட்டத்தில் மத்திய பிரதேசத்தில் இருந்து இணைந்த முதல் கிராமம் ஆகும்.*
- *டிஜிட்டல் இந்தியா பிரச்சாரத்திற்கு இணங்க, மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில் நுட்ப அமைச்சகம் (MEITY) டிஜிட்டல் கிராம திட்டத்தை வகுத்துள்ளது. இது நாடு முழுவதும் 1000 டிஜிட்டல் கிராமங்களை உருவாக்க திட்டமிட்டுள்ளது.*

### தேசிய உணவு ஆய்வகம் காசியாபாத்தில் திறக்கப்பட்டது

(National Food Laboratory)

- *உத்தரபிரதேசத்தின் காசியாபாத்தில் உள்ள மத்திய சுகாதார அமைச்சர் ஹர்ஷ் வர்த்தன், இந்தியாவின் உணவு பாதுகாப்பு மற்றும் தரக்கட்டுபாட்டு ஆணையத்தின் (FSSAI) தேசிய உணவு ஆய்வகத்தை (என்எப்எல்) திறந்து வைத்தார். உணவு பாதுகாப்பு மற்றும் தரநிலை சட்டம் (எஃப்எஸ்எஸ்ஏ) 2006 அமல்படுத்தப்பட்டு 13வது ஆண்டு நிறைவை முன்னிட்டு இது திறக்கப்பட்டது.*

### நிலங்கள் தரிசாக மாறுவதை தடுக்கும் மாநாடு

- *நிலங்கள் தரிசாக மாறுவதைத் தடுப்பதற்கான ஐக்கிய நாடுகள் உடன்படிக்கை நாடுகளின் 14-ஆவது உச்சி மாநாடு தில்லி கிரேட்டர் நொய்டாவில் செப்டம்பர் 2 முதல் 13ஆம் தேதி வரையில் நடைபெற்றது. இந்த மாநாட்டில் ஏறக்குறைய 200 நாடுகளில் இருந்து பிரதிநிதிகள்பங்கேற்கின்றனர். சுமார் 3 ஆயிரம் பிரதிநிதிகளும், 100 நாடுகள் சுற்றுச்சூழல் தொடர்புடைய அமைச்சர்களும் பங்கேற்க உள்ளனர்.*

### 'ஃபிட் இந்தியா' இயக்கத்தை தொடங்கினார் பிரதமர் மோடி

- *ஃபிட் இந்தியா இயக்கத்தை தொடங்கி வைத்த பிரதமர் நரேந்திர மோடி, மக்களின் அன்றாட வாழ்க்கையில் உடல் சார்ந்த உழைப்பையும், விளையாட்டையும் ஊக்குவிக்கும் நோக்கில் மத்திய அரசு சார்பில்,* **ஃபிட் இந்தியா இயக்கம்** *தொடங்கப்பட்டது. தில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பிரதமர் நரேந்திர மோடி இந்த இயக்கத்தை தொடக்கி வைத்தார். விளையாட்டுத் துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு தலைமையிலான 28 பேர் கொண்ட குழு இந்த ஃபிட் இந்தியா இயக்கத்தை முன்னெடுத்துச் செல்கிறது.*

## குழந்தை நலவாழ்வு குறியீடு

- குழந்தைகள் நலவாழ்வு குறியீட்டை அரசு சாரா அமைப்பான உலக தொலைத்தொடர்பு இந்தியா மற்றும் அணுகல் மற்றும் மேம் பாட்டுக்கான நிதி மேலாண்மை மற்றும் ஆராய்ச்சி ஆதாரங்களுக்கான நிறுவனம் (IFMR LEAD) வெளியிட்டுள்ளது. கேரளா, தமிழ்நாடு மற்றும் இமாச்சலபிரதேசம் ஆகிய மாநிலங்கள் முதல் மூன்று இடத்தில் உள்ளது.

### ஜீவன் கௌஷல்

- மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சகம் வாழ்க்கைத் திறனுக்கான பாடத்திட்டம் (ஜீவன் கௌஷல்) தொடங்கி உள்ளது. இதை பல்கலைக்கழக மானியக் குழு வடிவமைத்து உள்ளது. ஜீவன் கௌஷல் என்னும் பாடத்திட்டம் வாழ்க்கை அனுபவங்களை உள்ளடக்கியது. இது அன்றாட வாழ்க்கையில் எதிர்கொள்ளும் சிக்கல்களைக் சமாளிக்க உதவும் என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### தேசிய டிஜிட்டல் நூலகம்

- மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சகம் தேசிய தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்பத்தின் மூலம் கல்வி கற்றல் கீழ், (National Mission on Education throught Information and Communication Technology) தேசிய டிஜிட்டல் நூலகம் தொடங்கியது. இதன் மூலம் 3 கோடி நூல்கள் கற்க முடியும். தேசிய டிஜிட்டல் நூலகத்தில் உமங்செயலி (UMANG APP) ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் மாணவர்கள் தங்களை பதிவு செய்து பயன்படுத்திக் கொள்ள முடியும்.

### குஜராத் மாநிலத்தின் முதல் மின்சார பேருந்து

- குஜராத் மாநிலத்தின் அகமதாபாத்தில் முதல் மின்சார பேருந்து மத்திய உள்துறை அமைச்சர் அமீத்ஷா தொடங்கி வைத்தார். நகரத்தின் மின் பேருந்துகளுக்கான இந்தியாவின் முதலாவது தானியங்கி பேட்டரி சார்ஜிங் மற்றும் மாற்றும் நிலையத்தையும் திறந்து வைத்தார். ஃபேம் திட்டத்தின் கீழ் அகமதாபாத் நகரத்தில் 300 மின்சார பேருந்துகள் தொடங்கப்பட உள்ளது.

## Beti Bachao, Beti Padhao campaign

- ஜம்மு & காஷ்மீர் மாநிலத்தின் உள்ள உதாம்பூரில் பெண் சிசு கொலை தடுப்பதற்காக Beti Bachao, Beti Padhao என்ற விழிப்புணர்வு பிரச்சாரம் தொடங்கப்பட்டது. உத்தரகாசிமாவட்டத்தின் 132 கிராமங்களில் மூன்று மாதங்களில் 216 குழந்தைகள் பிறந்து உள்ளன. அதில் ஒரு குழந்தை கூட பெண் குழந்தை இல்லை என்ற அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது.

### புலிக்களுக்கான சிறப்பு படை

- உத்தரகாண்ட் மாநிலம் அரசு புலிகளை பாதுகாக்க கார்ப்பெட் தேசிய பூங்காவிலுள்ள புலிக்களுக்கான சிறப்பு (Special Tiger Force for Corbett Reserve) படையை அமைத்து உள்ளது. இப்படையை அமைக்க மாநில அரசு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

### கோரேவாடா சர்வதேச உயிரியல் பூங்கா

- மத்திய அமைச்சர் பிரகாஷ் ஜவ்டேகர், மகாராஷ்டிரா மாநிலம் நாக்பூர் மாவட்டத்தில் கோரேவாடா சர்வதேச உயிரியல் பூங்கா அமைக்க உள்ளதாக தெரிவித்தார். இதற்கான ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

### பேரழிவை தடுக்கும் உள்கட்டமைப்பிற்கான சர்வதேச கூட்டிணைவு

- பிரதமர் நரேந்திர மோடி பேரழிவு தடுக்கும் உள்கட்டமைப்பிற்கான சர்வதேச கூட்டிணைவு (International coalition for Disaster Resilient Infrastructure) டெல்லியில் அமைக்க ஒப்புதல் அளித்து உள்ளார். 2019 செப்டம்பர் 23ம் தேதி அமெரிக்காவில் நியூயார்க்கில் நடைபெற உள்ள ஐக்கிய நாடுகளின் காலநிலை நடவடிக்கை (United Nation Climate Action Summit) உச்சி மாநாட்டில் சி.டி.ஆர்.ஐ தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது.

### ஜெய் பீம் முக்ய மந்திரி யோஜனா

- டெல்லி அமைச்சரவை, இதர பிற்படுத்தப் பட்டோர் மற்றும் பொது பிரிவு சேர்ந்த மாணவர்கள் அரசாங்க போட்டி தேர்வுகள் படிக்க **ஜெய் பீம் முக்ய மந்திரி யோஜனா திட்டத்தின்** கீழ் ரூ.40,000 நிதியுதவி வழங்குவதாக அறிவித்து உள்ளது.

### சோவா ரிக்பா

- நாடு முழுவதும் 12,000 ஆயுஷ் மையங்களை ஏற்படுத்த மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. ஹரியானா மாநிலத்தில் உள்ள பஞ்ச்குலா, அம்பாலா, ஹிசார், சோனிபாட் உள்ளிட்ட 10 இடங்களில் கட்டப்பட்ட ஆயுஷ் மருத்துவமனைகளை பிரதமர் மோடி காணொலி காட்சி மூலம் திறந்து வைத்தார். மேலும் 4,000 மையங்களை இந்தாண்டு இறுதிக்குள் திறக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. லடாக், ஹிமாச்சலப்பிரதேசம், அருணாசலப்பிரதேசம், சிக்கிம், டார்ஜீலிங் உள்ளிட்ட பகுதிகளில் கடைப்பிடிக்கப்பட்டு வரும் பௌத்தர்களின் மருத்துவ முறையான சோவா ரிக்பாவை ஆயூஷ் குடும்பத்தில் இணைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### அரசு பேருந்துகளில் பெண்கள் இலவசமாக பயணம் செய்யும் திட்டத்திற்கு ஒப்புதல்

- டெல்லியில் அரசு பேருந்துகளில் பெண்கள் இலவசமாக பயணிக்கலாம் என்ற திட்டத்திற்கு அம்மாநில அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இதன்படி வரும் அக்டோபர் 29ஆம் முதல் இந்த திட்டம் நடைமுறைக்கு வரவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. பாதுகாப்பு கருதி டெல்லி மாநகர அரசு பேருந்துகளில் பெண்கள் இலவசமாக பயணம் செய்யலாம் என்று அம்மாநில முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் சமீபத்தில் அறிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

### தென்கிழக்கு ஆசியாவிற்கான உலக சுகாதார அமைப்பின் பிராந்திய குழு மாநாடு

- 72வது தென்கிழக்கு ஆசியாவிற்கான உலக சுகாதார அமைப்பின் பிராந்திய குழுவிற்கான மாநாடு (72nd session of the WHO Regional Committee for south East Asia) டெல்லியில் நடைபெற்றது. இந்த மாநாட்டை மத்திய சுகாதார மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர் ஹர்ஷவர்தன் டெல்லியில் தொடங்கி வைத்தார்.

### AB-MGRSBY சுகாதார காப்பீட்டு திட்டம்

- ராஜஸ்தான் மாநிலம் AB-MGRSBY என்ற சுகாதார காப்பீட்டு திட்டம் தொடங்கி உள்ளது இந்த ஆயுஷ்மான் பாரத்-மகாத்மா காந்தி ராஜஸ்தான் ஸ்வஸ்திய பீமா யோஜனா திட்டம், மாநில பமாஷா ஸ்வஸ்ய பீமா யோஜனா திட்டத்துடன் இணைக்கப் பட்டது. AB-MGRSBY - Ayushman Bharat - Mahatma Gandhi Rajasthan Swasthy Bima Yojana.

### 10 hafte, 10 baje, 10 minute என்ற பிரச்சாரம்

- டெல்லியின் முதலமைச்சர் 10 hafte, 10 baje, 10 minute என்ற விழிப்புணர்வு பிரச்சாரத்தை தொடங்கி உள்ளார். டெங்கு மற்றும் சிக்குன்குனியாவுக்கு எதிராக பத்து வார மக்கள் விழிப்புணர்வு பிரச்சாரம் தொடங்கி வைத்தார்.

### இந்தியாவின் முதல் "Garbage Cafe"

- இந்தியாவின் முதல் "Garbage Cafe" சட்டீஸ்கர் மாநில அம்பிகாபூர் நகரத்தில் தொடங்கப் பட்டது. இது அம்பிகார் நகரத்தை பிளாஸ்டிக் இல்லாததாக மாற்றுவதை நோக்கமாக கொண்டுள்ளது.

### இந்தியாவின் முதல் ஸ்கை சைக்கிள் பூங்கா

### (India's First ever Sky cycling Park)

- இந்தியாவின் முதல் ஸ்கை சைக்கிள் பூங்கா இமாச்சலபிரதேசத்தில் (350 மீட்டர் நீளம்) மனாலி என்ற இடத்தில் தொடங்கப்பட்டுள்ளது. கடல் மட்டத்தில் இருந்து 9000 அடி உயரத்தில் அமைந்துள்ளது.

### கூட்டு கடற்படை வருடாந்திர தர மாநாடு

(Joint Naval annual Quality Conclave)

- கூட்டு கடற்படை வருடாந்திர தர மாநாடு செப்டம்பர் 5ல் விசாகப்பட்டினத்தில் நடைபெற உள்ளது. இந்த மாநாட்டின் கருப்பொருள் "Transformation of QA Paradign: Opportunities and challenges என்பதாகும். கடற்படை தர உத்தரவாதம் நிறுவனம் (Navel anality Assurance Establishment) மற்றும் மத்திய பாதுகாப்பு அமைச்சகம் இணைந்து நடத்துகிறது.

## இன்டர்நெட் ஆஃப் திங்க்ஸ் இந்திய காங்கிரஸ் 2019

- டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் இந்தியாவின் மிகப்பெரிய சங்கமான Internet of Things (IoT) India congress 2019 நான்காவது பதிப்பு கர்நாடகா மாநிலம் தலைநகர் பெங்களூரில் நடைபெற்றது. இம்மாநாட்டின் கருப்பொருள்: "Mainstreaming the Internet of things". மத்திய மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில் நுட்ப அமைச்சர் ஸ்ரீஅஜய் பிரகாஷ் ஷவானே அவர்கள் தொடங்கி வைத்தார்.
- இந்த மாநாட்டில் சுகாதாரம், தொலைதொடர்பு, ஸ்மார்ட் நகரம், ஆற்றல், சைபர் செக்யூரிட்டி, திறன் மற்றும் மேம்பாடு, வேளாண்மை, சட்டம் மற்றும் ஒழுங்குமுறை ஆகியவை பற்றி விவாதிக்கப்பட்டன.

## உலகின் பாதுகாப்பான நகரங்களின் பட்டியல்

- உலகின் பாதுகாப்பான நகரங்களின் பட்டியலில் இந்திய நகரங்களான டெல்லி, மும்பை மட்டுமே இடம்பிடித்துள்ளன. 2019ம் ஆண்டிற்கான உலகின் பாதுகாப்பான நகரங்களின் பட்டியலை பொருளாதார புலனாய்வு அமைப்பு வெளியிட்டுள்ளது.

பாதுகாப்பான நகரங்களின் பட்டியல்

| தரவரிசை | நாடுகள் |
|---|---|
| 1 | டோக்கியோ |
| 2 | சிங்கப்பூர் |
| 3 | ஒசாகா |
| 4 | ஆம்ஸ்டர்டம் |
| 5 | சிட்னி |
| 45 | மும்பை |
| 52 | டெல்லி |

## ஐந்தாவது அக்வா அக்வாரியா இந்தியா 2019 (5th Aqua Aquaria India 2019)

- துணைக்குடியரசுத் தலைவர் ஐந்தாவது அக்வா அக்வாரியா இந்தியா 2019 தெலுங்கானா மாநில தலைநகரான ஹைதராபாத்தில் தொடங்கி வைத்தார்.
- இம்மாநாட்டின் மையக்கருத்து: "To tak Blue Revolution to India's hinterland" என்பதாகும்.
- இது இந்தியாவின் மிகப்பெரிய மீன்வளர்ப்பு கண்காட்சி ஆகும். உலகளவில் இந்தியா இரண்டாவது மிகப்பெரிய மீன்வளர்ப்பு நாடு ஆகும். ஏற்றுமதி செய்வதில் இந்தியா நான்காவது மிகப்பெரிய நாடு ஆகும்.
- இக்கண்காட்சிக்கு கடல் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் ஏற்பாடு செய்திருந்தது.

**கடல் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் (MPEDA)**

- தலைமையிடம்: கொச்சி, கேரளா
- தொடக்கம் : 1972

## தேசிய இளைஞர்கள் மாநாடு

- இந்திய ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் தேசிய இளைஞர்கள் மாநாட்டை டெல்லியில் தொடங்கி வைத்தார். இம்மாநாட்டிற்கு இளைஞர் விழிப்புணர்வு மிஷன் (Youth Awakening Mission) ஏற்பாடு செய்திருந்தது. இம்மாநாட்டின் ஸ்லோகன் "Education India Rebuild Nation" என்பதாகும்.

## 44வது டொராண்டோ சர்வதேச திரைப்பட விழா 2019

- கனடாவுக்கான இந்திய உயர் ஆணையர் ஸ்ரீ விகாஸ் ஸ்வரூப் 44வது டொராண்டோ சர்வதேச திரைப்பட விழாவை 2019 தொடங்கி வைத்தார். இவ்விழாவில் வெளிநாடுகளில் இந்திய சினிமாவை காண்பிப்பதற்கும் புதிய வர்த்தக வாய்ப்புகளை எளிதாக்குவதற்கும் ஒரு தளமாக இவ்விழா இருந்தது.

## நாட்டின் முதல் பசுமை தொழில் நகர திட்டம் பிரதமர் நரேந்திர மோடி அறிவிப்பு

- மகாராஷ்டிராவின் அவுரங்காபாத் நகரில் நடைபெற்ற மகளிர் சுய உதவிக் குழு மாநாட்டில் 10,000 ஏக்கர் பரப்பளவில் நாட்டின் முதல் பசுமை தொழில் நகர திட்டத்தை பிரதமர் மோடி தொடங்கி வைத்தார்.

## "Build for Digital India Program"

- மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம், கூகுள் நிறுவனத்துடன் இந்தியாவை டிஜிட்டல் மயமாதலை நோக்கி நகர்த்துவதற்காக "Build for India Program" என்ற திட்டத்தில் ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.

### அஸ்ஸாம் என்ஆர்சி இறுதிப் பட்டியல் வெளியீடு

- இந்த இறுதிப் பட்டியலை குடிமக்களின் தேசிய பதிவேட்டின் மாநில ஒருங்கிணைப்பாளர் பிரதீப் ஹஜ்லா வெளியிட்டார்.

### என்ஆர்சி பட்டியல் தயாரிப்புப் பணி 1950 முதல் 2019 வரை

| | |
|---|---|
| 1950 | கிழக்கு பாகிஸ்தானில் (இன்றைய வங்கதேசம்) இருந்து அகதிகள் அதிக எண்ணிக்கையில், அஸ்ஸாமுக்குள் வரத் தொடங்கியதையடுத்து, அகதிகள் சட்டம் அமலுக்கு வந்தது. |
| 1951 | முதலாவது மக்கள் தொகை கணக்கெடுப்பு பணி. இதனடிப்படையில் என்ஆர்சி தொகுக்கப்பட்டது. |
| 1957 | அகதிகள் சட்டம் ரத்து செய்யப்பட்டது. |
| 1964 - 65 | கிழக்கு பாகிஸ்தானில் இருந்து மீண்டும் அகதிகள் அதிக எண்ணிக்கையில் வருகை. |
| 1971 | பாகிஸ்தான் பிடியில் இருந்து விடுபட்டு வங்கதேசம் உருவானது. |
| 1979-85 | ஏஏஎஸ்யு அமைப்பால் வெளிநாட்டினரைக் கண்டுபிடித்து வெளியேற்றக் கோரி 6 ஆண்டுகால போராட்டம். |
| 1983 | அஸ்ஸாமின் மத்தியப் பகுதியில் நடைபெற்ற இனப்படுகொலையில் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பலி. சட்டவிரோத அகதிகள் சட்டம் நிறைவேற்றம். |
| 1985 | ராஜீவ் காந்தி முன்னிலையில் மத்திய அரசு, மாநில அரசு, ஏஏஎஸ்யு, ஏஏஜிஎஸ்பி ஆகியவை ஒப்பந்தம். அந்த ஒப்பந்தத்தில் 1971 மார்ச் 25 க்குப் பிறகு அஸ்ஸாமில் குடியேறிய வெளிநாட்டினர் வெளியேற்றப்படுவர் என உறுதி. |
| 2005 | சட்டவிரோத அகதிகள் சட்டம் செல்லாது என உச்சநீதி மன்றம் அறிவிப்பு |
| 2009 | என்ஆர்சி பட்டியலை மேம்படுத்தக்கோரி உச்சநீதிமன்றத்தில் அஸ்ஸாம் பொதுப் பணிகள் அமைப்பு மனு. |
| 2013 | என்ஆர்சி பட்டியலை மேம்படுத்தக்கோரி உச்சநீதிமன்றம் உத்தரவு |
| 2015 | என்ஆர்சி பட்டியலை மேம்படுத்தும் பணி தொடக்கம் |
| 2017 | என்ஆர்சி வரைவுப் பட்டியலின் ஒரு பகுதி வெளியீடு |
| 2018 ஜூலை 30 | என்ஆர்சி வரைவுப் பட்டியலின் இன்னொரு பகுதி வெளியீடு |
| 2019 ஜூன் 26 | கூடுதல் வரைவு நீக்கப்பட்டோர் பட்டியல் வெளியீடு |
| 2019 ஆகஸ்ட் 31 | என்ஆர்சி இறுதிப் பட்டியல் வெளியீடு |

### நடத்துநர் இல்லா பேருந்துகள்

- மும்பை மாநகர பெஸ்ட் போக்குவரத்துக் கழகம் 75 தடங்களில் நடத்துநர்கள் இல்லாத பேருந்து சேவையை துவங்க தீர்மானித்துள்ளது.

### சைபர் குற்ற விசாரணை மற்றும் சைபர் தடவியல் கருத்தரங்கம்

- முதலாவது தேசிய சைபர் குற்ற விசாரணை மற்றும் சைபர் தடவியல் கருத்தரங்கம் டெல்லியில் நடைபெற்றது. இந்த கருத்தரங்கில் அனைத்து மாநில காவல் துறை மற்றும் மத்திய புலனாய்வுத்துறை பங்கேற்கின்றன.

### இந்தியாவின் மிக உயரமான ஏ டி சி கோபுரம்

- மத்திய விமானப்படை அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி டெல்லியில் உள்ள சர்வதேச இந்திரா காந்தி விமானத்தளத்தில் இந்தியாவின் மிக உயரமான விமானப்படை போக்குவரத்து கட்டுபாட்டு கோபுரம் (Air traffic control tower) திறந்து வைத்தார்.

### மாநில உணவு மற்றும் உணவு பொருள் வழங்கல்துறை அமைச்சர்கள் மாநாடு

- தில்லியில் மாநில உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர்கள் பங்கேற்ற ஐந்தாவது தேசிய கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது. மத்திய உணவு, பொது விநியோகம், நுகர்வோர் பாதுகாப்புத்துறை அமைச்சர் ராம் விலாஸ் பாஸ்வான் தலைமையில் நடைபெற்றது.
- அனைவருக்குமான பொது விநியோகத் திட்டம், விலையில்லா அரிசித் திட்டம், தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டம் ஆகியவற்றை செயல்படுத்தும் ஒரே மாநிலமாகத் தமிழகம் திகழ்கிறது. இச்சந்திப்பில் ஒரே நாடு - ஒரே குடும்ப அட்டை திட்டத்தை செயல்படுத்துவது குறித்து விவாதிக்கப்பட்டது.

### 2021-22-க்குள் 75 புதிய மருத்துவக் கல்லூரிகள்

- வரும் 2021-22-ஆம் ஆண்டுக்குள் புதியதாக 75 மருத்துவக் கல்லூரிகளை அமைப்பதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவைக் குழுவின் கூட்டத்தில் (சிசிஇஏ) இதற்கான ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

### லடாக்கில் நடமாடும் அறிவியல் கண்காட்சி

- லடாக்கின் லே நகரில் நடமாடும் அறிவியல் கண்காட்சி பேருந்தை மத்திய கலாச்சாரத் துறை அமைச்சர் பிரகலாத் சிங் படேல் தொடங்கி வைத்தார். அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தை மாணவர்கள் மற்றும் பொது மக்களிடையே பிரபலப்படுத்தும் நோக்கத்தில் நடமாடும் அறிவியல் கண்காட்சி (எம்எஸ்இ) என்ற திட்டத்தை மத்திய அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் நாடு முழுவதும் 23 அறிவியல் கண்காட்சி பேருந்துகள் இயங்கி வந்தன.

### சரியானதை உண்ணுங்கள் இயக்கம்

- மத்திய அமைச்சர் ஹர்ஷவர்தன் **போஷன் மா 2019** (Poshan Ma 2019) சமூக மற்றும் ஊடகம் பிரச்சாரமான சரியானதை உண்ணுங்கள் இயக்கம் தொடங்கி வைத்தார். இதன் மையக்கருத்து “Eat Right for the Next 365 days". இயக்கத்திற்கான லோகோவையும் தொடங்கி வைத்தார்.
- இந்த இயக்கம் அரசாங்கத்தின் முதன்மை பொது சுகாதார திட்டங்களான போஷான் அபியான், இரத்த சோகை முகத்பாரத், ஆயுஷ் மான் பாரத் யோஜனா மற்றும் ஸ்வச் பாரத் மிஷன் ஆகியவற்றுடன் இணைக்கப்பட்டுள்ளது. உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையம் மூன்று முக்கிய நோக்கங்களை நடைமுறைப்படுத்த (Eat safe, Eat Health and Eat Sustainably) உள்ளது.

### 'செக்யூரிட்டி' களுக்கு 'லைசென்ஸ்'

- தனியார் நிறுவனங்களில், 'செக்யூரிட்டி' களாக பணியாற்றுவோருக்கு, பல்வேறு நலத்திட்டங்களை அளிக்கும் வகையில், புதிய இணையதளத்தை, மத்திய உள்துறை அமைச்சர், அமித் ஷா துவக்கி வைத்தார்.
- செக்யூரிட்டிகள் மற்றும் அவர்களை பணியில் அமர்த்தும் நிறுவனங்கள், இந்த இணையதளத்தில் 'லைசென்ஸ்' பெற முடியும்.
- மத்திய உள்துறை அமைச்சகம், இந்த புதிய இணையதளத்தை அறிமுகம் செய்துள்ளது.

## நாட்டின் மிக நீளமான சுரங்க மின்வழித் தட ரயில் பாதை

- ஆந்திரப் பிரதேச மாநிலம், செர்லோ பள்ளி-ராபூரு இடையிலான ரயில் வழித் தடத்தில் மிக நீளமான சுரங்கப்பாதை அமைக்கப்பட்டுள்ளது. இதில் முழுவதும் மின்சார வசதி செய்யப்பட்டுள்ளது. 6.7 கி.மீ. நீளமுள்ள இதுவே நாட்டின் மிக நீளமான சுரங்க மின்வழித் தட ரயில் பாதையாகும்.
- கூடூர்-விஜயவாடா இடையே அதிவேக ரயில் போக்குவரத்தையும் வெங்கய்ய நாயுடு கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.

## Rooftop Solar Attractiveness Index

- மாநில சூரிய ஒளி தகடுகள் பதித்து மின்சாரம் தயாரித்தல் குறியீட்டில் (SARAL - State Rooftop Solar Attractiveness Index) தமிழ்நாடு பத்தாவது இடத்தை பிடித்துள்ளது. 2023 ஆம் ஆண்டிற்குள் 9000 மெகாவாட் சூரிய மின்சக்தி உற்பத்தி செய்ய தமிழகம் இலக்கு நிர்ணயித்து உள்ளது.

| தரவரிசை | மாநிலம் |
|---|---|
| முதலாவது | கர்நாடகா |
| இரண்டாவது | தெலங்கானா |
| மூன்றாவது | குஜராத் |
| நான்காவது | ஆந்திரா |

- மத்திய புதிய மற்றும் புதுபிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்தால் சாரல் (SARAL) வடிவமைக்கப்பட்டது.

## இந்திய சிறு தொழில்துறை மேம்பாட்டு வங்கியுடன் ஒப்பந்தம்

- சிறு, குறு, நடுத்தர வியாபாரிகள் மற்றும் ஸ்டாண்ட் அப் இந்தியா திட்டத்தின் கீழ் கடன் பெறுபவர்கள், பெண்கள் தொழில் முனைவோர், பெண்கள் சுய உதவிக்கு குழுக்கள் பல்வேறு நன்மைகளைப் பெறுவதற்காக அரசு இ-சந்தை (ஜி.எம்), இந்திய சிறு தொழில்துறை மேம்பாட்டு வங்கி (SIDBI) உடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.

## சென்னை ஐஐடி-க்கு உயர் சிறப்பு நிறுவன அந்தஸ்து

- சென்னை ஐஐடி உட்பட நாடு முழுவதும் 5 அரசு கல்வி நிறுவனங்களுக்கு உயர் சிறப்பு கல்வி நிறுவன அந்தஸ்தை மத்திய அரசு வழங்கியுள்ளது. சென்னை ஐஐடி, கரக்பூர் ஐஐடி, ஹைதராபாத் பல்கலைக்கழகம், பனாரஸ் இந்து பல்கலைக்கழகம், டெல்லி பல்கலைக்கழகம் ஆகிய உயர் சிறப்பு கல்வி நிறுவன அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது.

- நாடு முழுவதுள்ள உயர் கல்வி நிறுவனங்களை சர்வதேச அளவில் மேம் படுத்த உயர் சிறப்பு கல்வி நிறுவனம் (இன்ஸ்டிடியூசன் ஆஃப் எமினெனஸ்) என்ற திட்டத்தை மத்திய அரசு 2017-ல் கொண்டு வந்தது.

## குஜராத்தின் வளர்ச்சி பணிக்கான ஒப்பந்தம்

- அமெரிக்காவின் டேலவார் மாகாணத்துடன் இணைந்து வளர்ச்சி பணிகள் மேற்கொள்ள குஜராத் அரசு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது. பயோடெக்னாலஜி பல்கலைக்கழகம், பயோ அறிவியல், நிதி சேவைகள், பண்ணைகள், துறைமுக சேவைகளில் சிறந்த பணிகள் மேற் கொள்ள ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.

## மணிப்பூர் மாநில அரசு : "No School Bag Day"

- முதலாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு அனைத்து சனிக் கிழமைகளில் "No School Bag Day" என்று மணிப்பூர் மாநில அரசு அறிவித்துள்ளது. இந்த நாளில் பள்ளிகளில் மாணவர்களுக்கு விளையாட்டு, திறன் மேம்பாட்டு பயிற்சி, கூடுதல் இணை பாடத்திட்ட நடவடிக்கைகள் பற்றி கற்றுக் கொடுக்கப்படும்.

## ஒரு ஜிகா வாட் மின்சார வாகன பேட்டரி ஆலை

- மின்சார வாகன பயன்பாட்டிற்காக இந்திய ஆயில் நிறுவனம் ஒரு ஜிகா வாட் மின்சார வாகன பேட்டரி ஆலை தொடங்க திட்டமிட்டுள்ளது.

## 'கஜபந்து திட்டம்' - ஒடிசா

- யானைகளின் இறப்புகளை கண்டறிய **கஜபந்து திட்டம்** (Gaja Bandhu - Friend of Elephant) ஒடிசா மாநில அரசு அறிமுகப்படுத்த உள்ளது.

## காஷ்மீர் விவகாரம் அரசியல் சாசன அமர்வு விசாரிக்கும்

### வளர்ச்சியைக் கண்காணிக்க அமைச்சர்கள் குழு

- ஜம்மு-காஷ்மீர், லடாக் பகுதிகளில் வளர்ச்சி, பொருளாதார விவகாரங்கள் உள்ளிட்டவற்றைக் கண்காணிக்க, மத்திய அமைச்சர்கள் அடங்கிய குழு அமைக்கப்பட்டுள்ளது. ஜம்மு-காஷ்மீர், லடாக் ஆகிய யூனியன் பிரதேசங்கள் வரும் அக்டோபர் 31-ஆம் தேதி முதல் செயல்பாட்டுக்கு வருகின்றன. இந்நிலையில், இரு யூனியன் பிரதேசங்களிலும் மேற்கொள்ளப்பட வேண்டிய வளர்ச்சி, சமூக பொருளாதார விவகாரங்கள் உள்ளிட்டவை தொடர்பாக ஆலோசனை வழங்க அமைச்சர்கள் அடங்கிய குழுவை மத்திய அரசு அமைத்துள்ளது.

### ஐந்து பேர் கொண்ட குழு:

- மத்திய சட்டத்துறை அமைச்சர் ரவி சங்கர் பிரசாத்,
- மத்திய சமூகநீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை அமைச்சர் தாவர்சந்த் கெலாட்,
- வேளாண்துறை அமைச்சர் நரேந்திர சிங் தோமர்,
- பிரதமர் அலுவலக இணையமைச்சர் ஜிதேந்திர சிங்,
- பெட்ரோலியத் துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான்
- ஜம்மு-காஷ்மீரை இரு யூனியன் பிரதேசங்களாகப் பகுப்பது தொடர்பான நடவடிக்கைகளை மத்திய அரசின் உயரதிகாரிகள் தொடங்கியுள்ள நிலையில், அமைச்சர்கள் குழு அமைக்கப்பட்டுள்ளன.

## நெகிழி கழிவுகளில் இருந்து டீசல் தயாரிப்பு

- மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை அமைச்சர் ஹர்ஸ்வர்தன், இந்திய பெட்ரோலிய நிறுவனத்தில் நெகிழி கழிவுகளில் இருந்து டீசல் தயாரிப்பு ஆலையை தொடங்கி வைத்தார். இந்த ஆலையில் இருந்து நெகிழி கழிவுகளில் இருந்து டீசல் தயாரிக்கப்பட உள்ளது. ஒரு டன் நெகிழி கழிவுகளில் இருந்து 800 லிட்டர் டீசல் கழிவுகள் தயாரிக்கப்பட முடியும்.

## அசோக் லேலண்ட் BS-VI சான்றிதழ்

- அசோக் லேலேண்ட் நிறுவனம் அதன் முழு அளவிலான கனரக லாரிகளுக்கு BS-VI சான்றிதழ் பெற்றுள்ளது. இந்தியாவில் BS-VI சான்றிதழ் பெற்ற முதல் உற்பத்தி நிறுவனம் ஆகும்.

## ரூ.100 லட்சம் கோடியில் உள்கட்டமைப்பு வசதிகள்

- **இந்தியாவில் தயாரிப்போம்** திட்டத்தின் கீழ் முதலாவது மெட்ரோ ரயில் பெட்டிகளை 14 வழித்தடங்களுடன் 337 கி.மீ. நீளம் கொண்ட மெட்ரோ ரயில் பாதையை மும்பையில் பிரதமர் மோடி தொடங்கி வைத்தார்.

### இதர மெட்ரோ ரயில்கள்

- மகாராஷ்டிரா மாநிலத்தில் பிரதமர் மோடி 3 வழித்தடங்களை தொடங்கி வைத்தார்.

| மெட்ரோ வழித்தடம் | கி.மீட்டர் | கோடி |
|---|---|---|
| கைமுக்-சிவாஜி சௌக் | 9.2 | 4,476 |
| வடலா-சிஎஸ்டி | 12.8 | 8,739 |
| கல்யாண்-தலோஜா | 20.7 | 5,865 |

- இந்த மூன்று வழித்தடங்களும் வரும் 2026-ஆம் ஆண்டுக்குள் முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- நாடு முழுவதும் ரூ.100 லட்சம் கோடி மதிப்பிலான உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதே நமது இலக்கு என்று பிரதமர் மோடி தெரிவித்தார்.

## உலக தேர்தல் அமைப்பின் சர்வதேச மாநாடு

- உலக தேர்தல் அமைப்பின் சர்வதேச மாநாடு கர்நாடக மாநில நலைநகர் பெங்களூருவில் நடைபெற்றது. இதில் இந்திய தேர்தல் ஆணைய துணை ஆணையர் உமேஷ் சின்ஹா பங்கேற்றார்.

## ஏர் இந்தியா: நெகிழிபை தடை விதிப்பு

- ஏர் இந்தியா நிறுவனம் ஒரு முறை மட்டும் பயன்படுத்தப்படும் நெகிழி பொருள்களுக்கு அக்டோபர் 2 முதல் தடை விதிக்கப்படுவதாக தெரிவித்துள்ளது.

## இந்தியா - கானா நாடுகளுக்கிடையேயான வெளியுறவு அமைச்சர்கள் ஆலோசனை கூட்டம்

- இந்தியா - கானா நாடுகளுக்கிடையேயான வெளியுறவு அமைச்சர்கள் ஆலோசனை முதல் சந்திப்பு டெல்லியில் நடைபெற்றது. இந்திய தூதுக்குழு டி.எஸ். திருமூர்த்தி, கானா நாட்டின் வெளியுறவு மற்றும் பிராந்திய ஒருங்கிணைப்பு துணை அமைச்சர் சார்லஸ் ஓவிரெடு தலைமை தாங்கினார்.

## மெகா விற்பனையாளர் சந்திப்பு 2019

- மெகா விற்பனையாளர் சந்திப்பு 2019 லக்னோவில் நடைபெற்றது. இந்த சந்திப்புக்கு இந்திய இரயில்வே ஆராய்ச்சி வடிவமைப்புகள் மற்றும் தர நிலைகள் அமைப்பு ஏற்பாடு செய்திருந்தது.

## "Walk to Work" பிரச்சாரம்

- மேகாலயாவில் பிரதமரின் ‘ஆரோக்கியமான இந்தியா‘ இயக்கத்தின் ஒரு பகுதியாக ‘வேலைக்கு நடந்து செல்லுங்கள்‘ என்ற பிரச்சாரத்தை அம்மாநில முதல்வர் கானராட் கே சங்மா தொடங்கி வைத்தார். இந்த பிரச்சாரத்தின் மூலம் எரிபொருள் செலவை குறைத்தல், கார்பன்-டை-ஆக்ஸைடு உமிழ்வை குறைத்தல், நகரத்தில் நெரிசலை குறைத்தல் மற்றும் மிக முக்கியமான சுகாதாரம் மற்றும் உடல்நலம் உள்ளிட்ட பல நன்மைகளை வலியுறுத்தல் ஆகும்.

## வேடிக்கை மண்டலம்

- நாட்டின் முதன்முறையாக, ஆந்திரபிரதேச மாநில விசாகப்பட்டின ரயில்வே நிலையத்தில் வேடிக்கை மண்டலம் (Fun Zone) தொடங்கி வைக்கப்பட்டது.

## ஜம்மு-காஷ்மீரின் சொத்து, கடன் பங்கீட்டுக்கு 3 பேர் குழு அமைப்பு

- இரு யூனியன் பிரதேசங்களாக செயல் படவிருக்கும் ஜம்மு-காஷ்மீரின் சொத்துகள் மற்றும் கடன்கள் பங்கீடு தொடர்பான ஆலோசனைகளை வழங்குவதற்காக 3 உறுப்பினர்கள் கொண்ட குழுவை மத்திய அரசு அமைத்துள்ளது.
- பாதுகாப்புத் துறை முன்னாள் செயலர் சஞ்சய் மித்ரா, குழுவின் தலைவராகவும்; ஓய்வு பெற்ற ஐஏஎஸ் அதிகாரி அருண் கோயல், ஓய்வு பெற்ற இந்திய குடிமை கணக்குகள் பணி அதிகாரி கிரிராஜ் பிரசாத் குப்தா ஆகியோர் உறுப்பினர்களாகவும் செயல்படுவர். ஜம்மு - காஷ்மீர் மறுசீரமைப்புச் சட்டம் 2019இன் 84 மற்றும் 85-ஆவது பிரிவுகளின் கீழ் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## முதல் ஹெலிகாப்டர் உச்சி மாநாடு

- நாட்டின் முதல் ஹெலிகாப்டர் உச்சி மாநாட்டை உத்தரகாண்ட் மாநிலம் டேராடூனில் விமான போக்குவரத்துதுறை அமைச்சகம் ஏற்பாடு செய்திருந்தது. இதில் "ஹெலிகாப்டர் மூலம் நகரங்களுக் கிடையேயான இணைப்பை மேம்படுத்துவது" தொடர்பான பிரச்சனைகள் குறித்து விவாதிக்கப்பட்டதாக இந்திய விமானப்படை அமைச்சகம் தெரிவித்தது.

## 68வது வடகிழக்கு கவுன்சில் கூட்டம்

- கவுகாத்தியில் வடகிழக்கு மாநிலங்களின் முதல் வர்கள் கலந்துகொண்ட வடகிழக்கு கவுன்சிலின் (என்இசி) 68வது கூட்டம் நடைபெற்றது. வடகிழக்கு கவுன்சிலின் கூட்டத்தை அமித்ஷா தொடங்கி வைத்தார்.

- வடகிழக்கு கவுன்சில் 1971ஆம் ஆண்டின் வடகிழக்கு கவுன்சில் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டது. இது சீரான மற்றும் ஒருங்கிணைந்த வளர்ச்சியைப் பாதுகாப்பதற்கும் மாநிலங்களுடன் ஒருங்கிணைப்பை எளிதாக்குவதற்குமான ஒரு அமைப்பாகும்.

## சுற்றுச்சூழல் அழிவு மற்றும் பாலைவனமாக்கலை எதிர்த்து ஐ.நா.சபையின், 14வது காலநிலை மாற்றத்திற்கான மாநாடு

- ஐக்கிய நாடுகளின், பாலைவனமாவதைத் தடுப்பதற்கான அமைப்பின், 14வது மாநாடு, உத்தர பிரதேசம் மாநிலம், நொய்டாவில், நடந்தது.
- இம்மாநாட்டில் தரிசு நிலங்களை வளப்படுத்துவதில், வரும் 2030-ஆம் ஆண்டுக்குள் இந்தியா இலக்கை (50 லட்சம் ஹெக்டேர் தரிசு நிலங்களை வளப்படுத்தல்) எட்டும் என்று பிரதமர் நரேந்திர மோடி கூறினார். கடந்த 2015ஆம் ஆண்டு முதல் 2017-ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் 80 லட்சம் ஹெக்டேர் வனப் பரப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் வளப்படுத்தப்பட்டுள்ள தரிசு நிலங்களின் பரப்பளவு 2.1 கோடி ஹெக்டேராக உள்ளது. இதை, வரும் 2030-ஆம் ஆண்டுக்குள் 2.6 கோடி ஹெக்டேராக உயர்த்துவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
- ஐ.நா., சபையின், 74வது ஆண்டு பொது சபை, கூட்டம், 24ல் துவங்கி, 30ம் தேதி வரை நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில், 112 நாடுகளின் அதிபர்கள், 48 நாடுகளின் பிரதமர்கள், 30 நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் பங்கேற்றனர்.

### காந்தி அமைதி பூங்கா

- மகாத்மா காந்தியின், 150வது பிறந்த நாளையொட்டி, 24ம் தேதி, ஐ.நா., தலைமையகத்தில் நடைபெற்ற பொருளாதார மற்றும் சமூக கவுன்சில் கூட்டத்தில் பங்கேற்கிறார்.
- நியூயார்க் நகரில் உள்ள நியூயார்க் பல்கலை வளாகத்தில், மகாத்மா காந்தி அமைதி பூங்காவை, மோடி திறந்து வைத்தார்.
- மகாத்மா காந்தியின் நினைவாக அங்கு, 150 மரங்கள் நடப்படுகின்றன. இதைத் தவிர ஐ.நா.வில் நடக்கும் பருவநிலை மாறுபாடு தொடர்பான கருத்தரங்கம் உட்பட, பல நாட்டுத் தலைவர்கள் பங்கேற்கும் பல நிகழ்ச்சிகளில் மோடி பங்கேற்றார்.

### பால்பசேரா திட்டம்

- பால்பசேரா திட்டம் என்பது கட்டுமானத் தொழிலாளர்களின் குழந்தைகளின் நலனுக்காக ஒரு திட்டமாகும். இது எய்ம்ஸ் ரிஷிகேஷ் தளத்தில் (செப்டம்பர் 9) தொடங்கப்பட உள்ளது. இத்திட்டத்திற்கு மத்திய பொதுத் பணித்துறை (CPWD) ஆதரவு தெரிவிக்கிறது.

### விஜய் சங்கல்ப் பேரணி

- ஹரியானாவில் பிரதமர், விஜய் சங்கல்ப் பேரணியை தொடங்கி வைத்தார். கடந்த ஐந்து ஆண்டுகளில் மத்திய மாநில அரசால் ஹரியானா மாநிலம் பெற்ற பயன்களை பற்றி இந்த பேரணியில் தெரிவிக்கப்பட்டது. ரூ.179.75 கோடியில் மெகா உணவு பூங்கா, ரோக்டா நகரில் அமைக்க அடிக்கல் நாட்டினார்.

### PRA-KASHI கண்காட்சி

- மத்திய கலாச்சார மற்றும் சுற்றுலா துறை அமைச்சர் பிரகஹலாத் சிங் படேல் PRA-KASHI என்ற நவீன நெசவுத் தொழில்நுட்ப கண்காட்சியை டெல்லியில் தொடங்கி வைத்தார். இந்தசிறப்புகண்காட்சிதேசிய அருங்காட்சியகம் மற்றும் பல முன்னனி நிறுவனங்களுடன் இணைந்து இந்தியாவின் பலதரப்பட்ட கலாச்சாரங்களை வெளிப்படுத்தும் நோக்கில் ஏற்படுத்தப்பட்டது. இந்தாண்டில் தேசிய அருங்காட்சியகம் பலுச்சாரி ஜவுளி கண்காட்சி, இமாச்சல் நாட்டுப்புற கலை கண்காட்சி மற்றும் மேற்கு வங்கத்தின் பட்டச்சித்ரா ஓவியக் கண்காட்சியையும் நடத்தி உள்ளது.

## இந்தியாவின் முதல் பெண்கள் வணிக மையம்

- கேரளா மாநில கோழிக்கோட்டில் பெண்கள் தொழில்முனைவோரை மேம்படுத்துவதற்காக (India's First International Trade Centre for Women) இந்தியாவின் முதல் சர்வதேச வர்த்தக மையம் தொடங்கப்பட உள்ளது. ஐக்கிய நாடுகளின் நீடித்த நிலையான வளர்ச்சி மேம்பாடு (UNSDs) உடன் இணைந்து தொடங்கப்பட உள்ளது. 2021ஆம் ஆண்டு இந்த மையம் செயல்பாட்டுக்கு வரும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஹரியானா: புதிய காப்பீட்டு திட்டங்கள்

- ஹரியானாமாநிலமுதலமைச்சர்மனோகர்லால் சிறு, குறு தொழில் முனைவோர்களுக்கான முக்கிய மந்திரி வியாபாரி ஷமுகி நிகி தூர்ஹாத்னா பீமா யோஜனா (Mukhyamantri Vyapari Samuhik Nigi Durghata Beema Yojana) மற்றும் முக்கிய மந்திரி வியாபாரி ஷதிபுர்தி பீமா யோஜனா (Mukhyamantri Vyapari Kshatipurti Beema Yojana) என்ற காப்பீட்டு திட்டங்களை தொடங்கி வைத்தார்.

### முக்கிய மந்திரி வியாபாரி ஷமுகி நிகி தூர்ஹாத்னா பீமா யோஜனா

- இத்திட்டத்தின் கீழ் ரூ. 5 லட்சம் வரை காப்பீட்டு தொகை வழங்கப்படுகிறது.

### முக்கிய மந்திரி வியாபாரி ஷிதிபுர்தி பீமா யோஜனா

- இத்திட்டத்தின் கீழ் ரூ.5 லட்சம் முதல் ரூ.25 லட்சம் வரை காப்பீட்டு தொகை வழங்கப்படுகிறது. சிறு, குறு வணிக தொழிலாளர்கள் ஹரியானா மாநிலத்தின் சரக்கு மற்றும் சேவை வரிகள் கீழ் பதிவு செய்யப்பட்டவர்களுக்கு இத்திட்டத்தினால் பயன்பெற முடியும்.
- ரூ.5 லட்சம் முதல் ரூ.25 லட்சம் வரையிலான காப்பீட்டு தொகை வழங்கும் நாட்டின் முதல் மாநிலம் ஹரியானாவாகும்.

## இந்தியாவின் இரண்டாவது பலதரப்பட்ட மாதிரி முனையம்

- பிரதமர் நரேந்திர மோடி இந்தியாவின் இரண்டாவது பெரிய பலதரப்பட்ட மாதிரி முனையம்ஜார்கண்ட் மாநிலத்தில்சாஹிப்கன்ஜ் என்ற இடத்தில் தொடங்கி வைத்தார். ஜல் மார்க் விகாஸ் திட்டத்தின் கீழ் இந்த மையம் அமைக்கப்பட்டது. பலதரப்பட்ட மாதிரி முனையம் என்பது சாலை-ரயில்-நதி ஆகியவை ஒன்றாக சந்திக்கும் சாலை ஆகும். கடந்த 2018ஆம் ஆண்டு முதல் பலதரப்பட்ட மாதிரி முனையம் வாரணாசியில் தொடங்கி வைத்தார். இந்த இரண்டாவது முனையம் வங்காள நாட்டையும் இணைக்கிறது.

| முதல் பாதை | இரண்டாவது பாதை |
|---|---|
| பெயர் : வாரணாசி - ஹால்தியா | பெயர் : சாஹிப்கன்ஜ் - ஹால்தியா |
| எடை : 1500-2000 டன் | எடை : 30 லட்சம் |

**ஜல்மார்க் விகாஷ்**

- இந்தியாவின் முதல் உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்தான ஜல் மார்க் விகாஸ் திட்டத்தை பிரதமர் மோடி உத்தரபிரதேச மாநிலத்தில் 12 நவம்பர் 2018 அன்று தொடங்கி வைத்தார்.

## முதல் ஊட்டச்சத்து சர்வதேச ஆய்வு 2019

- நாட்டின் முதல் ஊட்டச்சத்து சர்வதேச ஆய்வை அனைத்திந்திய மருத்துவ அறிவியல் நிறுவனம், அயோடின் குறைபாடு கோளாறுகளை கட்டுப்படுத்துவதற்கான இந்திய கூட்டமைப்பு, சர்வதேச ஊட்டச்சத்து நிறுவனத்துடன் இணைந்து நடத்தியது.
- இப்பட்டியலில் ஜம்மு & காஷ்மீர் (Best Perform) உணவில் அயோடின் உப்பை பயன்படுத்திக் கொள்வதில் முதல் இடத்தில் உள்ளது.

| Top Five | Least Five |
|---|---|
| ஜம்மு & காஷ்மீர் | தமிழ்நாடு |
| நாகலாந்து | ஆந்திர பிரதேசம் |
| மணிப்பூர் | ராஜஸ்தான் |
| மிசோரம் | ஒடிசா |
| மேகாலயா | ஜார்கண்ட் |

## 'இந்தியா சாப்ட்' சர்வதேச கண்காட்சி

- நாட்டில் இருந்து தகவல் தொழில்நுட்ப சேவைகளின் ஏற்றுமதியைஅதிகரிக்கும் வகையில் **இந்தியா சாப்ட்** என்னும் சர்வதேச கண்காட்சி மற்றும் மாநாடு ஹைதராபாத்தில் அடுத்த ஆண்டு மார்ச் 3,4 ஆகிய தேதிகளில் நடைபெறவுள்ளது.
- தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களின் ஏற்றுமதி சேவைகளை அதிகரிக்கும் வகையில் நடைபெறும் இந்தக் கண்காட்சியில் 60 நாடுகளில் இருந்து 500 வெளிநாட்டினர் பங்கேற்பார்கள்.
- தகவல் தொழில்நுட்பப் பிரிவில் புதியதாக தயாரித்த பொருளையோ அல்லது சேவையை ஏற்றுமதி செய்யவோ இந்தக் கண்காட்சி உதவியாக இருக்கும். மேலும், புதிய தொழில் நுட்பத்தைத் தெரிந்து கொள்ளவும் இந்த கண்காட்சி பயனுள்ளதாக இருக்கும். தமிழகத்தை சேர்ந்த சிறு, நடுத்தர ஐ.டி. நிறுவனங்களுக்கு இது உதவியாக இருக்கும்.

## கங்கை மாரத்தான் - 2019

- கங்கை நதியைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் புதுதில்லி ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கில் மாரத்தான் ஓட்டம் நடைபெற்றது. இந்த விழிப்புணர்வு மாரத்தான் மத்திய ஜல்சக்தி அமைச்சகத்தால் நடத்தப்பட்டது.

## முதல் சர்வதேச நிலையான கல்வி மாநாடு 2019

**(First International Conference on Sustainability Education 2019)**

- முதல் சர்வதேச நிலையான கல்வி மாநாடு 2019 டெல்லியில் செப்டம்பர் 9-10 வரை நடைபெற்றது. இம்மாநாட்டிற்கு மோபிஸ் நிறுவனம் ஏற்பாடு செய்திருந்தது. இந்தியா வுடன் ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல் மற்றும் நாடுகள் கலாச்சார அமைப்பு இணைந்து மாநாட்டில் கலந்து கொண்டது. **இம்மாநாட்டில் ஆசியாவின் முதல் சுற்றுச்சூழல் பள்ளி, தொடங்கி வைக்கப்பட்டது. இந்த பள்ளி வரும் 2021 ஆண்டு முதல் 6 வகுப்பு முதல் 12 வகுப்புகள் வரை தொடங்கப்பட உள்ளது.**

## 'நமோ ஒன்' மூலிகை வனம்

- உத்தரபிரதேச மாநிலத்தில் **நமோ ஒன்** எனும் பெயரில் மூலிகை வனம் உருவாக்க முன்னாள் மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் நல மேம்பாட்டு அமைச்சர் மேனகா காந்தி உருவாக்க முயற்சிகளை எடுத்து வருகிறார். இந்த மூலிகை வனம் பிரதமர் மோடியின் பிறந்த நாள் பரிசாக அளிக்கப்பட்டது.

## ஹரியானா மாநில அரசு ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் கீழ் பயன்பெற வருமான உச்ச வரம்பு உயர்வு

- ஹரியானா மாநில அரசு ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் கீழ் வருமான உச்ச வரம்பு ஆண்டுக்கு ரூ.1.8 லட்சம் வரை பயன்பெற உயர்த்தி உள்ளது.
- நாடு முழுவதும் 50 கோடி ஏழை எளிய மக்கள் பயன்பெறும் வகையில், ஆய்ஷ்மான் பாரத் எனப்படும் மருத்துவ பாதுகாப்பு திட்டத்தை 23 செப்டம்பர் 2018 பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்தார். ஆயுஷ்மான் பாரத் எனப்படும் மருத்துவப் பாதுகாப்புத் திட்டத்தின் மூலம் ஓராண்டுக்கு ஒரு குடும்பத்துக்கு 5 லட்சம் ரூபாய் வரை ஆகும்.
- மருத்துவச் செலவுகளை அரசே ஏற்றுக்கொள்ளும். அதன்படி நாட்டின் எந்தவொரு மூலையில் இருக்கும் அரசு மருத்துவமனைகளிலோ, அல்லது தனியார் மருத்துவமனைகளிலோ பயனாளர்கள் சிகிச்சை பெற்றுக் கொள்ள முடியும். இந்தப் புதிய திட்டத்தின் கீழ் அரசுக்கு ஆண்டுதோறும் கூடுதலாக 3 ஆயிரத்து 500 கோடி ரூபாய் வரை செலவாகும்.
- திட்டத்துக்காக செலவாகும் மொத்தத் தொகையில் மத்திய அரசு 60 கதவிகிதமும், மாநில அரசு 40 சதவிகிதமும் பகிர்ந்து கொள்ளும்.

## ரியல் எஸ்டேட் தொடர்பான ஒழுங்குமுறை விதிகள்

**"India's First State to Formulate Vertical Property Rule"**

- *ரியல் எஸ்டேட் துறை சார்ந்த அனைத்து தரவுகளையும் ஒரே அமைப்பு கீழ் கொண்டு வரும் செங்குத்து சொத்து விதிமுறைகளை மகாராஷ்டிரா மாநிலம் வெளியிட்டுள்ளது. இந்த முயற்சியை மேற்கொள்ளும் இந்தியாவின் முதல் மாநிலம் மகாராஷ்டிரா ஆகும்.*
- *ரியல் எஸ்டேட் துறையில் தகவல் மாற்றங்களை மேற்கொண்டு தவறுகள் செய்வதை தடுக்க இந்த விதிமுறைகள் அறிவிக்கப்பட்டுள்ளன.*

## தில்லியில் சர்வதேச திருக்குறள் மாநாடு தொடங்கியது

- *மூன்றாவது சர்வதேச திருக்குறள் மாநாடு தில்லியில் தொடங்கியது. இரண்டு நாள்கள் நடைபெறும் இந்த மாநாட்டை தமிழக தமிழ் வளர்ச்சி, கலாசாரம் மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் கே. பாண்டியராஜன் தொடக்கி வைத்தார்.*
- *10 நாடுகளைச் சேர்ந்த தமிழ் அறிஞர்கள் இந்த மாநாட்டில் பங்கேற்றுள்ளனர். மோரீஷஸ் சர்வதேச திருக்குறள் பவுண்டேசன் மற்றும் சென்னை ஆசியவியல் நிறுவனம் ஆகியவை இணைந்து நடத்தும் இந்த மாநாடு, தில்லி சாணக்கியபுரியில் உள்ள யுனெஸ்கோ கலையரங்கில் நடைபெறுகிறது.*
- *'உலக நூல் திருக்குறள்' எனும் நூலை தமிழக அமைச்சர் கே. பாண்டியராஜன் வெளியிட்டார்.*
- *'உலக அமைதி, நல்லிணக்கம் எனும் பொருளை அடிப்படையாகக் கொண்டு இந்த மாநாடு நடைபெறுகிறது. முதல் மாநாடு தமிழகத்திலும், இரண்டாவது மாநாடு லண்டன் அருகில் லிவர் பூலிலும் நடைபெற்றது. நான்காவது மாநாடு பாரீஸில் நடைபெறவுள்ளது.*

## இந்தியாவின் இரண்டாவது நீளமான இரயில்வே பாலம் : மேற்குவங்கம்

- *மேற்கு வங்கத்தில் உள்ள பர்த்வான் ஜங்ஷனில் இந்த புதிய பாலத்தை இந்திய இரயில்வே அமைத்துள்ளது. 188.5 மீட்டர் நீளமுள்ள இந்த பாலம் 190 நாட்களில் 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளது.*
- *இந்த பாலத்தை இந்திய இரயில்வே மற்றும் மேற்குவங்க அரசு இணைந்து (50:50) உருவாக்கியுள்ளது.*

## 35வது முப்படைகள் தளபதி மாநாடு 2019

- *35வது முப்படைகள் தளபதி மாநாடு 2019 ராஜஸ்தான் மாநிலம் ஜெய்சால்மர் நகரில் நடைபெற்றது. இது புனேவை தலைமை யிடமாகக் கொண்ட தெற்கு இராணுவத்தின் தலைமையில் நடைபெற்றது. முப்படைகளான இராணுவம், கடற்படை மற்றும் விமானப்படை ஆகியவை கூட்டிணைந்து கடற்படை பாதுகாப்பு, தீவுகள் பாதுகாப்பு, தென் மற்றும் தென்மேற்கு பகுதிகளில் பாதுகாப்பு அதிகரிப்பு பற்றி விவாதிக்கப்பட்டது.*

## நாட்டின் மிகப்பெரிய சூரியஒளி உற்பத்தி பூங்கா

- *தேசிய தெர்மல் பவர் கார்பரேஷன் லிமிட் நாட்டின் மிகப்பெரிய சூரிய ஒளி உற்பத்தி பூங்கா குஜராத் மாநிலத்தில் அமைக்கப்பட உள்ளதாக இந்நிறுவனம் தெரிவித்துள்ளது. இதன் உற்பத்தி திறன் ஐந்து ஜிகாவாட் ஆகும்.*
- *தேசிய தெர்மல் பவர் கார்பரேஷன் லிமிட்டின் 2032 ஆம் ஆண்டுக்குள் 32 ஜிகாவாட் புதுபிக்க ஆற்றல் உருவாக்கத்தின் ஒரு பகுதியாக இந்த ஐந்து ஜிகாவாட் கொண்ட சூரியஒளி உற்பத்தி பூங்கா குஜராத்தில் அமைக்கப்பட உள்ளது.*
- *இதன் மூலம் புதைப்படிவ எரிபொருள் 96% இருந்து 70% குறைக்க உள்ளது.*

- 2022 ஆம் ஆண்டுக்குள் 175 ஜிகாவாட் புதுபிக்க ஆற்றல் உருவாக்க வேண்டும் என்று பிரதமர் மோடி இலக்கு நிர்ணயித்து உள்ளார்.

### ஒரே அடையாள அட்டை

- இந்தியப் பதிவு ஆணையத்தின் புதிய அலுவலகத்துக்கான அடிக்கல் நாட்டு விழா தில்லியில் நடைபெற்றது.
- இவ்விழாவில் ஆதார், ஓட்டுநர் உரிமம், கடவுச் சீட்டு, வங்கிக் கணக்குப் புத்தகங்கள் என அனைத்துக்கும் தனித்தனி அடையாள அட்டைக்குப் பதிலாக, நாடு முழுவதும் செல்லுபடியாகும் ஒரே அடையாள அட்டை இருக்க வேண்டுமென மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா யோசனை தெரிவித்துள்ளார்.

### மக்கள்தொகை கணக்கெடுப்பு:

- 2021 ஆம் ஆண்டு மார்ச் 1 ஆம் தேதியின் படி, நாட்டிலுள்ள மக்கள்தொகையின் கணக்கெடுப்புப் பணிகள் நடத்தப்படவுள்ளன.
- ஜம்மு-காஷ்மீர், ஹிமாச்சலப் பிரதேசம், உத்தரகாண்ட் ஆகிய மாநிலங்களில் 2020 ஆம் ஆண்டு அக்டோபர் 1 ஆம் தேதி நிலவரப்படி கணக்கெடுப்புப் பணிகள் நடைபெறவுள்ளன. 16 மொழிகளில் கணக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது. இந்தக் கணக்கெடுப்புக்காக ₹ 12,000 கோடி செலவிட மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.
- 2011-ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பில், சில மாநிலங்களில் பாலின விகிதம் குறைவாகக் காணப்பட்ட காரணத்தால் தான், 'பெண் குழந்தைகளைக் காப்போம், பெண் குழந்தைகளுக்குக் கல்வியளிப்போம்' திட்டம் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் ஹரியாணா மாநில அரசு கடந்த 5 ஆண்டுகளில் சிறப்பாகப் பணியாற்றியதன் காரணமாக, அங்கு ஆண்-பெண் பாலின விகிதம் மேம்பட்டுள்ளது.

### முதல் பாலிஎதிலீன் டெரெப்தாலேட் பாட்டில்களை நொறுக்கும் இயந்திரம் நிறுவப்பட்டது

- நாட்டில் முதல்முறையாக மும்பை ராஜஸ்தான் அதிவேக ரயில் நிலையத்தில் பாலிஎதிலீன் டெரெப்தாலேட் பாட்டில்களை நொறுக்கும் இயந்திரத்தை இந்திய இரயில்வேத் துறை நிறுவி உள்ளது.
- ஒரு முறை பயன்படுத்தப்படும் நெகிழிகளின் பயன்பாட்டை குறைக்கவும், பசுமை திட்டம், தூய்மை இந்தியா ஆகியவற்றை செயல்படுத்துவதற்காக இந்திய இரயில்வேத் துறை சேர்ந்த மேற்கு ரயில்வேத் துறையால் செயல்படுத்தப்பட்டது.

### நாட்டின் முதல் மத்திய காவல் பல்கலக்கழகம்

**(Country's First Central Police University)**

- உத்தரபிரதேச மாநிலம் கிரேடர் நொய்டாவில் நாட்டின் முதல் மத்திய காவல் பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டுள்ளது. இப்பல்கலைக்கழகம் யமுனா நெடுஞ்சாலை அருகே அமைக்கப்பட உள்ளது. நாட்டின் சட்டம் ஒழுங்கை மேம்படுத்துவது இதன் நோக்கமாகும்.

### ஆயுஷ்மான் பாரத் திட்டத்துடன் ஓலா நிறுவனம் ஒப்பந்தம்

- உலகின் மிகப்பெரிய சுகாதார காப்பீட்டு திட்டமானஆயுஷான்பாரதத்திட்டத்துடன்ஓலா நிறுவனம் ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.
- இத்திட்டத்தின் மூலம் ஓலா நிறுவனத்தில் பணிபுரியும் ஓட்டுநர்களுக்கு மற்றும் அவர்கள் குடும்பங்களுக்கு சுகாதார காப்பீட்டுத் தொகை வழங்கப்படுகிறது.
- முதல் கட்டமாக சோதனை முறையில் டெல்லியில் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது. ஏபி அட்டை (AB Card) பெறுவதன் மூலம் அனைத்து ஓலா ஓட்டுநர்கள் காப்பீட்டு தொகை பெறலாம்.

**அரசு காப்பீடு திட்டம் ஆயுஷ்மான் பாரத்**

- டெல்லி, பிரதமர் நரேந்திர மோடி 2018 செப்டம்பர் 23-ம் தேதி தொடங்கி வைத்த ஆரோக்கிய காப்பீடு திட்டத்தின் பெயர் 'ஆயுஷ்மான் பாரத்'
- இது ஒரு தேசிய சுகாதார பாதுகாப்பு திட்டம் நாடு முழுக்க ஏழை, எளிய 10 கோடி குடும்பங்களுக்கு (ஏறத்தாழ 50 கோடி பலனாளிகள்) ஆண்டுக்கு தலா ரூ. 5 லட்சம் வரையில் மருத்துவமனை செலவினங்களை ஏற்கும் திட்டம் இதுவாகும்.

## 118 புதிய சமூக வானொலி நிலையம்

- *மத்திய அமைச்சர் பிரகாஷ் ஜாவடேகர் 118 புதிய சமூக வானொலி நிலையங்கள் தொடங்கப்பட உள்ளதாக தெரிவித்துள்ளார்.*

**இடங்கள்:**

- *16 இடதுசாரி தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்ட இடங்களில்,*
- *6 அதிகமாக இடதுசாரி தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில்*
- *25 கடலோர மாவட்டங்களில்*
- *17* (Aspirational District)
- *3 வடகிழக்கு மாநிலங்களில்*
- *ஜம்மு & காஷ்மீர் மற்றும் லடாக்*
- *சமூக வானொலி நிலையம்*

- *சமூக வானொலி நிலையம் என்பது (குறைந்த சக்தி) 10 முதல் 15 கி.மீ. வரை சுற்றளவு கொண்ட பகுதிகளில் ஒளிபரப்பாகும் தன்மை கொண்டவை. இதன் மூலம் விவசாயம் தொடர்பான தகவல்கள், மக்கள் நலம் சார்ந்த அரசாங்க திட்டங்கள், வானிலை பற்றிய தகவல்களை அறிந்து கொள்ள முடியும்.*

## யுனானி மருத்துவ மையம் மற்றும் சித்த மருத்துவ ஆராய்ச்சி பிரிவு

- *டெல்லியில் உள்ள சஃப்ஜங் மருத்துவ மனையில் யுனானி மருத்துவமையம் மற்றும் சித்த மருத்துவ ஆராய்ச்சி பிரிவு தொடங்கப் பட்டுள்ளது. இதை மாநில ஆயுஷ் மற்றும் பாதுகாப்பு அமைச்சர் ஸ்ரீபாத் யசோ தொடங்கி வைக்கத்தார்.*
- *இந்த யுனானி மருத்துவ மையம் மத்திய யுனானி மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில்* (CCRUM) *மற்றும் சித்த மருத்துவ ஆராய்ச்சி பிரிவு சித்த மருத்துவ ஆராய்ச்சி மையத்தால்* (CCRS) *நிறுவப்பட்டது.*
- *இந்த பிரிவுகள் டெல்லியில் உள்ள தீனதயாள் உபாத்தியாய் மருத்துவமனை மற்றும் ராம் மனோகர் லோஹியா மருத்துவமனையில் தற்போது இயக்கப்பட்டு வருகிறது.*

## முக்கிய மந்திரி தால் போஷித் யோஜனா

**(Mukhya Mantri Dal Poshit Yojana)**

- *உத்தரகண்ட் முதலமைச்சர் திரிவேந்த்ர சிங் ராவத், மாநிலத்தில் ரேஷன் கார்டு வைத்திருப்பவர்களுக்கு சந்தை விகிதத்தை விட மிகக் குறைந்த விலையில் இரண்டு வெவ்வேறு பருப்பு வகைகளை இரண்டு கிலோ கிராம் வழங்குவதற்காக* **முக்கிய மந்திரி தால் போஷித் யோஜனா** *என்ற திட்டத்தை தொடங்கி வைத்தார்.*

## இந்தியாவின் முதல் காகிதமற்ற சட்டமன்றம்

- *பிரதமர் நரேந்திர மோடி ஜார்கண்ட் மாநிலத்தில் புதிய சட்டமன்ற கட்டிடத்தை செப்டம்பர் 12ல் திறந்து வைத்தார். இது இந்தியாவின் முதல் காகிதமற்ற சட்டமன்றம் ஆகும். இக்கட்டிடத்தை 465 கோடியில் 57,220 சதுர மீட்டரில் கட்டப்பட்டுள்ளது.*

# 7 சர்வதேச நிகழ்வு



### விண்வெளி போர்ப் படைப் பிரிவு : அமெரிக்கா தொடக்கம்

- விண்வெளியில் உள்ள தங்களது செயற்கைக் கோள்களைப் பாதுகாப்பதற்காக, **விண்வெளி போர்ப் படைப் பிரிவை** அமெரிக்கா அதிகாரப்பூர்வமாக அறிமுகப்படுத்தி யுள்ளது. சீனா, ரஷியா ஆகிய நாடுகளின் அச்சுறுத்தல் களை எதிர்கொள்வதற்காக, விண்வெளி போர்ப் படைப் பிரிவு தொடங்கப்பட்டுள்ளது. அமெரிக்காவின் பாதுகாப்பில் விண்வெளி முக்கியப் பங்கு வகிப்பதை இந்தப் பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது நிரூபித்துள்ளது.

### உலகளாவிய மகிழ்ச்சி ஆய்வுகள் 2019

- இந்தியாவில் இப்சாஸ் நடத்திய புதிய உலகளாவிய மகிழ்ச்சி கணக்கெடுப்பில் இந்தியா 9-வது இடத்தில் உள்ளது.
- 28 நாடுகள் பங்கேற்ற இந்த பட்டியலில் ஆஸ்திரேலியா மற்றும் கனடா நாடுகள் முதல் இடத்திலும், சீனா இரண்டாவது இடத்திலும் உள்ளது. கடைசி இடத்தில் அர்ஜென்டினா, ஸ்பெயின், ரஷ்யா ஆகிய நாடுகள் உள்ளன.

### தெஸ்ஸலோநீகி சர்வதேச கண்காட்சி

- கீரிஸ் நாட்டில் நடைபெற்ற 84வது தெஸ்ஸலோநீகி சர்வதேச கண்காட்சி நடைபெற்றது. இந்த கண்காட்சியில் மத்திய வணிக மற்றும் தொழில்துறை அமைச்சர் ஹர்தீப் சிங் புரி கலந்து கொண்டார். பொறியியல், தொழில்நுட்பம், விண்வெளித்துறை, மருத்துவம், கலாச்சாரம், ஜவுளித்துறை, ஆயுர்வேதம், யோகா ஆகிய துறைகளில் நவீன தொழில்நுட்பங்கள் பயன்படுத்துவதன் மூலம் இந்தியா வளர்ச்சி அடையும் என்று மத்திய வணிக மற்றும் தொழில்துறை தெரிவித்து உள்ளது.

### கிழக்கு பொருளாதார கூட்டமைப்பு மாநாடு

- கிழக்கு பொருளாதார கூட்டமைப்பு மாநாடு ரஷியாவின் விளாதி வோஸ்டாக் நகரில் செப்டம்பர் 4-ஆம் தேதி முதல் 6-ஆம் தேதி வரையில் நடைபெறவுள்ளது. ரஷிய அதிபர் விளாதிமீர் புதின் அழைப்பின் பேரில் மோடி அந்த மாநாட்டில் பங்கேற்க உள்ளார். ரஷியாவின் கிழக்கு மண்டலத்துக்கு இந்தியப் பிரதமர் ஒருவர் செல்வது இதுவே முதல் முறை.

### பிரதமர் மோடி ரஷ்யா பயணம் விளாடிவாஸ்டாக் - சென்னை இடையே சரக்கு கப்பல் போக்குவரத்தை தொடங்க திட்டம்

- பிரதமரின் ரஷிய பயணத்தின் போது ரஷ்யாவின் விளாடிவாஸ் டாக்-சென்னை இடையே சரக்கு கப்பல் போக்குவரத்தை தொடங்க ஒப்பந்தம் மேற்கொண்டார். இதே நகரில் இந்தியா, ரஷ்யா 20-வது உச்சி மாநாடு நடைபெற்றது. இதிலும் அவர் பங்கேற்கிறார். பீட்டர்ஸ்பர்க் - மும்பைக்கு மாற்றாக ரஷ்யாவின் விளாடிவாஸ்டாக்-சென்னை இடையேயான புதிய வழித்தடத்தில் கச்சா எண்ணெயை இறக்குமதி செய்ய மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

### ‘இந்தியா-ஆப்பிரிக்கா கூட்டமைவு மாநாடு’

- தீவிரவாதமற்ற அமைதியான உலகை உருவாக்குவதற்காக அனைவரும் இணைந்து பணியாற்றுவோம் என்ற தலைப்பிலான கருத்தரங்கில் இந்திய துணை குடியரசுத் தலைவர் வெங்கய்யா நாயுடு கலந்து கொண்டார். இம்மாநாட்டை சர்வதேச விவகாரங்களுக்கான இந்திய கவுன்சில் டெல்லியில் நடத்தியது.

## சீனாவிடம் குற்றவாளிகளை ஒப்படைக்கும் சட்டத் திருத்த வாபஸ் ஹாங்காங் நிர்வாகம் அறிவிப்பு

- ஹாங்காங்கில் குற்றம்சாட்டப்பட்ட குற்றவாளிகளை சீனாவுக்கு கொண்டு சென்று விசாரிக்கும் சட்ட திருத்த மசோதாவை கடந்த ஜுன் மாதம் ஹாங்காங் கொண்டு வந்தது. இதற்கு எதிராக ஹாங்காங்கில் தீவிர போராட்டங்கள் நடந்தன. லட்சக்கணக்கான மக்கள் வீதிகளில் திரண்டு புதிய சட்டத்துக்கு எதிராக ஆர்பாட்டம் நடத்தினர். மாணவர்களும் போராட்டத்தில் குதித்தனர்.
- சீனாவுக்கு குற்றவாளிகளை கொண்டுசென்று விசாரிக்கும் புதிய சட்ட திருத்த மசோதா திரும்பப் பெறப்படும் என்று ஹாங்காங் அறிவித்துள்ளது. பொதுமக்களின் கவலையைப் போக்கும் வகையில் மசோதா முழுமையாக திரும்பப் பெறப்படும் என்று ஹாங்காங் தலைமை செயல் அதிகாரி கேரலாம் தெரிவித்துள்ளார்.

## ககன்யான் வீரர்களுக்கு ரஷியா பயிற்சி

- விண்வெளிக்கு மனிதர்களை அனுப்பும் ககன்யான்திட்டத்தை, 2022-ஆம்ஆண்டுக்குள் செயல்படுத்த இந்திய விண்வெளி ஆய்வு அமைப்பு (இஸ்ரோ) திட்டமிட்டுள்ளது. இந்த விண்கலத்தில் செல்லவிருக்கும் இந்திய விண்வெளி வீரர்கள், ரஷியாவில் பயிற்சி பெற உள்ளனர் என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

## ஐ.நா. பொது சபையின் 74வது ஆண்டு கூட்டம்

- ஐ.நா. பொச் சபையின் 74ஆவது ஆண்டுக் கூட்டத்தின் பொது விவாதம் செப்டம்பர் 24 ஆம் தேதி தொடங்கி செப்டம்பர் 30 ஆம் தேதி வரை நடைபெற்றது.
- இந்தியாவில் 2022 ஆம் ஆண்டுக்குள் மரபுசாரா எரிசக்தி மூலம் 175 ஜிகாவாட் மின்உற்பத்திக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அந்த இலக்கை 450 ஜிகாவாட்டாக அதிகரிக்க உள்ளதாக இம்மாநாட்டில் பிரதமர் மோடி தெரிவித்தார்.

## இந்தியா-ரஷியா இடையே 15 ஒப்பந்தங்கள்

- இந்தியா, ரஷியா இடையே வர்த்தகம், பாதுகாப்பு முதலீடு, விண்வெளி, எண்ணெய்-எரிவாயு, அணுசக்தி கல்வி, கலாசாரம் உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பை மேம் படுத்துவது தொடர்பாக 15 ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன.
- ரஷியாவின் விளாடிவோஸ் டோக் நகரில் அதிபர் விளாதிமிர் புதின் ஆகியோர் இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைக்கு பின்னர், அவர்கள் முன்னிலையில் இந்த ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.
- பயங்கரவாதத்தை எதிர்கொள்ள சர்வதேச அளவில் ஒருங்கிணைந்த கூட்டணியை ஏற்படுத்த வேண்டும். விண்வெளியை ஆக்க பூர்வமான காரணங்களுக்கு பயன்படுத்த வேண்டும்; ஆயுதப் போட்டி தவிர்க்கப்பட வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டது.
- சென்னை-விளாடிவோஸ் டோக் துறைமுகங்கள் இடையே கடல்சார் தொலைதொடர்புகள் மேம்படுத்துவதற்காக, இந்திய கப்பல் போக்குவரத்து அமைச்சகம் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகி யுள்ளது. இது இந்தியாவுக்கும், ரஷியாவின் கிழக்கு பிராந்தியத்துக்கும் இடையேயான ஒத்துழைப்புக்கு மேலும் உத்வேகம் அளிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உடன் வசிப்பவர்களுடனான நல்லுறவு பட்டியல்

- உடன் வசிப்பவர்களுடனான பட்டியல் (Co-living Index 2019) லண்டனை சேர்ந்த நைட்பிராங்க் நிறுவனம் ஆசிய பசிபிக் நாடுகளின் பட்டியலை வெளியிட்டு உள்ளது. இதில் மும்பை 5வது இடத்திலும் டெல்லி 11வது இடத்திலும் உள்ளது.

| தரவரிசை | நகரம் |
|---|---|
| முதலாவது | பெய்ஜிங் |
| இரண்டாவது | டோக்கியோ |
| மூன்றாவது | ஷாங்காய் |

## 6வது சர்வதேச இந்தியா-சீனா பொருளாதார கருத்தரங்கம்

- இந்தியா மற்றும் சீனா நாடுகளுக்கிடையேயான பொருளாதார கருத்தரங்கம் (செப்டம்பர் 7-9) டெல்லியில் நடைபெற்றது. இந்த கருத்தரங்கில் இரு நாடுகளின் கட்டமைப்புகள், ஆற்றல், உயர்தர தொழில்நுட்பங்கள், வள பாதுகாப்பு, மருந்துகள் பற்றி விவாதிக்கப்பட்டன. நிதி ஆயோக் துணைத்தலைவர் ராஜிவ் குமார் மற்றும் சீன நாட்டின் தேசிய அபிவிருத்தி மற்றும் சீர்திருத்த ஆணையர் ஆகிய இருவரும் தலைமை தாங்கினர்.

## நான்காவது சர்வதேச பெருங்கடல் மாநாடு 2019

- நான்காவது சர்வதேச பெருங்கடல் மாநாடு மாலத்தீவு நாட்டின் மலேவில் நடைபெற்றது. இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் இம்மாநாட்டில் கலந்து கொண்டார். இதன் மையக்கருத்து 2019 : "Sewing the Indian Ocean Region : Traditional and Non-Traditional Challenges".

## உலக கம்பர் மாநாடு

- 2020ஆம் ஆண்டு சுவிட்சர்லாந்து நாட்டில், சூரிச்சில் நகரில் முதலாவது உலக கம்பர் மாநாடு நடைபெற உள்ளது.

## 24வது சர்வதேச ஆற்றல் காங்கிரஸ் மாநாடு

- 24வது சர்வதேச ஆற்றல் காங்கிரஸ் மாநாடு அபுதாபியில் நடைபெற்றது. இம்மாநாட்டில் தனியார் மற்றும் அரசு நிறுவனங்கள், கல்வித்துறை மற்றும் ஊடகங்கள் உள்ளிட்ட சர்வதேச எரிசக்தி பங்குதாரர்களை ஒருங்கிணைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இம்மாநாட்டின் மையக்கருத்து: "Energy for Prosperity".

## மாற்றுத் திறனாளிகளின் உரிமைகள் தொடர்பான மாநாடு

- 22வது ஐக்கிய நாடுகள் சபையின் மாநாடு சுவிட்சர்லாந்தின்ஜெனிவாநகரில்நடைபெற்றது. இந்தியாவின் மாற்றுத்திறனாளிகளின் அதிகாரமளித்தல் துறை செயலாளர் சகுந்தலாஜாம்லின் கலந்து கொண்டார்.

## 8வது ஆசிய நாடுகளின் எரிசக்தி அமைச்சர்களின் வட்ட மேசை மாநாடு

- அபுதாபியில் நடைபெற்ற எட்டாவது ஆசிய நாடுகளின் எரிசக்தி அமைச்சர்களின் வட்டமேசை மாநாட்டில் மத்திய பெட்ரோலிய மற்றும் எரிசக்தி துறை அமைச்சர் பங்கேற்றார். இந்த மாநாட்டில் (8th Asian Ministerial Energy Rountable) ஆசிய நாடுகளின் எரிசக்தி பாதுகாப்பு வளர்ச்சி மாற்றம் பற்றி விவாதிக்கப்பட்டது.

## குரு நானக் தேவ்வின் சுயசரிதை பல மொழிகளில் மொழிபெயர்க்க யுனெஸ்கோ முடிவு

- குரு நானக் தேவ்வின் 550வது பிறந்த நாளை (1469 ஏப்ரல் 15) நினைவுக்கூரும் வகையில், ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பு குருநானக் தேவ்வின் எழுத்துகளின் தொகுப்பை வெவ்வேறு முக்கிய மொழிகளில் மொழிபெயர்த்து வெளியிட உள்ளதாக மத்திய அரசின் கலாச்சார அமைச்சகம் அறிவித்துள்ளது.

## தென்கிழக்கு ஆசியாவின் மிகப்பெரிய சூரியமின் உற்பத்தி நிலையம்

- தென்கிழக்கு ஆசியாவின் மிகப்பெரிய சூரியமின் உற்பத்தி நிலையம் வியட்நாம் நாட்டில் அமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ஆண்டுக்கு 688 மில்லியன் கிலோவாட் மின்சாரம் உற்பத்தி செய்ய முடியும்.

## பிலிப்பைன்ஸ் நாட்டில் 2 கிலோ பிளாஸ்டிக் குப்பைக்கு 1 கிலோ அரிசி இலவசம்

- உலகம் முழுவதும் கடலில் பிளாஸ்டிக் கழிவுகள் கலப்பதும், அதனால் கடல்வாழ் உயிரினங்கள் உயிர் இழப்பதும் அண்மை காலமாக அதிகரித்து வருகிறது. **அதிக பிளாஸ்டிக் கழிவுகளை வெளியேற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளில் பிலிப்பைன்ஸ் முதலிடம் வகிப்பதாகவும், அந்நாட்டில் திடக்கழிவு குறித்த சட்டங்கள் மோசமாக இருப்பதாகவும் ஆய்வு அறிக்கைகள் கூறுகின்றன.**
- பிளாஸ்டிக் பயன்பாட்டை குறைப்பதற்கான முயற்சி மட்டுமல்லாது பிளாஸ்டிக்கை முறையாக மறுசுழற்சி செய்யும் பணியிலும் பிலிப்பைன்ஸ் நாட்டு அரசு ஈடுபட்டு வருகிறது.
- அந்த வகையில் தலைநகர் மணிலா அருகே உள்ள பேயனான் கிராமத்தில் பிளாஸ்டிக் கழிவுகளை அழிக்கவும், வறுமை கோட்டுக்கு கீழ் வாழும் மக்களின் பசியை போக்கவும் அரசு புதிய திட்டம் ஒன்றை அறிமுகம் செய்துள்ளது. அந்த திட்டத்தின் படி 2 கிலோ பிளாஸ்டிக் குப்பைகளை சேகரித்து அரசிடம் ஒப்படைக்கும் மக்களுக்கு ஒரு கிலோ அரிசி இலவசமாக வழங்கப்படுகிறது.

## புலத்திஷி எக்ஸ்பிரஸ்

- ஸ்ரீலங்கா ஜனாதிபதி மைத்ரீ பாலா சிறிசேனா, போக்குவரத்துத்துறை அமைச்சர்அர்ஜுனா ரானதுங்கா மற்றும் ஸ்ரீலங்காவிற்கான இந்திய தூதர் ஸ்ரீலங்கா தரன்ஜித் ஆகியோர்களால் கொழும்பு துறைமுக ரயில் நிலையத்தில் ‘புலத்திஷி எக்ஸ்பிரஸ்‘ கொடியசைத்து தொடங்கி வைக்கப்பட்டது.
- இந்த இரயில் பெட்டிகள் ‘இந்தியாவில் தயாரிப்போம்‘ (Make in India) திட்டத்தின் கீழ் இணைப்பு பெட்டி தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்டது. இந்த ரயில் பொலோனருவா என்ற இடத்தில் இருந்து கொழும்பு துறைமுக ரயில் நிலையம் வரை இயக்கப்பட உள்ளது.

## உலக தமிழ் கவிஞர்கள் மாநாடு

- உலக தமிழ் கவிஞர்கள் மாநாடு கம்போடியாவில் இரண்டு நாட்கள் நடைபெற்றது. கம்போடியா நாட்டின் சியம்ரீப் மாநில கலாசார மற்றும் பண்பாட்டுத்துறையுடன் இணைந்து இந்த மாநாட்டை ஒருங்கிணைத்து நடத்தியது. இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், ஆஸ்திரேலியா, கனடா, அமெரிக்கா உள்பட 40 நாடுகளில் இருந்து 200 தமிழ் கவிஞர்கள் இந்த மாநாட்டில் பங்கேற்று உள்ளனர்.

## ‘டைம்ஸ்’ நிறுவனத்தின் சர்வதேச தரவரிசை பட்டியல் வெளியீடு

- கல்வித்தரம், ஆராய்ச்சிக்கான முக்கியத்துவம், அறிவுசார் சொத்துரிமை உட்பட பல்வேறு அம்சங்கள் அடிப்படையில் உலகளவில் சிறந்த உயர்கல்வி நிறுவனங்களின் பட்டியலை ’டைம்ஸ்’ நிறுவனம் தரவரிசைப் படுத்தி ஆண்டுதோறும் வெளியிட்டு வருகிறது. அந்த வகையில், 2020-ம் ஆண்டுக்கான உலகின் சிறந்த உயர்கல்வி நிறுவனங்களின் பட்டியலை வெளியிட்டது.
- இதில் இங்கிலாந்தின் ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகம் முதலிடத்தையும், அமெரிக்காவின் கலிபோர்னியா பல்கலைக்கழகம் 2-ம் இடத்தையும், இங்கிலாந்தின் கேம்ப்ரிட்ஜ் பல்கலைக்கழகம் 3-ம் இடத்தையும் பிடித்துள்ளன.
- பெங்களூரு இந்திய அறிவியல் கழகம் (ஐஐஎஸ்சி), ரோபர் ஐஐடி, இந்தூர் ஐஐடி ஆகியவை தரவரிசையில் 300 முதல் 400 வரையான இடங்களையும், மும்பை ஐஐடி, டெல்லி ஐஐடி, கரக்பூர் ஐஐடி ஆகியவை பட்டியலில் 400-500 இடையேயான இடங்களையும் பெற்றுள்ளன.

## 63-வது வருடாந்திர சர்வதேச அணுசக்தி முகமை மாநாடு (IAEA)

- 63 வது வருடாந்திர சர்வதேச அணுசக்தி முகமை மாநாடு ஆஸ்திரியா நாட்டில் வியன்னா நகரில் நடைபெற்றது. சர்வதேச அணுசக்தி முகமை சேர்ந்த 171 உறுப்பு நாடுகள் பங்கேற்றனர். இந்த மாநாட்டில் இந்தியாவை சேர்ந்த அணுசக்தி ஆணையத்தின் தலைவர் மற்றும் அணுசக்தி துறையின் செயலாளர் டாக்டர் கே.என். வியாஸ் கலந்து கொண்டார்.

ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு : 1957
தலைமையிடம் : வியன்னா, ஆஸ்திரியா

## கர்தார்பூர் வழித்தடச் சாலை விரைவில் பயன்பாட்டுக்கு திறக்கப்படும்

- சீக்கிய பக்தர்கள் யாத்திரை மேற்கொள்வதகாக அமைக்கப்பட்டு வரும் கர்தார்பூர் வழித்தடச் சாலை வரும் நவம்பர் மாதம் 9-ஆம் தேதி திறக்கப்படும் என்று பாகிஸ்தான் அறிவித்தது.
- கர்தார்பூர் வழித்தடம் திறக்கப்பட்ட முதல் சில நாள்களுக்கு, இந்த வழித்தடம் வழியாக ஒரு நாளைக்கு 5,500 பக்தர்கள் இந்தியாவில் இருந்து அனுமதிக்கப்படுவர். சீக்கிய யாத்ரீகர்களின் வசதிக்காக 73 இடங்களில் சோதனை மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.
- யாத்திரை தொடங்கிய சில நாள்களுக்கு இந்த முறை பின்பற்றப்படும். அதன் பின்னர், ஒரு நாளைக்கு 10,000 பக்தர்கள் அனுமதிக்கப் படுவர். அதற்கேற்றவாறு சோதனை மையங்கள் அதிகரிக்கப்படும் என்று கூறினார்.
- சீக்கிய மதத்தை நிறுவியவரும் அதன் முதல் குருவுமான குருநானக்கின் பிறந்த தினத்தை யொட்டி இந்தியாவிலிருந்து ஆண்டுதோறும் சீக்கிய யாத்ரீகர்கள் பாகிஸ்தானின் கர்தார்பூரில் உள்ள நானா சாஹிப் குருத்வாராவுக்கு யாத்திரை செல்வதை வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

## எரிசக்தி: அமெரிக்காவுடன் ரூ. 1.77 லட்சம் கோடி ஒப்பந்தம்

- இந்திய - அமெரிக்க எண்ணெய், எரிவாயு உற்பத்தி நிறுவனங்களுக்கு இடையே ரூ. 2.5 பில்லியன் டாலர் மதிப்பீட்டில் (இந்திய மதிப்பில் சுமார் ரூ. 1.77 லட்சம் கோடி) புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.
- அரசு முறைப் பயணமாக அமெரிக்கா சென்றுள்ள பிரதமர் நரேந்திர மோடி, அந்நாட்டின் எண்ணெய் மற்றும் எரிவாயு உற்பத்தி நிறுவனங்களின் தலைவர்களைச் சந்தித்துப் பேசினார். சந்திப்பின் முடிவில், இருநாட்டு எண்ணெய் உற்பத்தி நிறுவனங்களுக்கு இடையே இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.
- இந்த ஒப்பந்தத்தை இரு நிறுவனங்களும் அடுத்த ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் தேதி இறுதி செய்யப்பட உள்ளது.

## பட்டதாரிகள் வேலைவாய்ப்பு தரவரிசைப் பட்டியல்

- QS (Quacquarelli symonds) என்ற சர்வதேச நிறுவனம் வெளியிட்டுள்ள 2020ம் ஆண்டிற்கான சர்வதேச பல்கலைக்கழகம் தரவரிசைப் பட்டியலில் அமெரிக்காவை சேர்ந்த மசாசூசெட்ஸ் பல்கலைக்கழகம் முதலிடத்திலும், இந்திய அளவில் மும்பை தொழில்நுட்ப நிறுவனம் (IIT) முதலிடத்தில் உள்ளது. வேலைவாய்ப்பு பெற்றோருக்கான தரவரிசை பட்டியலில் சர்வதேச அளவில் IIT சென்னை மூன்றாவது இடத்திலும், டெல்லி பல்கலைக்கழகம் 20 வது இடமும் பெற்றுள்ளது.

## மோடி நிகழ்ச்சியில் டிரம்ப் பங்கேற்பு

- அமெரிக்காவின் ஹூஸ்டன் நகரில், பிரதமர் மோடி பங்கேற்கும் நிகழ்ச்சியில் அமெரிக்க அதிபர் டிரம்ப் பங்கேற்பதை வெள்ளை மாளிகை உறுதிப்படுத்தியுள்ளது. செப்டம்பர் 21ல் அமெரிக்காவுக்கு பிரதமர் மோடி செல் கிறார். 22ம் தேதி டெக்சாஸ் மாகாணத்தில் அமெரிக்க வாழ் இந்தியர்களால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிகழ்ச்சியில் மோடி பங்கேற்கிறார்.
- 'ஹவ்டி மோடி' என பெயரிடப்பட்டுள்ள இந்த நிகழ்ச்சியில் 50 ஆயிரத்துக்கும் அதிகமானோர் பங்கேற்பர் என எதிர்பார்க்கப்படுகிறது. மோடியுடன் இணைந்து அமெரிக்க அதிபர் டிரம்பும் பங்கேற்பார் என தகவல் வெளியானது. இதை வாஷிங்டனில் உள்ள வெள்ளை மாளிகை உறுதி செய்தது.

## சர்வதேச சூரியசக்தி கூட்டமைப்பின் புதிய உறுப்பினர் செயின்ட் வின்சென்ட் மற்றும் கிரனாடினஸ்

- 2015ல் 121 நாடுகளை உள்ளடங்கும் நோக்கில் துவங்கப்பட்ட சர்வதேச கூட்டமைவின் 79வது உறுப்பினராக செயின்ட் வின்சென்ட் மற்றும் கிரனாடினஸ் தீவுகள் இணைய உள்ளன.
- கடகரேகை மற்றும் மகரரேகைக்கு இடைப்பட்ட பூமியின் பகுதியில் வருடம் முழுவதும் சூரிய ஒளி பெரிதும் விழுகின்ற காரணத்தால் அந்த பகுதியில் உள்ள நாடுகள் இந்த கூட்டமைவில் சேர்வதற்கு தகுதியான நாடுகள்.
- தற்போது 79 உறுப்பினர்கள் இணைந்துள்ளனர்.
- இந்த அமைப்பின் தலைமையிடம் - குருகிராம், ஹரியானா

# 8 தமிழ்நாடு



## சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையில் குளிர்சாதன மின்சாரம் பேருந்து சேவை

- சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையில் சென்னையில் முதல்முறையாக குளிர்சாதன மின்சார பேருந்து சேவையை முதல்வர் பழனிசாமி தலைமை செயலகத்தில் தொடங்கிவைத்தார். சுற்றுச்சூழல் பாதிப்பு மற்றும் எரிபொருள் செலவைக் குறைக்கும் வகையில் மின்சார பேருந்துகளை இயக்க தமிழக அரசு முடிவு செய்து, லண்டன் மாநகரத்தை தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வரும் **சி 40 முகமையிடம் ஒப்பந்தம்** மேற்கொண்டது.
- இதற்கிடையே, புதுடெல்லி, அகமதாபாத், மும்பை, கோவை, திருச்சி, சேலம் உட்பட 64 நகரங்களில் மொத்தம் 5,595 மின்சார பேருந்துகளை இயக்க சமீபத்தில் மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
- தமிழகத்தில் கோயம்புத்தூர் - 100, திருச்சிராப்பள்ளி - 100, மதுரை - 100 , ஈரோடு, திருப்பூர், சேலம், வேலூரில் தலா 50 பேட்டரி பேருந்துகளும், தஞ்சாவூரில் 25 என மொத்தம் 525 மின்சார பேருந்துகளும் இயக்க அனுமதிக்கப்பட்டுள்ளன.

## கல்வித் தொலைக்காட்சி ஒளிபரப்பு

### உலக சாதனை

- கல்வித் தொலைக்காட்சி சேனலை பிற மாநிலங்கள் மற்றும் உலக நாடுகளுக்கு முன்னோடித் திட்டமாக உருவெடுத்துள்ளது. இதன் காரணமாக **யுனிக் வேர்ல்டு ரெகார்டு நிறுவனத்தின் தலைமை தீர்ப்பாளர் ரகுமான்**, உலக சாதனைக்கான ஆவணங்கள் அனைத்தையும் சரிபார்த்து பின்னர் உலக சாதனையாக அங்கீகரித்து அதற்கான சான்றிதழை முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமியிடம் வழங்கினார்.

## லண்டனில் 3 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்

- புகழ்பெற்ற லண்டன் கிங்ஸ் மருத்துவ மனையின் கிளைகளை தமிழகத்தில் தொடங்குவதற்கான ஒப்பந்தம் உள்பட 3 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி முன்னிலையில் லண்டனில் கையெழுத்தாகின. மருத்துவர்கள் மற்றும் மருத்துவப் பணியாளர்களின் பணி மேம்பாடுகளைக் கண்டறிந்து அதனை தமிழகத்தில் செயல்படுத்தும் வகையில், தமிழக அரசுக்கும், சர்வதேச திறன்கள் மேம்பாட்டுக் கழக நிறுவனத்துக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

## சென்னையில் ஏ.என்.பி. ஆர் கேமரா பொருத்தம்

- போக்குவரத்து விதிகளை மீறுபவர்களை கண்காணிக்க நாட்டிலேயே முதன்முறையாக சென்னையில் ஏ.என்.பி.ஆர் (Automated Number Plate Recognition Camera System) கேமரா பொருத்தப்பட்டுள்ளது. இக்கேமரா மூலம் போக்குவரத்து விதிகளை மீறும் வாகனங்களின் பதிவு எண் உள்பட விவரங்களை படம்பிடிக்கும் தொழில்நுட்பம் கொண்டது. மேலும் கேமராவில் உள்ள தொழில்நுட்பம் தேசிய தகவல் ஆணையத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

## நிகழாண்டில் 4 இடங்களில் அகழாய்வுப் பணிகள்

- நிகழாண்டில் கீழடி, ஆதிச்சநல்லூர் உள்பட நான்கு இடங்களில் அகழாய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்று தொல்லியல் துறை அறிவித்துள்ளது.

### எந்தெந்த இடங்களில் ஆய்வு:

- சிவகங்கை மாவட்டம் கீழடி மற்றும் அதன் அருகிலுள்ள இடங்கள், தூத்துக்குடி மாவட்டம் ஆதிச்சநல்லூர், ஈரோடு மாவட்டம் கொடுமணல், தூத்துக்குடி மாவட்டம் சிவகளை ஆகிய இடங்களில் நிகழாண்டில் அகழாய்வுப் பணிகள் செய்யப்பட உள்ளன.

## தமிழ்நாட்டில் 5 ரயில் நிலையங்களுக்கு ஐ.எஸ்.ஓ. தரச்சான்று

- சேலம் ரயில்வே கோட்டத்துக்குள்பட்ட சேலம், கரூர், ஈரோடு, திருப்பூர், மேட்டுப் பாளையம் ஆகிய 5 ரயில் நிலையங்கள் ஐஎஸ்ஓ:14001:2015 (சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம்) தரச்சான்றிதழ் பெற்றுள்ளன.
- தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் உத்தரவின்படி, ரயில்வே வாரியம் அந்தந்த மண்டல ரயில்வே துறைகளுக்கு 24 வழிகாட்டுதல்களை பின்பற்றிட அறிவுறுத்தியது. இந்த வகையில், தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் வழிகாட்டுதல்கள் 36 ரயில் நிலையங்களில் பின்பற்றப்பட்டன. முதல்கட்டமாக சென்னை சென்ட்ரல், திருவனந்தபுரம், திருச்சி ஆகிய ரயில் நிலையங்கள்அடையாளம் காணப்பட்டன.
- 24 வழிகாட்டுதல்கள் ஐஎஸ்ஓ: 14001:2015 சுற்றுச்சூழல் மேலாண்மை தரம் பெறுவது முதல்படியாகும். அந்த வகையில், கோவை ரயில் நிலையம் ஏற்கெனவே ஒருங்கிணைந்த மேலாண்மை திட்டத்தில் ஐஎஸ்ஓ 14001 தரச்சான்று பெற்றது. எனவே, இதர 5 ரயில் நிலையங்களுக்கும் ஐஎஸ்ஓ தரச்சான்று பெற நடவடிக்கை எடுக்கப்பட்டது.

## பல-இருப்பிட சொத்து கண்காட்சி

- இந்தியாவின் ரியல் எஸ்டேட் மேம்பாட்டாளர்கள் கூட்டமைப்பால் சென்னையில் முதல்முறையாக பல இருப்பிட சொத்து கண்காட்சி (Multi-location Property) தொடங்கப்பட்டது.

## ஐ.டி.துறையில் முதலீட்டை ஈர்க்க புதிய திட்டம்

- தகவல், தொழில்நுட்பத் துறையில் (ஐ.டி.) முதலீட்டை ஈர்க்க, டிஜிட்டல் ஊக்கமூட்டும் திட்டம் என்ற புதிய திட்டத்தை முதல்வர் கே.பழனிசாமி தொடங்கி வைத்தார். அமெரிக்காவைச் சேர்ந்த தொழில் முனைவோர்கள் ரூ.2,300 கோடிக்கு தமிழகத்தில் முதலீடு செய்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்களை, முதல்வர் பழனிசாமி முன்னிலையில் கையெழுத்தாகின.

## சென்னை சிப்பெட்டில் தொழில்நுட்ப மையம்

- சென்னை கிண்டியில் உள்ள மத்திய பிளாஸ்டிக் பொறியியல், தொழில்நுட்ப நிலையத்தில் (சிப்பெட்) ரூ.88.25 கோடி மதிப்பில் தொழில்நுட்ப மைய அமைக்கப்படும் என மத்திய ரசாயனம், உரத்துறை அமைச்சர் சதானந்த கௌடா தெரிவித்தார். இதன் ஒரு பகுதியாக, சாலை மற்றும் தெருவோரங்களில் கிடக்கும் நெகிழி பொருள்களை சேகரிக்கும் திட்டத்தை காந்தி ஜெயந்தியான அக்டோபர் 2-ஆம் தேதி பிரதமர் நரேந்திர மோடி தொடங்க உள்ளார்.

## விருதுநகரில் புதிய தொழில் பூங்கா

- விருதுநகர் மாவட்டம் காரியாப்பட்டியில் ஜவுளி பதனிடும் குழுமம், புதிய தொழில் பூங்கா ஆகியவற்றுக்கு முதல்வர் பழனிசாமி அடிக்கல் நாட்டினார். தமிழக அரசு சார்பில் கடந்த 2015-ஆம் ஆண்டு முதல் உலக முதலிட்டாளர் மாநாடு நடைபெற்றது. இந்த மாநாட்டில் புதிய ஜவுளி பதனிடும் குழுமம் மற்றும் புதிய தொழில் பூங்கா அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் தமிழக அரசுக்கும், தென் மாவட்ட ஜவுளி பதனிடும் குழுமத்துக்கும் இடையே கையெழுத்தானது.

## தனியார் நிதி நிறுவன மோசடி புகார்:

### உயர்நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி தலைமையில் குழு

- கோவையில் உள்ள தனியார் நிதி நிறுவனம் பொதுமக்களிடம் வசூலித்த ரூ.11 கோடியை முதலீட்டாளர்களுக்குத் திரும்ப வழங்க ஓய்வுபெற்ற நீதிபதி கே.என்.பாஷா தலைமையில் குழு அமைத்து உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## கீழடியில் மார்ச் 2020-க்குள் அருங்காட்சியகம்

- *கீழடியில் 2020-ஆம் ஆண்டு மார்ச் மாதத்துக்குள் அருங்காட்சியகம் திறக்கப்படும் என்று தமிழ் வளர்ச்சி தமிழர் பண்பாடு மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் க.பாண்டியராஜன் தெரிவித்தார்.*

## உதகையில் 70 இடங்களில் சுத்திகரிக்கப்பட்ட தண்ணீர் ஏடிஎம் சேவை தொடக்கம்

- *நீலகிரி மாவட்டத்தில் 70 இடங்களில் தண்ணீர் ஏடிஎம் சேவை தொடங்கப்பட்டுள்ளது.*
- *பொதுமக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் குடிநீர் பெற ஏதுவாக 70 இடங்களில் சுத்தான குடிநீர் கிடைக்கும் பொருட்டு, சுத்திகரிக்கும் குடிநீர் இயந்திரங்கள் அமைக்கப்பட்டுள்ளன.*

## சர்வதேச இளைஞர் திருவிழா

- *இளைஞர் மேம்பாட்டு கூட்டமைப்பு சார்பில், சென்னை சர்வதேச இளைஞர் திருவிழா செப்டம்பர் 1-ஆம் தேதி முதல் செப்டம்பர் 15-ம் தேதி வரை நடைபெற்றது. இதன் நிறைவு நிகழ்ச்சி சென்னை ஜவஹர்லால் நேரு உள் விளையாட்டு அரங்கில் நடைபெற்றது.*

## சூரியசக்தி மின் உற்பத்தி 10வது இடத்தில் தமிழகம்

- *மேற்கூரை சூரியசக்தி மின் நிலையங்கள் அமைப்பது தொடர்பாக, மத்திய புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் அமைச்சகம் வெளியிட்டுள்ள, தரவரிசை பட்டியலில், தமிழகம், 50.90 புள்ளிகளுடன் 10வது இடத்தில் உள்ளது.*
- *மாநில அரசுகள், மேற்கூரை சூரியசக்தி மின் நிலையம் அமைக்க ஊக்குவிப்பது; மானியம் மற்றும் அனுமதி வழங்குவது உள்ளிட்ட அம்சங்களை கருதி, 2018-19ம் ஆண்டுக்கான தரவரிசை பட்டியலை, மத்திய புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் அமைச்சகம் தற்போது வெளியிட்டுள்ளது.*

| தரவரிசை | மாநிலங்கள் | புள்ளிகள் |
|---|---|---|
| முதலாவது | கர்நாடகம் | 78.80 |
| இரண்டாவது | தெலுங்கானா | 72.20 |
| மூன்றாவது | குஜராத் | 67.90 |
| நான்காவது | ஆந்திரா | 66.10 |
| ஐந்தாவது | ராஜஸ்தான் | 62.20 |

## தமிழக தயாரிப்பு மின்சார வாகனங்களுக்கு 100% வரி விலக்கு

### புதிய கொள்கையை வெளியிட்டார் முதல்வர்

- *தமிழகத்தில் தயாரிக்கப்படும் மின்சார வாகனங்களுக்கு 100 சதவீதம் வரி (ஜிஎஸ்டி) விலக்கு அளிக்கப்படும் என்று தமிழக முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி வெளியிட்ட தமிழ்நாடு மின்சார வாகனக் கொள்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது.*
- *மேலும் மின்சார வாகனங்கள் சார்ந்த உதிரி பாகங்களின் தயாரிப்புக்கு ஊக்கமளிக்கும் வகையில் பல்வேறு சலுகைகள் புதிய கொள்கையில் இடம் பெற்றுள்ளன.*

### கொள்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அம்சங்கள்:

- *தமிழகத்தில் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்படும் மின்சார வாகனங்களுக்கான மநில சரக்கு மற்றும் சேவை வரி 100 சதவீதம் திருப்பி அளிக்கப்படும். இந்தச் சலுகை 2030-ஆம் ஆண்டு வரை நடைமுறையில் இருக்கும்.*
- *மின்சார வாகனங்கள் உற்பத்திக்கான முதலீடுகளுக்கு 15 சதவீதம் வரையிலும் மின்கலம் உற்பத்திக்கான முதலீடுகளுக்கு 20 சதவீதம் வரையிலும் மூலதன மானியம் அளிக்கப்படும். இந்தச் சலுகை 2025-ஆம் ஆண்டு வரை செய்யப்படும் முதலீடுகளுக்குப் பொருந்தும்.*

## சிறுகுறு தொழில் நிறுவனங்களுக்கு முதலீட்டு நிதி

- *தமிழகத்தில் சிறு, குறு, நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கான முதலீட்டு மானியத்தை, 50 லட்சம் ரூபாயாக உயர்த்தி, முதல்வர் அறிவித்துள்ளார்.*
- *தமிழகத்தில், தொழில் துவங்கும், சிறு, குறு, நடுத்தர நிறுவனங்களை ஊக்குவிக்கும் வகையில், முதலீட்டில், 25 சதவீதம் மானியமாக, தமிழக அரசு வழங்குகிறது. இதில், அதிகபட்ச தொகையாக, 30 லட்சம் ரூபாய் வழங்கப்படுகிறது.*
- *இந்த உச்ச வரம்பை, 50 லட்சம் ரூபாயாக உயர்த்தி, 110 விதியின் கீழ், தமிழக முதல்வர், ஜூலை 12ம் தேதி, அறிவிப்பு வெளியிட்டார். இந்த அறிவிப்பு, விரைவில் செயல்பாட்டுக்கு வருகிறது.*

## முதலீட்டை ஈர்க்கும் வகையில் தொழில் வணிகம், முதலீட்டு மேம்பாட்டு அமைப்பு

- *தமிழகத்தில் தொழில் முதலீட்டை ஈர்க்கும் வகையில், சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் வணிகம் மற்றும் முதலீட்டு மேம்பாட்டு அமைப்பின் செயல்பாட்டை முதல்வர் பழனிசாமி தொடங்கி வைத்தார்.*
- *தமிழகத்தின் சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில்களை பன்னாட்டு மையமாக்கவும், வெளிநாட்டு ஒத்துழைப்பைப் பெறவும், தமிழகத்தில் முதலீட்டை ஈர்க்கவும் 'சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் வணிகம் மற்றும் முதலீட்டு மேம்பாட்டு அமைப்பு' உருவாக்கப்படும் என்று கடந்த 2018 ம் ஆண்டு சட்டப்பேரவையில் முதல்வர் அறிவித்தார்.*
- *தமிழகத்தில் சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் பிரிவுகளுக்கு விரைவாகவும், உரிய காலத்தில் அனுமதி வழங்கவும், ஒற்றைச்சாளர முறையை செயல்படுத்துவதற்கான ஒருங்கிணைப்பு முகமை யாகவும் இந்த அமைப்பு விளங்கும்.*

## சர்வதேச சுகாதார - தொழில்நுட்ப மாநாடு

- *சர்வதேச சுகாதார-தொழில்நுட்ப மாநாடு சென்னையில் வரும் 27,28 தேதிகளில் நடைபெற உள்ளது. அதில், வெளிநாடுகள் மற்றும் உள்நாட்டைச் சேர்ந்த 700-க்கும் மேற் பட்ட மருத்துவ நிபுணர்கள் சுகாதாரத் துறை பிரநிதிகள் பங்கேற்கின்றனர். சர்வதேச அளவில் உள்ள மருத்துவத் தொழில் நுட்பங்களையும், புதிய நடைமுறைகளையும் பரஸ்பரம் பகிர்ந்து கொள்வதற்கான வாய்ப்பை இந்த மாநாடு ஏற்படுத்தித் தரும்.*

## 60 ஆண்டு கால வரலாற்றை குறிக்கும் பாரம்பரிய மையம் திறப்பு

- *சென்னை ஐ.ஐ.டி.யின் 60 ஆண்டு கால வளர்ச்சியையும், சாதனைகளையும் விளக்கும் வகையில் சென்னை ஐ.ஐ.டி பாரம்பரிய மையம் திறக்கப்பட்டுள்ளது. இந்த மையத்தில் சென்னை ஐ.ஐ.டியின் வரலாற்றை ஆண்டு வாரியாக குறிப்பிடும்வகையிலானஅரியபுகைப்படங்கள் இடம் பெறச் செய்யப்பட்டுள்ளன.*

## மருத்துவச் சிகிச்சைக்கு விரும்பி வரும் மாநிலங்களில் தமிழகம் முதலிடம்

- *இந்தியாவில் மருத்துவச் சிகிச்சைக்கு விரும்பி வரும் மாநிலங்களில் முதன்மையானதாக தமிழகம் விளங்குகிறது என்று இந்திய தொழில் கூட்டமைப்பின் (சிஐஐ) தமிழகப் பிரிவு மருத்துவ பணிக்குழு ஒருங்கிணைப்பாளர் எஸ்.சந்திரகுமார் தெரிவித்தார். மருத்துவ சுற்றுலாவில் தமிழகத்தைதொடர்ந்து, மகாராஷ்டிரம், தில்லி ஆகிய மாநிலங்கள் உள்ளன என்று அவர் தெரிவித்தார்.*

## என்எஸ்எஸ், என்சிசி போன்று பள்ளி, கல்லூரிகளில் 'ஹார்ட்டி கிளப்'

- *தமிழகம் முழுவதும் அனைத்து அரசு மற்றும் தனியார் பள்ளி, கல்லூரிகளில் செயல்படும் என்எஸ்எஸ், என்சிசி போன்று,* **ஹார்ட்டி கிளப்** *என்ற தோட்டக்கலை குழுக்கள் அமைக்கும் புதிய திட்டத்தை தோட்டக்கலைத்துறையினர் தொடங்கி உள்ளனர்.*

## ரூ.173 கோடியில் மெகா உணவு பூங்கா

- *மத்திய அரசின், பிரதான மந்திரி கிஸான் சம்பதா யோஜனா திட்டத்தில் (Pradhan Mantri Kisan SAMPADA Yojana), சேலம் மாவட்டம், வீரபாண்டி ஒன்றியம், பெரிய சீரகப்பாடியில் , 70 ஏக்கர் பரப்பில்* **மெகா உணவு பூங்கா** *அமைகிறது. மத்திய-மாநில அரசின் நிதி உதவியோடு, தொழில் முனைவோரின் பங்களிப்பும் சேர்த்து, மொத்தம், 173 கோடி ருபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆந்திரா, மஹாராஷ்டிரா, டில்லியை தொடர்ந்து, தமிழகத்தில், வீரபாண்டியில், மெகா உணவு பூங்கா அமைக்கப்படுகிறது.*
  - *மத்திய அரசின் திட்டமான பிரதான் மந்திரி கிசான் சம்பதா யோஜனா (PMK-SAU) திட்டத்தின் கீழ், உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகள் அமைத்திட நிதியுதவி வழங்கப்படுகிறது. 2019-20 ஆம் ஆண்டு வரை செயல்படுத்தப்பட உள்ள இத்திட்டத்தின் கீழ், உணவு பதப்படுத்தும் தொழிற்சாலையின் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது. 2017ஆம் ஆண்டு மே மாதம் தொடங்கப்பட்டது.*
  - SAMPADA - Scheme for Agro marine Processing and Development of Agro Processing Clusters.

EXTRA News

### உலான்பாதரில் புத்தர் சிலை பிரதமர் மோடி, மங்கோலிய அதிபர் கூட்டாக திறந்து வைப்பு

*மங்கோலியாவின் தலைநகர் உலான்பாதரில் புதிதாக நிறுவப்பட்டுள்ள புத்தர் சிலையை அந்நாட்டு அதிபர் கல்த்மாஜின் பதுல்காவும், பிரதமர் நரேந்திர மோடியும் தில்லியில் இருந்தபடி காணொலி வழியாக திறந்து வைத்தனர்.*

- *இந்த இரு நிகழ்வுகளும், இந்தியா-மங்கோலியா இடையேயான ஆன்மிக பந்தத்தின் அடையாள மாகவும், பௌத்த மதத்தின் பாரம்பரியத்தை பகிர்ந்து கொள்வதாகவும் அமைந்துள்ளது என்று பிரதமர் அலுவலகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*
- *மங்கோலியாவின் மிக முக்கியமானதும், மிகப்பெரியதுமான கண்டன் மடாலயம், 19ஆம் நூற்றாண்டின் மத்தியில் கட்டப்பட்டது. கம்யூனிஸ ஆட்சிக் காலத்திலும் இங்கு மடாலயத்தில் ஆன்மீகச் சேவைகள் தொடர்ந்து குறிப்பிடத்தக்கது.*